# இசை மருத்துவம்

மரு. முனைவர் சே. பிரேமா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# இசை மருத்துவம்

மரு. முனைவர் சே. பிரேமா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : ஏ.ஆர்.ஏ. சிவக்குமரன், சிங்கப்பூர்)
வரிசை எண் : 3


## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Icai maruttuvam |
| Author | : | Dr. Prema<br>Professor<br>Department of Siddha Medicine<br>Tamil University, Thanjavur-5 |
| General Editor | : | Dr. T. Mahalakshmi<br>Senior Research Fellow<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 620 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 136 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.45/- (Rupees Forty Five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | Music Therapy |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

இசை மருத்துவம் எனும் இந்நூல் இசைப்பாடல்வழி மருத்துவச் செய்திகள் குறித்த பதிவுகளையும், இசை நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்தப்படுவது குறித்த செய்திகளையும் பதிவு செய்து விளக்குவதாக அமைகிறது.

மிடற்றோசை, கருவிகளோசை எனப் பிரித்து அறிந்து குரலுக்கு நல்லுடல் வேண்டும்; குரல்வளம், குரலைக் காக்கும் வழிமுறைகளின் அவசியம் குறித்தும் பேசப்படுகிறது. ஒலி அலை மருத்துவம், நோய்களும் இசையும், பாடகர்கள் பேச்சாளர்களுக்குச் சில ஆலோசனைகள், இசையின் அறிவியல் ஆய்வு போன்ற இயல்களும் இசைக் கருவிகள் எனும் இயல்கள்வழி இசை, பாடல், குரல், கருவிகள் எனவும் விரிவுற இந்நூலில் விதந்தோதப்படுகின்றது.

தமிழிசையும் சித்த மருத்துவமும், நாட்டுப்புற இசையும் மருத்துவமும், இசையும் அறிவியல் தொடர்பும் என்பதான கருத்துகளைத் தெரிவிக்கும் இந்நூல் பல்வேறு தலைப்புகளில் தந்துள்ள விளக்கங்கள் சுருக்கமாக இருப்பதை எண்ணி வருத்தமுறச் செய்து, கூடுதலாக விளக்கவில்லையே என ஏக்கம் கொள்ளச் செய்கிறது.

சித்தர்கள் செவ்வியல், நாட்டுப்புறவியல் ஆகிய இருதுறை அறிவும் பெற்றிருந்தனர். இருதுறைசார் இசை வடிவங்களிலும் பாடல்கள் புனைந்துள்ளனர். சித்தர்கள் மருத்துவத் துறைப் பாடல்களைப் பாடியதோடு மட்டுமல்லாது மருத்துவத் துறைசார் வல்லுநர்களாயிருந்து பாடல்களை இசையுடன் புனைந்து தந்துள்ளனர் எனும் கருத்தையும், இசை மருத்துவம் என்னும் தலைப்பில் தொடர்புடைய பல கருத்துகளையும் அறிய எடுத்துக்காட்டியுள்ள நூலாசிரியர் பேராசிரியர் முனைவர் சே. பிரேமா அவர்கள் பாராட்டுக்குரியவர். இசைத் துறைக்கும் மருத்துவத் துறைக்கும் உரிய இந்நூல் தமிழுக்குக் கிடைத்த நல்ல நூல் ஆகும்.

தன் பெற்றோர் இராமலிங்கம் அபிராமி பெயரில் இந்நிறுவனத்தில் அறக்கட்டளையை நிறுவிய சிங்கப்பூர்த் தமிழறிஞர் ஏ.ஆர்.ஏ. சிவக்குமரன் அவர்களுக்கு நன்றி. இச்சொற்பொழிவு நாளன்றே இது நூலாகவும் வெளிவருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நிறுவன முன்னாள் இயக்குநரும், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தருமான முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும் என் நன்றி.

இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும், இச்சொற்பொழிவின் எழுத்துருவைப் பதிப்பித்துச் செம்மைசெய்து மெய்ப்புத் திருத்தமும் செய்த இந்நிறுவனப் பதிப்பு மேற்பார்வையாளர் முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், கணிப்பொறியாளர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

## ஆசிரியரைப் பற்றி.....



மருத்துவர் சே. பிரேமா அவர்கள் தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார். இவர் சித்த மருத்துவத் துறையில் பி.ஐ.எம்., எம்.டி., பிஎச்.டி. ஆகிய பட்டங்களைப் பெற்றவர். 22.09.1948இல் பிறந்த இவர், மருத்துவத் துறையிலும் ஆய்வுத் துறையிலும் 31 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். சமூகப்பணி, கல்விப்பணி ஆகியவற்றுக்கான விருதுகளைப் பெற்றவர்.

முதுகலை (தமிழ் இலக்கியம், இசை, சுற்றுச்சூழல் அறிவியல்), ஆய்வியல் நிறைஞர் ஆகியவற்றைப் பயிற்றுவிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றார். இவர் எம்.எஸ்சி., எம்.எஸ்., பி.இ., எம்.ஃபில், பி.எச்டி பயிலும் மாணவர்களுக்கு நெறியாளராக இருந்துவருகின்றார். 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் இவரது ஆய்வு வழிகாட்டல் மூலம் பட்டம் பெற்றுள்ளனர்.

இவர் 18 நூல்கள் எழுதியுள்ளார். மேலும் ஆறு நூல்கள் வெளிவர உள்ளன. 11 ஆய்வுத் திட்டங்களை முடித்துள்ளார். கருத்தரங்கு, பணிப்பட்டறை, கண்காட்சி ஆகியவற்றையும் நடத்தியுள்ளார். 80க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். 60 சிறப்புரைகளையும், 9 தலைமை உரைகளையும் நிகழ்த்திய பெருமைக்குரியவர்.

இவர் தொலைக்காட்சி, வானொலி ஆகிய ஊடகங்களின் நிகழ்ச்சிகளில் பலமுறை உரையாற்றி இருக்கின்றார். பண்டுவ ஆய்வுகள், சித்த மருத்துவ முகாம்கள் பல நிகழ்த்தி, விரிந்த நிலையில் மருத்துவப் பணியைச் செய்து வருகின்றார்.

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | ஆசிரியரைப் பற்றி | |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இசை வரலாறு | 8 |
| 3. | இசை மருத்துவம் | 20 |
| 4. | இசைக் கருவிகள் | 38 |
| 5. | சித்தர் இலக்கியத்தில் இசை | 59 |
| 6. | நாட்டுப்புற இசை | 68 |
| 7. | ஒலிக்குறிப்பும் நோய்க்கணிப்பும் | 91 |
| 8. | இசையும் பஞ்ச பூதக் கூறுகளும் | 99 |
| 9. | சங்கீதமும் சோதிடமும் | 100 |
| 10. | தமிழிசையும் சித்த மருத்துவமும் | 101 |
| 11. | இசையின் அறிவியல் அறிவு | 110 |
| 12. | ஒலி அலை மருத்துவம் | 111 |
| 13. | நோய்களும் இசையும் | 113 |
| 14. | பாடகர்கள், பேச்சாளர்களுக்குச் சில ஆலோசனைகள் | 128 |
| 15. | முடிவுரை | 131 |
| | துணை நூல்கள் | 133 |

# 1. முன்னுரை

மனிதன் தோன்றியது முதல் அவனுடைய எண்ணங்களைச் சைகையினால் பிறருக்கு உணர்த்தி வந்தான். பின்னர் நாளடைவில் நாவை அசைத்து ஒலியினை உண்டாக்கி அதன்மூலம் தன் எண்ணங்களை வெளிப்படுத்தினான். சந்தோஷம், துக்கம் இரண்டையும் பிரித்தறியும் வண்ணம் ஒலியை எழுப்பினான். அதனைக் குறுக்கி நீளமாக்கி எனப் பகுத்தலினால் இசை தோன்றியது.

மனிதன் தோன்றியபோதே நோயும் தோன்றியது. முகபாவத்தினாலும், உடலசைவினாலும், குரலொலியினாலும், தன்னுடைய நோய்த் தன்மையைப் பிறருக்குத் தெரிவித்தான். நோய்த் துன்பத்தை மறக்கவும் குறைக்கவும் தானே பாடியோ, அல்லது பிறரை இசைக்கச் செய்து கேட்டோ வந்தான். இவ்விதம் நோய் தீர்க்க உதவும் இசை, இசை மருத்துவமாக விரிந்துள்ளது.

இசை என்பது செவிவழியாகச் சிந்தைக்குப் புலனாகி உயிர்களுக்கு இன்ப துன்பங்களை விளைவிக்கும் ஒரு கலை. செவிப்புலனுக்குரிய பொருள் நாதம். அது ஓசை இசை ஒலி என முக்கூறாக அமையும். விண்வெளி, காற்று, கடல், மலைச்சாரல், மழை முதலியவற்றின் இயற்கை இயக்கத்தினின்று வெளிப்படும் நாதம் ஓசை எனப்படும். இடி, நில நடுக்கம், பெருவெள்ளம், புயற்காற்று, பறவை, விலங்குகளின் வாயாலும் நடையாலும் விளையும் நாதம் ஒலி எனப்படும். ஓசை, ஒலிகளை ஓரளவைக்கு உட்படுத்தி ஏற்றம், இறக்கம், சமம், நெளிவு சுளிவுகளோடு மக்கள் குரலால் வெளிப்படுத்தும் நாதம் இசை எனப்படும்.

ஓசையும் ஒலியும் இயற்கை. இசை இயற்கையுள் செயற்கை. இவ்வாறு இயற்கையும் செயற்கையுமாக ஓசை ஒலி இசைகளைச் செயற்கையாக எழுப்புமிடத்து அது கலை எனப்படும். ஓசை யாழ் முதலிய நரம்புக் கருவிகளாலும் குழல், கொம்பு முதலிய துளைக்

கருவிகளாலும் ஒலியைத் தோற்பறை, கஞ்சக் கருவி, கை முதலிய தாளக் கருவிகளாலும் இசையை மக்கள் கண்டம் மூக்கு ஆகிய உறுப்புகளாலும் எழுப்புதல் வழக்காகும். இம் மூவகைகளையும் பொதுவாகத் தமிழில் இசை என்றும் வடமொழியில் கீதம் என்றும் கானம் என்றும் கூறுவர்.

ஓசையும் ஒலியும் நிலம் நீர் காற்று நெருப்பு என்னும் பூதக் கூறுகளால் அமைந்து ஆகாய பூதத்தால் வெளிப்படுவனவாகும். உயிர் உடம்புகள் யாவும் பஞ்சபூதக் கூறுகளால் அமைந்தவை. அவற்றுள் நீர் காற்று நெருப்பு என்னும் பூதக் கூறுகளின் செயற்பாட்டமைப்பினை ஐவளி பித்து என்றும் சிலேத்துமம், வாதம், பித்தம் என்றும் கூறுவர். இசை சமன்பாடு திரிந்து அளவு கூடினும் குறையினும் உடம்பில் நோய் அல்லது பிணிகளை உண்டாக்கும்.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று

என்பார் திருவள்ளுவர்.

இனி ஓசை ஒலிகளாகிய நாதக் கூறுகள் அகமும் புறமுமாக உள்ள உடம்புகளை வளப்படுத்தலையும் நோய்ப்படுத்தலையும் மருத்துவ நோக்கிற் காணின் இசை மருந்தாக அமைவதைக் காணலாம்.

வைகறையில் கடற்கரையில் உலாவருதல், மாலையில் பூங்காக்களில் உலாவருதல் புரியுமிடத்துக் கடலலை ஓசைகளையும் தென்றலின் சலசலப்போசைகளையும் செவிமடுத்தனுபவிக்கலாம். மற்றுக் குழந்தைகளின் மழலைப் பேச்சு, சோலை, பூங்காக்களில் சிட்டு, நாகண வாய்ப்புள், கிளி, குயில் முதலிய பறவைகளின் கூக்குரல்களை அனுபவிக்கிறோம். இவை மனத்திற்கு மகிழ்ச்சி தருவதை உணர்கிறோம். பல்வேறு விழாக்களின் வாயிலாக நரம்புக் கருவி, குழற் கருவி, தோற்கருவி, கஞ்சக் கருவிகளின் செயற்கை இசைகளும் மக்களின் வளமான குரலிசையும் அவ்வாறே களிப்பையும் உவகையையும் தந்து இன்புறுத்தலை உணர்கின்றோம்.

சூறாவளி, பேரிடி, பெருமழை, பெருநெருப்பு எழுப்பும் ஓசைகளும், உற்றார் உறவினர் இடுக்கண்ணுற்று வாய் விட்டெழுப்பும் அச்ச ஒலிகளும் பேரிழப்பினால் நேரும் அழுகை ஒலிகளும் மனத்திற்குத் துன்பத்தையும் வெறுப்பையும் தந்து உடம்பை நோய்ப்படுத்துவதையும் உணர்கின்றோம். கொடிய விலங்குகள் எழுப்பும் ஒலி அச்சத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்குவதைக் காண்கின்றோம். சிறு விலங்குகள் எழுப்பும் ஒலியால் அவற்றின் இன்ப துன்பங்களை உணர்கிறோம்.

குழந்தைகளின் அழுகையில் தாய் அதன் நிலையை உணர்கின்றாள். தொட்டிலிற் கிடக்கும் குழந்தை திடீரெனச் சப்தமிட்டு அழுகிறது. கணவன் மனைவியைப் பார்த்துக் 'குழந்தைக்குப் பசிக்கிறது போலும்; எடுத்துப் பால் கொடு' என்கிறான். பசியில்லை; சிறுநீர் கழித்திருக்கும்; ஈரம்பட்டு அழுகிறது என்று கூறிச் சென்று நனைந்த துணியை மாற்றி வேறு துணி விரித்துப் படுக்கையிற் கிடத்துகிறாள். குழந்தை அழுகையை நிறுத்திவிட்டது. சிறிது நேரத்தில் மீண்டும் அதே போல் வீல் என்று கத்தி அழுகிறது. கணவன் பால் கொடுத்துவா என்கிறான். மனைவி பசியில்லை எறும்போ மூட்டைப் பூச்சியோ கடித்திருக்கிறது என்று ஓடிச் சென்று குழந்தையைத் தூக்கித் துணிகளை உதறிவிட்டுப் படுக்கவைக்கிறாள், குழந்தை அமைதியாகிறது. சிறிது நேரத்தில் மீண்டும் அழுகிறது. தாய் பால் குப்பியுடன் சென்று பாலூட்டிப் படுக்கவைக்கிறாள். பால் உண்டபின்னும் அழுகிறது. தாய் தொட்டிலில் இட்டு இசையோடு தாலாட்டுகிறாள். குழந்தை உறங்குகிறது. குழந்தைக்கு நேர்ந்த இடையூறுகளை, அதன் அழுகைக் குரலைக் கொண்டு காரணத்தைத் தாயால்தான் உணரமுடியும். பசியைப் போக்கப் பாலூட்டிய தாய் உறக்கத்தைக் கொள்ளத் தாலாட்டுகிறாள். பால் பசிக்கு மருந்தாகிறது. தாலாட்டு சோர்வுக்கு மருந்தாகிறது.

நோயுற்றவர்கள் முதலுதவி மருந்தாக மேற்கொள்பவை ஓசை ஒலிகளே. சிறு தலைவலி நேரும்போது செச் செச்சோ என வினவுகிறார். சிறுவலி வயிற்று வலி அப்பப்பா என்கிறான். காதுவலி ஐயையைய்யய என்கிறான். பல்வலி குக்குக்கும் என முனவுகிறான். இங்ஙனம் நோய் மூளும்போது நோயுற்றவன் எழுப்பும் ஓசை, ஒலிகள் சாந்தியைத்

தருகின்றன. அதனால் மன அழுத்தமும் துன்பமும் குறைதலை ஒவ்வொருவரும் அறிவர். ஒப்பாரிப் பாட்டு இழவுத் துன்பத்திற்கு மருந்தாகிறது.

வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பது வழக்கு மொழி. எனவே ஓசை ஒலிகள் பிணியைக் குறைக்கவும், தவிர்க்கவும் உதவும் என்பதற்குத் தடையில்லை. வெகுண்டவர் வெடிபடப் பேசினால் வேகங் குறையும். அச்சமுற்றவன் ஆரவாரமாகப் பாடினால் அச்சம் விலகும். வாழ்த்தொலிகள் மகிழ்வையும் வசை ஒலிகள் துன்பத்தையும் தரும் என்பதை யாவரும் அறிவர். மணவீட்டில் முழங்கும் இசை இன்பத்தை மிகுவிக்கும். இழவு வீட்டில் எழும் ஓசை ஒலிகள் துன்பத்தைக் குறைக்கும். திருவிழாக்களில் மேளதாளம் வேட்டு அதிர் வெடிகள் இடம்பெறக் காரணம் அதுவேயாகும்.

போர்க்களத்தில் சங்க நாதமும் கொம்போசைகளும் துடிமுழக்கமும் பாண்டு வாத்தியங்களும் வீரர்களை ஊக்கப்படுத்திக் கிளர்ச்சியெழச் செய்கின்றன. வெற்றிமுரசு உவகைக் களிப்பை உண்டாக்குகிறது. பிரபஞ்சத்தின் பேராற்றலை இறைவனாகக் கூறும் அப்பரடிகள் "ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே" என்கிறார். நம்பியாரூரர் "ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவன் திகழ்கிறான்" என்கிறார். வைதிகச் சமயக் கடவுளர் எல்லாம் யாதானும் ஓர் இசைக் கருவியுடன் தொடர்புடையாராக இருப்பதைக் காண்கின்றோம். இராவணன் இசையினால் கைலாசபதியின் கருணையைப் பெற்றான். அகத்தியர் இராவணனைக் கந்தர்வ இசையால் பிணைத்தார். போரில் சங்கநாதம் செய்து மடிந்தவர்களை எழுப்பினான் கண்ணன் என்னும் புராண இதிகாச உரைகள் இசையின் சிறப்பைப் புலப்படுத்துவனவாகும். இத்தகைய இசை முக்குணங்களாலும் முத்தோடங்களாலும் மக்களிடம் உண்டாகும் அகப்புறப் பிணிகளைப் போக்கும் என்பதில் வியப்பொன்றுமில்லை.

### உயிருடம்பிற்கும் இசைக்கும் உள்ள தொடர்பு

இருவகை உடம்பினையும் இயக்கும் உறுப்புக்கள் பிறப்புறுப்புப் பகுதியான மூலாதாரம். வயிறு, மார்பு தலை இவற்றைப் பத்துவகை

நாடிகளும், வாயுக்களும் இயக்குகின்றன. உடற் பொருள்கள், தசை, எலும்பு, தோல், மச்சை, நரம்பு, குருதி, மூளை முதலியவையாகும். மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களுமாக அமைந்துள்ளன. உடம்பைக் காக்குங் கவசங்கள் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என ஐந்தாக அமைந்துள்ளன. நாடி, நரம்பு, வாயுக்களின் தூண்டலால் மூலாதாரத்தினின்று எழும் ஓசை ஒலிகளாகிய வாக்கு நான்கு நிலைகளில் வெளிப்படும். அவையாவன: சூக்குமமாகிய நுண்ணோசை உந்தியினிடமாகத் தோன்றிப் பைசந்தி என்னும் நினைவோசையாய் நெஞ்சினில் தங்கி மத்திமை என்னும் காற்று ஓசையால் குரல்வளையில் உருக்கொண்டு வைகரி என்னும் செவிப்புலனால், ஓசை வாயுறுப்பால் வெளிப்படும்.

இசை நூலார் ஓசையாகிய நாதம் நீர், நெருப்பு என்னும் இரண்டின் சேர்க்கையால் உருவாகும்; அது ஆகதம், அநாகதம் என இரு வகையாகி நிகழும்; அவற்றுள் ஆகதம் என்பது சுருதி சுரம் முதலிய கமகங்களுடன் வெளிப்பட்டுச் செவிப்புலனால் உணரவரும் என்றும் அநாகதம் என்பது சித்தம் தெளிந்து சிவயோகமாக விளங்கும் ஞானயோகியரால் அகத்தே உணரப்படுவது என்றும் கூறுவர்.

ஆகதம் என்னும் நாதம் ஐந்து நிலைகளில் அமைந்து வெளிப்படும் என்பர். அவை உந்தியில் நிலை கொள்ளும் சூக்குமநிலை, நெஞ்சில் நிலை கொள்ளும் அதிசூக்குமநிலை, கண்டத்தில் நிகழும் வியத்தநிலை, வாயுறுப்புகளில் நிலைகொள்ளும் அவ்வியத்தநிலை என்பனவாகும். மூலாதாரத்திற் கருக்கொண்டு உந்தியினிடமாகத் தோன்றி வெளிப்படும் நாதஇசை இடகலை பிங்கலை நாடிகளில் இயங்கி விலாவலமாக முதுகினிற் பரவிப் பிடரி வழியாக மூளையில் உருப்பெற்று இறங்கி உந்தி நெஞ்சு கண்டங்களினின்றும் இசையாக வெளிப்பட்டுச் செவிக்குப் புலனாகும்.

அஃதாவது ஒலிநயத்தோடு வெளிப்படும் இசை உடம்பிற் பரவிப் பிரமாந்திர உச்சிவரை சென்று மீண்டும் கண்டத்தினின்று குரல் வளை நரம்புகளின் அசைவால் வெளிப்படும். இதனைப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் இசைவாது வென்ற படலத்துள்,

**இடையினோ டேனைப் பிங்கலை யியக்கம்**
**இகந்து மூலந்தொடுத் தியங்கி**
**நடுவுறு தொழிலால் பிரமாந்திராந்தம்**
**நடைபெற இசைக்கும் உள்ளாள்** (பா - 32)

என்கின்றார். எனவே இசை என்பது அகக் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் நான்கையும் இயக்கிப் பருவுடம்பு முழுதும் பரவி வெளிப்படும் செயற்பாடுடையது என்பது விளங்கும். அம்முறையான் இசையானது நோயை ஆக்கவும் நீக்கவும் வல்லதாக அமைகிறது. இன்னாத இசையும் அபசுரங்களும் சில பண்களும் நோயை ஆக்கும் சுருதி ஒழுங்கும் தாள லயமும் கூடிய பண்ணிசைகள் நோயை நீக்கும் என நல்லிசைப் புலவர் கண்டுரைத்தனர்.

சுரங்களின் ஆற்றல்

கருநாடக இசைநூலார் சுரங்களைச் சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என ஏழு கூறாக அமைத்தனர். அவற்றைச் சுருக்கி சரிகமபதநி என்பர். பண்டைத் தமிழ் நூலார் இவற்றை முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பர். இவற்றின் ஓசை ஒலியமைப்பும் ஒற்றுமைக் குரலும் வருமாறு:

ஒப்போசைகள்

சட்ஜம் :- ஸ் - ஊஷ்மானவளியிசை - சங்கு வண்டு மயில்

ரிஷபம் :- ர் - உருட்டொலி உயிர்ப்பொலி - குயில் - கிளி - இடபம்

காந்தாரம் :- க் - கமகந்தருட்தொண்டைஒலி - மயில் - குதிரை - ஆடு

மத்திமம் :- ம் - ஹுங்காரம் மூக்கொலி - யானை - கொக்கு

பஞ்சமம் :- ப் - மூடித்திறக்கும் உதட்டொலி - புரவி குயில் தவளை - மயில்

தைவதம் :- த் - தடைசெய்யும் தாள ஒலி - அன்னம் - பசு - குதிரை

நிஷாதம் :- ந் - நிரவல் செய்யும் மூக்கொலி - காடை ஆடு யானை.

ஏழுசுரங்களும் துருவம் மட்டியம் முதலிய எழுவகைத் தாள

ஒலிகளுக்கு ஏற்ப மெலிவு சமம் வலிவு என்னும் அளவைகளோடு வெளிப்படுமிடத்து நாடி நரம்புகளையும் தசவாயுக்களையும் தாக்கும். ஆதலால் வாதபித்த சிலேத்துமங்கள் திரிபுற்று நோய் ஆக்கத்தையும் நீக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. ஏழு சுரங்களும் 22 சுருதி பேதங்களை எய்துமிடத்து அவற்றவற்றிற் கேற்ப மனநிலை திரிகின்றது. அழுக்காறு அவா, வெகுளி, முதலிய குணங்கள் நிலைமாறுகின்றன. அம்முறையில் இசை உடம்பினால் மாறுதலைச் செய்வதால் இசை மருந்தாகின்றது.

சுரங்களின் அளவாலும் பேதங்களாலும் பண்கள், இராகங்கள் நூற்றுக் கணக்காக விரிகின்றன. பண்டைய இசை நூலார் பண்களை 103 ஆக வகுத்தனர். பின்னர் மேளகர்த்தா இராகங்கள் 72 என்றும் அவற்றினின்றும் பன்னூறு இராகங்கள் பிறக்கும் என்றும் வகுத்தனர்.

# 2. இசை வரலாறு

தமிழ்மொழியானது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தே இயல், இசை, நாடகம் என்று மூன்று வகையாக இருந்தது. பரிபாடலுக்கு இசை வகுத்தவர்களில் ஒருவர் மருத்துவர் நல்லச்சுதனார் ஆவார். இசைத் தமிழானது, இயற்தமிழை அடிப்படையாகக் கொண்டதாகும். ஏழிசை என்பன ஆ,ஈ,ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு உயிர் எழுத்துகள். பின்னர், சரிகமபதநிச என்ற ஏழு குறியீடுகளாக ஆயின. பழம் இசையை நடை, வாரம், கூடை, திரள் என்று 4 வகைகளில் பாடுவார்கள். முதலில் கூறப்பட்ட நடை என்பது இரண்டு எழுத்துக்கள், வாரத்துக்கு 4 எழுத்துக்கள், திரளுக்கு 8 எழுத்துக்கள், கூடைக்கு 16 எழுத்துக்களும் இருக்கும். இசைக் கணக்கு இல்லாதது தேசி இசை என்றும், பழமையான இசை மார்க்க இசை என்றும் அழைக்கப்பட்டது. "இயற்தமிழின் முக்கியப் பாக்கள், சங்கீதம் கலந்தபின், "பண்" என்றழைக்கப்பட்டன. பண் என்பது இராகம், சுரம் என்பவற்றின் பொதுப்பெயர்."

முத்தமிழ் பற்றி "முத்தமிழால் குறுமுனி அனுக்கிரகம் இருந்ததனால்; முடித்தாண்டே". இதில் அகத்தியர் முத்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படைத்த வரலாறு உள்ளது. அகத்தியர் பொதிகையின் கண் இருந்து, இராவணனைக் கந்தருவத்தால் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை, விலக்கி" என்று நச்சினார்க்கினியர் உரையில் வருகின்றது. இதே கருத்து திருக்கைலாய ஞான உலா, தக்கயாகப்பரணி, கோணசயிலமாலை, திருவெங்கையுலா, தஞ்சைவாணன்கோவை ஆகிய நூல்களிலும் கூறப்பட்டுள்ளது.

அகத்தியர் சித்தமருத்துவத்தில் தலையாய ஒருவர். இவரது பெயரிலேயே அதிகமான சித்த மருத்துவ நூல்கள் உள்ளன. இதே அகத்தியர், இசையுடன் தொடர்புள்ளவராகக் காட்டப்படுவதற்கு நச்சினார்க்கினியர் உரையே சிறந்த சான்றாகும்.

திருமூலரின் வரலாறு திருவாவடுதுறையில் நாடகமாக நடிக்கப்பட்டது. இதை இராசராசனின் 9ஆம் ஆண்டுக் கல்வெட்டில் காணமுடிகிறது. "புரட்டாசி, பூரட்டாதி நாளில் திருமூலர் நாயனார் நாடகம், ஆரியக்கூத்து நடத்தப்பட்டது. இது இக்கோவிலின் கர்ப்பக்கிரக மேற்குப் புறச் சுவரில் உள்ளது."

இசைத் தமிழுக்கு அடிப்படையான இயல் தமிழ் நூல்களைப் பல சித்த மருத்துவர்கள் பதிப்பித்துள்ளார்கள். கருணானந்த சுவாமிகள் அல்லி அரசாணி மாலை, புலேந்திரன் தூது, மதுரை வீரன் கதைப் பாடல், ஆறுமுக சாமிகள் காத்தவராயன் கதையையும் பதிப்பித்துள்ளார்கள். மதுரை இராமசாமிக்கோனார் அவர்கள் அரிச்சந்திர புராணத்தை நாடகமாக நடிக்க ஏற்றபடி பதிப்புச் செய்துள்ளார்கள்.

இசைக்கு விலங்குகளும் மயங்குகின்றன. இனிய இசையில் "அசுணமா" என்ற விலங்கு மயங்கி இருக்கும்போது, பறைபோன்ற கருவியால் பேரொலியை எழுப்புவார்கள். அவ்வொலியைத் தாங்காத விலங்கு, உயிரை இழக்கும். இவ்வாறான வேட்டையாடுதல் இருந்ததாகத் தமிழிலக்கியங்கள் கூறுகின்றன.

13ஆம் நூற்றாண்டு நூலான "சங்கீத ரத்னாகரம்" , பேரி என்ற இசைக் கருவியைப் பற்றி எடுத்துரைக்கிறது. 65 செ.மீ. நீளமுள்ள இக்கருவி செம்பாலானது; இரு முகங்கள் கொண்டது ஒவ்வொன்றும் 25 செ.மீ குறுக்களவு கொண்டவை. ஒரு பக்கம் கையாலும், மறுபக்கம் கம்பாலும் அடிக்கப்படும். இதில் பலவகைகள் உண்டு. இரணபேரி என்பது போரில் முழங்கப்படும். ஆயர் நடனங்களுக்கானது அனந்தபேரி. சித்தர்கள் குறிப்பிடும் இசைக் கருவிகளில் "பேரி" யும் ஒன்றாகும்.

### தமிழிசையும் சித்தர்களும்

தமிழிசைக்கும் சித்தர்களுக்கும் நீண்ட நெடுங்காலமாகவே தொடர்புள்ளது. சித்தர்களின் இலக்கியங்களில் இசை வரலாறு கூறப்பட்டுள்ளது. இவ்வுடலானது ஏழு உடற் கட்டுகளான இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, என்பு, தோல், மூளை என்பவற்றால் ஆனது. இசையும் ஏழு வகைப் பண்களால் எழுப்பப்படுவதாகும். எனவே உடலும், இசையும் ஒன்றெனலாம். தென்னக இசையும், கூத்தும் சிவனால் தோற்றுவிக்கப்பட்டவை. 18 கணங்களில், கந்தர்வர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள் ஆகியோர் இசை வல்லார் ஆவர். இதன் முன்னோடிகளில் ஒருவர் நாரதர். இவர் "மகதி" என்னும் வீணையுடன் பாடி, மூவுலகையும் வலம் வரக்கூடியவர் என்பதாகப் புராணங்கள் கூறும். இவருடன், "தும்புரு" வையும் சேர்த்துத் தும்புரு, நாரதர் என இருவராகவும் குறிப்பிடுவார்கள்.

சித்த மருத்துவத்தின் தோற்றமானது சிவபெருமானின் வழியாகக் கூறப்படுகின்றது. சிவன், உமைக்குச் சொல்ல, உமை நந்திக்குச் சொன்னவாறு எனச் சித்தர்களின் வரலாறு கூறப்படுகின்றது. சிற்ப ஆகம சாத்திரங்களில், சிவ மூர்த்தங்களில் ஒருவரே நடராசர் என உள்ளது. எனவே, சிவனே நடராசர். சிவன், தாண்டவம் என்னும் கூத்தை ஆடினார். இதனை, பதஞ்சலி முனிவரும், புலிக்கால் முனிவரும் கண்டு மகிழ்ந்தனர். பிரபஞ்சத்தின் இயக்கமே, நடராசனின் கூத்தாகும். எனவே, இத்தத்துவத்தை உணர்ந்த, சித்தர்கள், நடராசனின் உருவத்தைப் பொன் சிலையாக வார்த்து வணங்கினார்கள். எனவேதான் நடராசரின் பொன் சிலையைச் சித்தர்கள் வடித்து, வழிபட்டதாகப் போகர் 700, போகர் 7000, கொங்கணரின் வாதகாவியம் 3000 என்பன எடுத்துரைக்கின்றன. இச்சிலையானது, சோழ மன்னனுக்காகச் செய்யப்பட்டது. "பதஞ்சலி" புலிக்கால் முனிவர்களின் காலம் கி.மு. 150 எனலாம். மிகத் தொன்மையான வழிபாடாக, நடராசர் வழிபாடு உள்ளது. 18 சித்தர்களில் ஒருவராகப் பதஞ்சலி முனிவர் உள்ளார். பதஞ்சலி முனிவர் யோக நெறியை அறிந்து பரப்பியவர்.

சித்தமருத்துவத்தின் முதல் சித்தராக, அகத்தியர் கூறப்பட்டுள்ளார். இவரது, "பாடல்களின் எண்ணிக்கையானது 65000

ஆகும்." சித்த மருத்துவத்தினைச் சிவன், அகத்தியருக்கு அருளியதாகவும், சுப்பிரமணியர் அருளியதாகவும் தமிழிலக்கியங்களில் வருகின்றது. அகத்தியரின் அகத்தியத்தில் முத்தமிழின் இலக்கணங்களும் இருந்துள்ளன. இதைப் பஞ்ச மரபு என்னும் நூலின் வழி அறியலாம். அகத்தியன் சொன்ன அருந்தமிழ் தன்னால், கொடுத்தவை நூற்றியெட்டுத் தாளங்கள் நூற்றெட்டுத் தாளம் கூறும் முதல் நூல் அகத்தியம். சொன்னான் இனித் தாளவிதியொரு நூற்றெட்டு, தொல்புவிக்கே என்றுள்ள வரிகள் அகத்தியருடன் இசைக்குள்ள தொடர்பைக் குறிக்கும். அகத்தியரைப் போலவே சித்த மருத்துவத்திற்கும், இசைக்கும் நந்தியானவர் பொதுவாக உள்ளார். நந்தி செய்த நூல்களில் ஒன்று "கைத்தாளம்" என்பதாகும். சிவனின் தாண்டவத்திற்கு நந்தி, மத்தளம் வாசிக்கின்றார். நந்திதேவரை இசைக்கும் சித்த மருத்துவத்திற்கும் முதல்வராகக் கொள்ளலாம். சித்தர்கள் நந்தி மரபு என்றும் மூலன் மரபு என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள். இதில் நந்தி மரபு என்பது நந்தியைப் பின் பற்றியவர் ஆகலாம். நந்தியின் பொருட்டுச் சிவபெருமான் அகோரமூர்த்தி-திருவெண்காட்டில், மருத்துவ அரக்கனை அழித்ததாகப் புராணம் கூறுகின்றது.

நந்தியை அடுத்து, தும்புருவைப் பற்றிய செய்திகள் சித்த மருத்துவத்தில் வருகின்றன. போகர் 7000 என்ற நூல் போகர் தும்புருவைச் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றதாகக் கூறுகின்றது. கோனான மண்டபத்தில் சமாதியுண்டு, யானைமலைக் கோமானாம், தும்புரு ரிசியார் தாமும் பாடல் 188இல் யானை மலையின் புகழ் கூறப்படுகின்றது. இதில் தும்புருவைப் பற்றிய செய்தியுள்ளது. தும்புரு வடமேற்கு இசை மரபுடன் தொடர்புள்ளவர். இவரை யானை மலையுடன் தொடர்பு படுத்திக் கூறுவது சித்தர்கள் கூறிய தும்புரு உடன் மாறுபட்டவர் என அறியலாம்.

கிம்புருடர்களைப் பற்றியும் கின்னரர்கள், கந்தர்வர்களைப் பற்றியும் சித்தர் இலக்கியங்களில் வருகின்றது. இன்றைய திபெத் நாடே, கிம்புரு நாடாகும். "கிம்புருடருக்குக் கிருபர் உரைத்ததாம்" என்று தேரன் தன் மகாக்கரிசலில் குறிப்பிடுவார். கிம்புருடர்களான,

இசைவல்லாருக்கு, "கிருபர் என்பவர் விளக்கியபடி" என்று பொருள் கொள்ளலாம். இந்தக் கிருபர் யார் என்பதை எண்ண வேண்டியுள்ளது. உரையில், கிம்புருடர் என்பதற்குப் பதிலாக, கந்தர்வர்கள் என்று பொருள் கூறப்பட்டுள்ளதும், ஆய்வுக்குரியவை. கிம்புருடர்களுடன், கருட, காந்தருவர்களையும் சேர்த்து ஒரு பாடல் "திரைப்புடனே கருட, காந்தருவரோடும், தீர்க்கமுடன், கிம்புருடர், விஞ்சையோடும்" என்று வருகின்றது.

சிவனின் இசைக்கருவிகளில் ஒன்று டமரகம் என்ற உடுக்கு. இப்பெயரைக் கொண்டவர் டமரகச் சித்தர். இவர் 300 ஆண்டுகள் வாழ்ந்தவர் என்று போகர் குறிப்பிடுகின்றார். போகர் 7000 இல் இவரது காலம் குறிப்பிடப்படுகிறது. "காணவே, செகசால டமரகந்தான், காசினியில் அதீத வித்தை செய்து சித்து" என்கிறார்.

சிவனின் உடுக்கையிலிருந்து ஒலி பிறந்ததாகப் புராணங்கள் கூறும். சிவனின் உடுக்கையின் பெயர் டமரகம் எனப்படும். சிவனின் இசைக் கருவிகள் உடுக்கை, கல்லரடம், கல்லலகு, கொடுகொட்டி, தகுணிச்சம், வீணை, யாழ், முழவு, மொந்தை என்பனவாகும். இவற்றில் வீணை, உடுக்கை, முழவு தவிர ஏனையவை இன்று இன்னதென்று கண்டறியப்படவில்லை. சிவனின் பாடல் என்று வகைப்படுத்திய சித்தர் பாடல் உள்ளது. கீதம் சிவகீதம் என்றும், கிருபையுடன் வெவ்வேறாய்ப் பிரித்துக் காட்டி, வாதமென்று சாவதுவே, நிசம்தான் என்றும் பாடினார் சாத்திரத்தைப் பாடினாரே. வாதம் என்பது காற்று என்றும், இரசவாதம் என்றும் கொள்ளலாம். பாடல் என்றால் இன்பம் தருவதாக அமைய வேண்டும். இப்பாட்டு சிவனைக் குறித்தது என்று வகைப்படுத்தினார்கள். எனவே, இசையைப் பற்றிய சித்தரின் கருத்தை இதன்வழி அறியலாம்.

உளநோயைக் குறிப்பது "உக்ரதிருஷ்டி" என்பார்கள். கண் நோவு உள்ளவன்போலப் பார்த்தல், மருந்து அருந்தல் என்பன "கருணாதிருஷ்டி". அகத்தியர் இசை பற்றிய கருத்துகளைக் கூறுகின்றார். "மத்திமம், காந்தாரம், பஞ்சமம் என்பன பிதுர்கள். மற்றவை ரிசிகள் ஆகும்." நாகத் துளையில் 4 ஆவது துளை கும்பமுனிக்கானது.

மிகப் பழங்காலந்தொட்டே இசையை நோய் தீர்க்கப் பயன்படுத்தினார்கள். "அதிஇராசேந்திரன் கொடிய நோய்வாய்ப்பட்டுத் துன்புற்றான். அவன் உடல் நலம் பெறும் பொருட்டுக் கோவிலில் தினந்தோறும் தேவாரம் ஓதப்பட்டது."

இதனால் மன்னர்கள் உடல் நலம் பெற இசை கோவிலில் ஓதப்பட்டதை அறியலாம். தஞ்சைப் பெரிய கோவில் சுரகரேசுர சுவாமிக்குப் பூசை நடத்தினார்கள். கி.பி.1810இல் "ரெசிடெண்ட் பிளாக்பர்ன்" உடல் நலம் கெட்டபோது 48 நாள் ஒரு மண்டலம் பூசை நடந்தது. அம்மை நோய் கண்டபோது சீதளா தேவி மந்திரத்தை ஓதுதல் அக்கால மரபு. 13 ஆம் நூற்றாண்டில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஒரு கல்வெட்டு தெரிவிக்கும் செய்தி: "பிருதிகங்கன் என்ற கூத்தாடி இறக்க, சில பாடகிகளை அவனுடன் உயிரோடு புதைக்கின்றார்கள். இவர்களின் தீய ஆவிகள் கெடுதல் செய்யாமலிருக்க (சந்தர்மம்) அறக்கொடை அளிக்கப்படுகிறது. "தில்லை விடங்கன் மாரிமுத்துப் புலவரின் பிள்ளைகளிலொருவருக்கு மனநோய், தீர இவர் புலியூர் வெண்பா பாடினார். நோய் நீங்கியது. இதுபோல முத்துத்தாண்டவர் என்ற இசைப்புலவரைப் பாம்பு தீண்டியது. பாம்பின் நஞ்சு நீங்க, அருமருந்தொரு தனி மருந்து அம்பலத்தே என்ற பாடலைப் பாடினார். நஞ்சு விலகியது. இவர் விறலிவிடு தூது, நொண்டி நாடகம் என்பன படைத்தவர். அக்பரின் அரசவையிலுள்ள இசை அறிஞர் தான்சேன் "தீபக்" என்ற இராகத்தைப் பாடி விளக்குகளை ஏற்றியதாக வரலாறு உள்ளது.

அண்மைக்காலத்தில் வாழ்ந்தவர் நாகசுரக்கலைஞர் நடேசபிள்ளை. இவருக்கு "இராசபிளவை" என்ற கட்டி வந்தது. இவர் வைத்தியம் விடங்களை நீக்கும் மந்திரம் இவற்றில் வல்லவர். காலையில் நாடி பார்த்து, உடல் நிலைக்கு ஏற்ப உணவு செய்யச் சொல்லல் இவர் வழக்கம். இசை மருத்துவம் பற்றிய சிறு சிறு செய்திகள் வரலாற்றில் வருகின்றன. இவற்றைத் தொகுத்து நூலாக்கம் செய்தல் நலம் பயக்கும் எனலாம்.

சாந்துப் புலவர் பெரிய மருதுவின் பிளவை நோய் தீர்த்தல் பொருட்டு முருகப் பெருமானிடம் வேண்டியதாகக் கருதப்படும் காடன் செட்டியாரை 402 ஆம் பாடலில் புகழ்கின்றார்.

சிவகங்கைச் சரித்திரக் கும்மி பாடியவர் முத்துசாமி. இந்நூல் 4341 அடிகளைக் கொண்டது. இதில்,

**வாட்டமுடன் பச்சைவாதம் குறுக்கிட்டு**
**மருதேந்திரன் வளரி தவறிடவே**
**அசைத்தார். அறிவிழந்தார் மருது**

அங்கிள்சாமி என்பவருக்குப் பெருநோய் பிடித்திருந்தது. அவர் கல்யாணி இராகத்தைப் பாடிவர, நோய் விலகியது. எனவே இசையால் கொடிய நோய்களையும் நீக்கலாம். இதைப் பல எடுத்துக்காட்டுகளால் அறியலாம். அழகிய சிற்றம்பலக் கவிராயர் (கி.பி.17ஆம் நூற்றாண்டு), வயிற்றுவலி தீரக் குன்றக்குடி குமரன் மீது 2893 பாடல்கள் உள்ள நூலைப் பாடினார்.

கீவளூர் அட்சயலிங்கசாமி கோவிலில் தாண்டவக் கோலத்தில் சிவபெருமான், அகத்தியர், பிரும்மா, திருமால், இலக்குமி, சரசுவதி ஆகியோர் உள்ளனர்.

மருத்துவர் ஆப்ரகாம் பண்டிதர் போன்றே, தஞ்சாவூர் அரண்மனையில் இரு மருத்துவர்கள் சங்கர்ராவ், விஸ்வநாதராவ் ஆவார். இவர்கள் இசையறிவு கொண்டவர்கள். சங்கர்ராவ் சுர பத்த சுகமாய்ப் பாடுவார். விஸ்வநாதர் வாசிப்பார்.

தேரையர் தன்நூலில் இசையைக் குறிப்பிடுகின்றார். தேரையரின் ஊர், கூரம் என்பதாகும். இவ்வூர் வடஆற்காடு மாவட்டத்திலுள்ளது. வடஆற்காடு மாவட்டம் கூத்துக்குப் பெயர் பெற்றது. புரிசையில் பல்லாண்டுக் காலமாகக் கூத்துக் கலைஞர்கள் தொடர்ந்து தொழில் நடத்தி வருகின்றார்கள். மேலும் பல்லவர்கள் காலத்தில் கூத்து நடத்த பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டன. மகாபாரதம் படிக்க மண்டபங்கள் நிறுவப்பட்டன. மகாபாரதக் கூத்து பத்து நாள் தொடர்ந்து பல கிராமங்களில் நடைபெற்று வரும். எனவே, இதன் தாக்கம் தேரையரையும் ஈர்த்திருக்கக் கூடும்.

அகத்தியரின் மாணவராக, நாரதமுனிவர் சித்தர் இலக்கியத்தில் கூறப்படுகின்றார். இவரைத் தேரன் என்னும் சித்தர் நூலான மகாக் கரிசலில் போற்றுகின்றார். "இலக்கியச் சௌமிய சாகரம்" என்ற நூலை

அகத்தியர் இயற்றியுள்ளார். தேரையர், மகாக்கரிசலில் ஓரிடத்தில் நாரதரைப் பற்றிக் குறிப்பிடுவார். "சந்தசுரப் பாடக, தபோ அரசுகாக்க" என்று. இதன் பொருள் 7 சுரங்களையும், பாடி, தவத்தையுடைய இசையரசரான நாரதர் என்பதாகும்.

முன்னுரையில் "நாரதர்" அகத்தியரின் மாணவராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்றே, தேரன்யமக வெண்பாவில் நாரத முனிவரைப் போற்றுகின்றார்.

**வீணைமுனி, ஆவாரை, வேர்ப்பட்டை, நீர்ப்பட்டை,**
**வீணைமுனி, ஆவாரை அழுக்கு, வீணைமுனி**

என்று வீணையுடன் உள்ள நாரதரைக் கூறுவார். எனவே இசைக்கு முன்னோடியான நாரதர், சித்த மருத்துவத்திற்கும் தொண்டாற்றியுள்ளார். இவரைப் பற்றிய் வரலாறு தேரையர், அகத்தியர், போகர் தவிர, வேறு சித்தர்களின் நூல்களில் காணப்படாதது வியப்பாக உள்ளது. வட இந்திய இசையை நாரதர் மரபு என்று குறிப்பது வழக்கம். ஆயின் இக்கருத்துக்கு முரண்பட்டுச் சித்தர் நூல்கள் உள்ளன.

சித்தர்களில் ஒருவரான அகத்தியர் முத்தமிழையும் அறிந்தவர். இவர் யாழிசையால் இசை வல்லுனனாகிய இராவணனை வென்றார். சிகண்டி என்பவர் அகத்தியரின் மாணவர். இசை நுணுக்கம் என்ற இசை நூலை இயற்றியவர். இசையாசிரியர்களில் ஒருவரான தும்புருவைப் போகர் கண்டு வணங்கியதாகப் போகர் 7000 என்ற சித்த மருத்துவ நூலில் கூறப்பட்டுள்ளது. பாம்பாட்டிச் சித்தரின் வரலாறு இசையுடன் இணைத்துப் பேசப்பட்டுள்ளது. ஓர் அரசன் இறந்துவிட அவனின் மனைவி, மக்கள் அழுகின்றனர். இதைக் கண்டு மனம் பொறாத பாம்பாட்டிச் சித்தர் அரசனின் உடலில் புகுந்து கொள்ளுகின்றார். சில நாட்களுக்குப் பின்னர்ப் பாம்பாட்டிச் சித்தரின் மாணவர்கள் அரசவைக்குப் பாம்பாட்டி வேடத்தில் வந்து அரசவையில் பாடுகின்றார்கள். அரசர் வடிவிலிருக்கும் சித்தரை உணர்த்தி மீள அழைத்துச் செல்லுகின்றார்கள். **சித்தர்கள் அங்கையிலே வீணை கொண்டு, கரத்தால் மீட்டி, தாட்சியில்லா அறுபத்து நாலு ராகம், சமர்த்தியில் வளனு ராகம் பாடிப் பாடி** என்றும் **பாடியதோர் கைவீணை**

**எட்டு ராகம் பதித்த லெட்டிலடக்கி, மறுதந்தி மீட்டி நாலு மறைப் பதித்த லெட்டு இராகத்தொடே** உள்ளங்கையில் வீணையை வைத்து, மீட்டி 64 வகையான இராகவகைகளைப் பாடுகின்றார்கள். இக்காலத்தில் இராக வகைகள் 108 எனப்படும். எட்டு வகையான இராகங்களை, எட்டுவகையில் அடக்கிப் பாடுவதான முறை கூறப்பட்டுள்ளது. மேலும் வீணையை வாசித்தலும் இதில் குறிப்பிடப்படுகிறது. நட்டுவனார் தாளமிடுதலைப் பற்றியும் கூறுகின்றார். "நாடகம் முடிந்ததப்பா, நட்டுவன் தாளமிட்டான்". ஏழு இசையுடனுள்ள நிகழ்ச்சிகளையும் சித்தர்கள் விளக்குகின்றார்கள்.

உசுமான் குழுவினரிடம் அளிக்கப்பட்ட சித்த மருத்துவச் சுவடிகளில், 1. சிருட்டி மனோ சங்கீதம், நடன காண்டம் 350, நாடக நிகண்டு 200 என்பனவற்றின் பெயர்களைப் பட்டியல் மூலம் அறியலாம். இச்சுவடிகள் பற்றிய செய்திகள், வேறு பட்டியலில் இல்லை. இச்சுவடிகளில் இசையுடன் சித்த மருத்துவம் பற்றிய கருத்துகள் இடம் பெற்றிருத்தல் கூடும். முத்தமிழ் பற்றியவை, நந்தீசர் நிகண்டு 300 இல் வருகின்றன. இசைக்கும், நாரதருக்கும் உள்ள தொடர்பைப் போலவே, சித்த மருத்துவத்திற்கும், நாரதருக்கும் தொடர்புள்ளது. போகர் 7000 என்ற நூலில், **உதவியாக நாரதரும் வந்துநின்று என்றும், குறித்துமே தான்நாரதரும் கூறிப்போனார், குறைவந்து, நெஞ்சுதனில், கோபமாச்சே** பிடகன் என்ற சொல், சித்த மருத்துவனையும், இசைவல்லாரையும் குறிப்பதாகும். யூகி தன் "வைத்திய சிந்தாமணியில்" "நன்மையாம், ஆயுளின் வேதத்தின் பாகம், நாடியே, மருந்து செய்வோன் பிடகனாமே" என்றும், "பிடகனாம் குருதன்னையே நினைத்துக் கொண்டு, பேரான பிணி தீர்க்க உறுதியுள்ளோன்" என்றும் கூறியுள்ளார். இசையைப் பற்றிய செய்தியை, நல்ல சகுனங்கள் என்ற தலைப்பில் தந்துள்ளார். ஆமேதான், வாத்தியங்கள் சாமரங்கள், ........... காமேதான், சோபன சங்கீத வார்த்தைக் காதினால் கேட்பதுவும் உத்தமந்தான். நாரதருக்கும், சித்த மருத்துவத்திற்குமுள்ள தொடர்பை, போகரின் சனனசாகரமும் கூறுகின்றது. நாரதரின் பெயரில் மலை உள்ளதாக "உத்தமனே, நாரத மாமலையில் கேளை" என்றும், கேளப்பா, நாரத

மாமலையில் தானும், நாளப்பா, நாரதரும் அதிலே வாழ்வார்." பரதநூல் எழுதிய ஆசிரியர்கள் 1) நாரதர், 2) தும்புரு, 3) இராவணன், 4) கோரட்சகன், 5) அகத்தியர், 6) அனுமன் என்று "மகாபாரத சூடாமணி" கூறுகின்றது. நந்தீசர், 4000 சொற்களை உடைய இசை நூலைச் செய்தார் என்றும் மேலும் விவரிக்கின்றது.

கருவூர்ச் சித்தர் தன்னுடைய "திருவிடைக்கழி" பதிகத்தில், பசு கன்றைத் தேடி வருவதை, கவியானது தன்னைத் தேடி வருவதற்கு ஒப்பிடுகின்றார்.

**கவி பாடுகின்ற கருவூர் சித்தரைக் கண்டு**
**கன்றின் முன்னதாய் வருதல் போல**

என்பார். குமர குருபர சுவாமிகள் தன் சரணத்தில் தமிழ் மாலையில், சுரகுரு, அகத்தியர், கருவூர்ச் சித்தர் ஆகியோருக்குக் கவி பாடும் ஆற்றலை அருளினார் என்பார்.

**தூறவே துந்துபியின் முழக்கத் தோடே**
**துடியான நந்தியைத் தான் கண்டு கேளு**

நந்திதேவர் இயற்றிய நூல்களில் கூறப்பட்ட கருத்துகள் அமைய இசைக்கருவிகள் இயக்கப்படுகின்றன. துந்துபி, உடுக்கையின் ஒலியலைகள் அருவியின் பூந்தூறலைப்போல முழக்கமுடன் இருக்கும். இங்கு இசைக்கருவிகள் அருவியின் ஒலிக்கு உவமையாகச் சொல்லப்பட்டன. பத்துப்பாட்டில் ஒன்றான மலைபடுகடாமில் அருவியின் ஓசை கூறப்பட்டுள்ளது.

சங்கு, திருக்கோயில்களில் பயன்படுத்துப்பட்டது. பெருவுடையார் கோவிலில் சங்கூதுவாரின் பெயர், "தயிலன்" என்பதாகக் கல்வெட்டில் உள்ளது.

அரசு ஊதியம் பெறும் பணியாளர் இசைப்பாடகர்களாக இருந்துள்ளனர். இது கி.பி. 767ஆம் ஆண்டு திருவல்லம் கல்வெட்டில் உள்ளது.

காலையில் விழித்தவுடன் அரண்மனையில் நடன நிகழ்ச்சியை இரகுநாத நாயக்கர் பார்த்தல். அடுத்த இசை

நிகழ்ச்சியாகக் குறவஞ்சி, சிவலீலா பற்றிய பாடல்களைக் கேட்பது வழக்கம்.

அரவு தீண்டுதல்

தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை அதிகாலையில் வந்து கொண்டிருந்த போது, இவரை வழியில் ஒரு நச்சுப் பாம்பு தீண்டிவிட்டது. இவர் தனியே எப்போதும் போவது வழக்கமாதலால், அருகில் துணைக்கு யாருமில்லை. ஆனால் இதன் பொருட்டு இவர் சிறிதும் பதறவில்லை. 'அம்பலத்தில் ஆடுகின்ற பெருமானே மருந்து' என மனத்தில் உறுதி கொண்டு, ஒரு கீர்த்தனம் பாடினார்.

(இராகம் : காம்போதி – ரூபகதாளம்).

பல்லவி

அருமருந்தொரு தனிமருந்திது
அம்பலத்தே கண்டேனே (அரு)

அநுபல்லவி

திருமருந்துடன் பாடும் மருந்து
தில்லையம்பலத் தாடும் மருந்து
இருவினைகள் அறுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கும் மருந்து (அரு)

சரணங்கள்

1. கொன்றை தும்பை யணிந்த மருந்து
கோவை மீதிற் படர்ந்த மருந்து
மன்றுளேநின் றாடும் மருந்து
மாணிக்க வாசகர் கண்ட மருந்து (அரு)

2. இந்திர ரானவர் வானவர் போற்றும்
இருடி கள்தமக் கெட்டா மருந்து
தானே முளைத்துத் தழைத்த மருந்து (அரு)

3. திரித்தித் தித்தியென் றாடும் மருந்து
தேவாதி மூவர்கள் காணா மருந்து
கருத்தைத் திருத்தி இருத்தும் மருந்து
காலனைக் காலால் உதைத்த மருந்து (அரு)

என்று பாடத் தொடங்கியவுடனேயே விடம் இறங்கத் தொடங்கியது. பாடல் முடிந்தவுடன் அவருக்கு எல்லா விடமும் நீங்கி எந்த அயர்ச்சியுமில்லாது முன்போலவே வலிமையோடு நடக்கலானார். இக் கீர்த்தனம் இன்று நடன சபைகளில் பாடப்பெறுகின்ற அரிய கீர்த்தனம். முத்துத் தாண்டவருக்குப் பிற்காலத்தில் இது நாடெங்கும் மிகவும் பிரசித்தமாய் வழங்கிற்று. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வடலூர் இராமலிங்க சுவாமிகள் இறைவனே மருந்து என்ற கருத்தைப் புள்ளிருக்கு வேளூரில் இறைவன் திருநாமமாகிய வைத்தியநாதன் என்ற பெயரோடு பொருத்தி 'நல்ல மருந்தின் மருந்து – சுகம் நல்கும் வைத்தியநாத மருந்து' என்ற பல்லவியுடைய அரிய கீர்த்தனமாகப் பாடியிருப்பதை இசை இரசிகர்கள் எல்லோரும் அறிவார்கள்.

பண்ணாசிரியர்கள்

பரிபாடலில் நல்லச்சுதனாரும் மருத்துவர் நல்லச்சுதனாரும் பத்துப் பாடல்களுக்கு இசை அமைத்துள்ளனர். அடைச் சொல்லான மருத்துவர் என்பதை விடுத்தால் இருவரும் ஒருவரே எனச் சொல்ல வாய்ப்புண்டு. நல்லச்சுதனார் ஒரு பாடல் பாடியுள்ளார். அவரே பண்ணமைத்த பாடல்கள் இருக்க இவருடைய பாடலுக்குக் கண்ணகனார் என்பவர் இசையமைத்துள்ளார்.

இறக்கும் தறுவாயில் இருந்த மன்னர் ஒருவர் "கொடைவள மஞ்சரி" என்ற நூலின் பாடல்களைக் கேட்டதால் மீண்டும் உயிரோடு எழுந்து பாடிய புலவருக்கு யானை, பொன் பரிசாக அளித்தார். இம்மன்னன் மழவராய மன்னர்களில் ஒருவரான யுவரங்க மழவராயராக இருக்கலாம்.

# 3. இசை மருத்துவம்

ஐம்பெரும் பூதங்களின் கலப்பாகத் திகழும் இம்மண்ணுலகம். பூதக் கூறுகளின் கலப்பாலும் பரிணாமத்தாலும் பல்வேறு காட்சிப் பொருள் உருவப் பொருள் அருவப் பொருள் கருத்துப் பொருள்களாகத் திகழ்கின்றது.

அப்பொருள் உயிர் உணர்வுள்ளவை; உயிர் இல்லாதவை என இருவகையாக அமைந்துள்ளன. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் இவற்றின் கலப்பால் உண்டாகியுள்ள – மலை, கடல், காடு அவற்றின் கூறுகள் உயிர் இல்லாதவை. இவைகளேயன்றி விண்வெளியில் இயங்கும் கதிரவன் முதலாகிய கோள்கள், அசுவினி முதலாய விண்மீன் கூட்டங்கள் இவை உயிரில்லாதவை. எனினும் இயங்குபவை. மற்றைய இயற்கைப் பொருள்களைப் பாதிப்பவை.

மற்றும் உயிருள்ளவை நிலத்திலும் நீரிலும் பிறந்து தோன்றும். மரஞ்செடி கொடிகள், புழு, பூச்சி முதலிய சிற்றுயிரினங்கள் நிலத்தில் தோன்றும். விலங்கு, பறவை, மக்கள், ஊர்வனவும், நீரில் தோன்றும். மீன்வகை, ஆமை, நண்டு, நத்தையும் நீரிலும் நிலத்திலும் தோன்றும். பாம்பு முதலாய ஊர்வன எல்லாம் உயிருள்ள உடம்புடையவை. உயிர் என்பது உணர்வுடையது. ஆதலின் அதனை அறிவு என்று கூறுவர். உயிரினங்களை ஆய்ந்துணர்ந்த அறிஞர் பெருமக்கள் அதனை ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் வரையாக ஆறுவகையாகப் பிரிப்பர். இப்பிரிவுகள் அவ்வுயிரினங்களில் அமைந்துள்ள பொறி – புலன்கள் அடிப்படையில் அமைந்தனவாகும்.

உயிரும் உடலும் அமைந்த உடம்பு என்பது புற உடம்பு அக உடம்பு எனச் செயல்படும். பருவுடம்பு அல்லது தூல உடம்பு ஐந்து

பொறிகளைக் கொண்டது. அக உடம்பு அல்லது நுண்ணுடம்பு அல்லது சூக்கும உடம்பு எனப்படும். அக உடம்பின் பொறி மனம் என்பதாகும். அதன் புலனுணர்வு அறிதல், எண்ணுதல், சிந்தித்தல், முடிவு செய்தல் என நான்கு வகையாக அமையும். இவற்றை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பர் - இவற்றை ஆறாவதறிவு எனப் பொதுவாகக் கூறுவர். மனமாகிய ஆறாவது பொறி - ஏனைய மெய்வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளோடு நெருங்கிய தொடர்புடையது.

ஓரறிவு உயிர் முதல் ஐயறிவுவரை உள்ள உயிரினங்கள் தத்தம் ஐம்பொறி ஆற்றலுக்கு ஏற்ப மன உணர்வைப் பெறும். மக்களுயிர் மட்டும் ஐம்பொறிகட்கு அப்பால் அனுப்புதற்கு அரிய நிலையில் உணர்வுகளையும் அறிவையும் முயற்சிக்கு ஏற்பப் பெறும்.

இற்றைக்கு வியத்தகு நிலையில் கண்டு பிடிக்கப் பெற்று மக்கள் பயன்பெற்று வரும் விஞ்ஞான விளைபொருள்யாவும் ஆறாவதறிவின் சிந்தனை ஆற்றலால் நிலவுவன ஆகும். விஞ்ஞானப் பொருள்களை வெள்ளி, தங்கம், செம்பு, ஈயம், இரும்பு முதலான உலோகங்களை - மூலிகைப் பாடாண வகைகளால் பக்குவம் செய்து கொள்பவையான் இரசம், வெள்ளி, தங்கம், செம்பு, ஈயம், இரும்பு முதலிய உலோகங்களை, மூலிகை பாடாண வகைகளால் பக்குவம் செய்து இரசாயனமுறையிலும் வேதியியல் முறையிலும் சுண்ணம் பற்பம் செந்தூரம் முதலியனவாகச் செய்து கொள்பவை. பல்வகை வித்துக்களால் - மூலிகைகளால் செய்யப்பெறும் தைலங்கள் - முத்துப் பவழம் நவமணிகள் வேதியல் முறையில் செய்து கொள்ளும் பற்பம் - சுண்ணம் பல்வகைக்கு நீர் (கஷாயம்), லேகியம், களிம்பு முதலியவை.

மருத்துவம் : நாடித்துடிப்பு, இதயத்துடிப்பு, குருதி ஓட்டம், குருதி வெப்பம் உடற்சூடு - குளிர்ச்சி, கண்பார்வை, குரலின் வலிவு மெலிவு உடம்பில் ஏற்படும் சுளிப்பு வலிப்பு உறக்கநிலை முதலியவற்றைத் தக்க கருவி கொண்டு தெளிதல். மலம், சிறுநீர், எச்சில், குருதி இவற்றைச் சோதித்தறிதல், அவற்றின் குறைகளை நீக்கும் மருந்துகளைத் தேர்ந்தெடுத்துப் பொழுதுகளைக் கணக்கிட்டு உண்ணச் செய்தல், தக்க உணவுகளைப் பக்குவப்படுத்திப் பொழுதறிந்து உண்ணச் செய்தல்.

காக்க வேண்டிய பத்திய முறைகளைக் கண்டுபிடிக்கச் செய்தல் மருத்துவமாகும்.

நோய்கள் – நீக்கும் மருந்துகள்

நோய் தூல உடம்புநோய் சூக்கும உடம்பு நோய் என இருதிறப்படும். அகநோய், புற நோய் என இரு வகைப்படும்.

தூல உடம்பு நோய்: எலும்பு, நரம்பு, கல்லீரல், மண்ணீரல், நெஞ்சாங்குலை, இரைப்பை, பெருங்குடல், சிறுகுடல், மூலம் பற்றியும் தலையின் கபாலம், கண், காது, மூக்கு, தொண்டை பல் பற்றியும், தசை, தோல் பற்றியும் குரல்வளை பற்றி வருவனவும் வைரஸ், தொற்று காரணமாக வருவனவுமாய்த் தோல் பற்றி வருவன, தடிப்பு அரிப்பு, சிரங்கு பல்வகை மேகம், குட்டம் முதலியவையாகும் – பசி, தாகம் உறக்கம் இயற்கைப் பிணிகள்.

அக உடம்பு நோய்: அழுக்காறு வெகுளி பேரவா காமம், மனத்திரிபு (பைத்தியம்) பலம், கவலை, துக்கம் முதலியவை.

அக உடம்பின் நோய் நீக்க மருந்துகள் : நகைச்சுவை உணர்வு, பெருமித உணர்வு, நடுவுநிலை 'மனம்' வாய்மை, ஒழுக்கம், சான்றோர் அறிவுரை அறிவுரைகளைக் கேட்டல், அருளாளர் நூல்களைப் பயிலுதல், இறையுணர்வை வளர்த்துக் கொள்ளல், தியானம், ஒத்த நண்பர்களோடு உயர்ந்த எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளுதல் – மனைவி மக்கள் உறவினரிடத்து அன்பு செய்தல், எல்லா உயிர்களையும் மதித்தல், அருள் செய்தல், இல்லாதார்க்கு உதவுதல், ஈகை, ஒப்புரவுப் பேணுதல். நறுமணங்களை நுகர்தல், ஒத்த உணவுகளைச் சுவைத்துண்ணல் – கண்களால் நுகர்பவை நல்ல காட்சிகள் ஓவியங்கள் நடனம், நாடகம், தந்திரக் காட்சிகள் – பல்வகை விளையாட்டுக்களைக் காணுதல், திருவிழாக்களைக் கண்டு களித்தல், மயிலின் ஆடல், பறவைகள் பறக்கும் அழகு, மாடு, குதிரை முதலிய விலங்குகளின் நாட்டியம் முதலியவை.

செவிப்புலனால் நுகர்பவை: மக்களின் மழலைமொழி, இளஞ்சிறார்களின் உரையாடல், மனைவி மக்களின் அன்பு மொழிகள், நண்பர்களின் அன்பு மொழிகள், நல்லோர் சான்றோரின் பாராட்டு

மொழிகள், புகழ் மொழிகள் - குயில் முதலாய பறவைகளின் இனிய கூவல்கள், அணிலின் அழைப்பு, புறாவின் கொழிப்பு, வண்டுகளின் ரீங்காரம், ஆடு மாடு, குதிரை, மான்களின் கனைப்பு, மகளிர் மேகலை, சதங்கை வளையல்களின் சலசலப்பு. மற்றவர்கள் வாய்விட்டுச் சிரிக்கும் சிரிப்பு முதலியன. இவையாவும், இயற்கை ஓசை ஒலிகள்.

செயற்கை ஓசை இசை ஒலிகள்: மக்கள் தம்கண்டத்திலிருந்து அளவை முறையால் பகிர்ந்து மூக்கோசையின் துணையோடு நாவாலும் வாயிதழ்களாலும் எழுப்பும் பண்ணும் தாளமும் அமைந்த குரலிசை - சீழ்க்கை ஒலிகள், மக்கள், நரம்புக் கருவிகள், குழற் கருவிகள் தோற் கருவிகளாலும் இசை ஓசை தாள ஓசைகளும். சங்கின் முழக்கமும், கஞ்சக் கருவிகளின் தாள ஓசைகளும் இவை போல்வன பிறவுமாம்.

இவ்விரு ஓசைகளும் சிறப்பாக இசை ஒலிகளும் அக உடம்பாகிய உள்ளத்திற்கும் சிந்தனைக்கும் இன்பம் பயத்தலோடு புறவுடம்பாகிய தூல உடம்பின் எளிய நோய்களையும் அயர்வு சோர்வு களைப்பு முதலியவற்றையும் போக்கி நலம் செய்வனவாகும்.

ஐம்புல வாயிலாகவும் மனப்புலனாலும் பெறும் இன்பம் துன்பம் களிப்பு ஆனந்தமாய பயன்களுள் செவிப் புலனால் பெறுவனவே அதிகமாகும். உயர்வாகும். இதனைப் பின்வரும் இசை பற்றிய விளக்கத்தால் நன்குணரலாம்.

மக்களின் பருவுடலமைப்பு தலை - மார்பும் வயிறுமாகிய உடல், கை கால்கள் இவற்றில் அமைந்துள்ள பொறிகள் மெய், வாய் கண் மூக்குச் செவி, இவற்றுள் வாய், கண், மூக்கு, செவி தலையிலும், மெய் உடம்பு முழுதினும் அமைந்துள்ள பொறிகளாகும். தலையின் உச்சிப் பகுதியில் பிடரிக்குமேல் நெற்றிவரை மூளை மூன்று கோளமாக அமைந்துள்ளது. காது, மூக்கு, தொண்டையின், உள்ளுறுப்புக்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. உடம்பின் இயற்கைப் பிணி, வாதம், பித்தம், சிலேட்டுமம், உடம்பு, ரசம், குருதி, தசை, கொழுப்பு, எலும்பு, மச்சை, சுக்கிலம் என்னும் ஏழு தாதுக்களால் அமைந்துள்ளது.

வயிறு இரைப்பை, சிறுநீர்ப்பை, பெருங்குடல், சிறுகுடல், மூலாதாரம் என்னும் உறுப்புகளையுடையது. நெஞ்சு, ஈரல் குலையைக்

கொண்டுள்ளது. ஈரல் குலையின் இயக்கத்தால், வயிறு விளைவிக்கும் குருதியை உடம்பு முழுதும் பரவிப் படரச் செய்வது நுரையீரலும், ஈரலும். குருதி உடல் முழுதும் சென்றியங்கச் செய்வன பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்னும் பத்து வாயுக்களாகும். இவை சிறுநீர் மலம் வியர்வை முதலியவை வெளிப்படுத்தச் செயற்படுவன. உடம்பின் குருதியோட்ட நிலையை உணர்த்துவன இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை சங்கினி, குரு என்றும் பத்து நாடிகளாகும். வாயுக்களிலும் நாடிகளிலும் கலந்திருக்கும் தத்துவம், நாதமாகும். நாதம் என்பது ஓசை, ஒலிகளின், அருவுருவமாகும். இங்ஙனம் ஐம்பூதக் கூறுகள் முதல் தொண்ணூற்றாறு தத்துவங்களைக் கொண்டியங்குவது உயிரமைந்த உடல்.

தத்துவங்களுள் முதன்மையானவை ஆறு ஆதாரங்களாகும். அவை மூலாதாரம் முதல் ஆஞ்ஞை ஈறாகக் கூறப்படும். குதம் அல்லது பிறப்புறுப்புக்களின் பகுதியில் அமைந்துள்ளது மூலாதாரம். உந்திச் சுழிக்கும் மூலத்திற்கும் இடையே உள்ளது சுவாதிட்டானம். உந்தியைச் சுற்றியமைந்துள்ளது மணிபூரகம். நெஞ்சாங் குலைப் பகுதியில் அமைந்திருப்பது அநாகதம். கழுத்துப் பகுதியில் அமைந்திருப்பது விசுத்தி. நெற்றியில் அமைந்திருப்பது ஆஞ்ஞை - நெற்றிக்கும் மேற்பகுதி சிதாகாசம் எனப்படும். இவற்றின் ஆற்றலால்தான் உயிருடம்பு உணர்வோடு இயங்குகின்றது. உடம்பு 72000 நரம்புகளையுடையது. அவற்றுள் செவிமட்டும் 8000 நரம்புகளை உடையது. அடுத்து அதிக நரம்புகளைக் கொண்ட உறுப்பு குரல்வளையமைந்த தொண்டை. மக்கள் விலங்குகள் பறவைகள் ஆகியவற்றிற் கெல்லாம் கழுத்தும் குரல்வளையும் அமைந்திருப்பினும் மக்களின் குரல்வளை அற்புதமானது. பேராற்றல் உடையது. மக்களுக்குப் பேசும் ஆற்றலைத் தருவது. இசையைப் பாகுபடுத்தி வெளிப்படுத்துவது மக்களின் குரல்வளை.

பிற உயிரினங்கள் தத்தம் குரல்வளையிலிருந்து குறிப்பிடப் படத்தக்க நிலையில்தான் குரல் எழுப்பும். மக்கள் தாம் வேண்டியாங்குக்

குரல் எழுப்பும் ஆற்றலுடையவர். விலங்குகள் எழுப்பும் குரலோசை ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அடையாளப் பெயர்கள் உண்டு.

**விலங்குகள் எழுப்பும் குரலோசைகள் ... பறவைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சிங்கம் | - | கர்ச்சித்தல் | ... | குயில், கோழி | - | கூவுதல் |
| யானை | - | பிளிறுதல் | ... | ஆந்தை | - | அலறுதல் |
| காட்டெருமை | - | கதறல் | ... | கோட்டான் | - | இசைத்தல் |
| குதிரை | - | கனைத்தல் | ... | மயில் | - | அகவுதல் |
| கழுதை | - | கத்தல் | ... | காகம் | - | கரைதல் |
| புலி, கரடி | - | உறுமுதல் | ... | கிளி | - | கிளத்தல் |
| நாய் | - | குரைத்தல் | ... | கொக்கு | - | கொக்கரித்தல் |
| நரி | - | ஊளையிடுதல் | ... | நாரை | - | நரலுதல் |
| ஆடு, மாடு | - | விளித்தல் | ... | நீர்ப்பறவைகள் | - | ஒலித்தல் |
| பாம்பு | - | சீறுதல் | ... | குருவிகள் | - | சீழ்த்தல் |
| அணில் | - | கூப்பிடுதல் | ... | நாகணவாய்ப்புள் | - | பேசுதல் |
| எலி | - | கீச்சிடுதல் | ... | சில பறவைகள் | - | சிணுங்குதல் |
| பூனை | - | நைதல் | ... | புறா | - | கொழித்தல் |
| | | | ... | சாத்தான் குருவி | - | கீசுதல் |

மக்கள் எழுப்பும் குரல்வளை ஒலிகள்

முக்கல், முனகல், அழுதல், சிரித்தல், நகைத்தல், சிணுங்குதல், சீறல், தேம்பல், பொருமல், உறுமல், கனைத்தல்.

இயற்கை அநுகரண ஓசைகள் : மழை ஓசை, புயலோசை, கானக ஓசை, கடல் ஒலி, நீரருவி ஒலி, இடி ஓசை ஒலி, சுடர் நெருப்பொலி, ஆற்றுநீர் சலசலப்போசை, பாலைவன ஓசை.

இவற்றின் ஓசை ஒலிகளைக் கூர்ந்து கேட்டு இசை நோக்குடைய இசை வல்லார் நவரசங்களையும் ஸ்தாயி பாவங்களையும் ஏற்ற இறக்கங்களையும் கமகங்களையும் உருட்டல் புரட்டல்களையும் அச்ச நிலைகளையும் உணர்ந்து பண்ணும் இசையும் வகுத்து வழங்கியுள்ளனர்.

பாரதியார் குயில் பாட்டில் ஓசை ஒலிகளின் தோற்றங்களை விரித்துப் பாடியுள்ளார்.

நாதம், நாதம், நாதத்திற்கோர் நலிவுண்டாயின்
சேதம் சேதம் சேதம் தாளம், தாளம், தாளம்,
தாளத்திற்கோர் தடையுண்டாயின் கூளம் கூளம்
கூளம்.

பண்ணே பண்ணே பண்ணே பண்ணிற்கேயோர்
பழுதுண்டாயின் மண்ணே மண்ணே மண்ணே

காப்பறவை கலகலானும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்று நீரோடை அருவி ஒலியினிலும்
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத்திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகிப் பாடுவதிலூறிடுந்தேன் வாரியிலும்
ஏற்ற நீர்ப் பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்கும்
கொற்றொடியார் குக்கூவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணமிடிப்பவர் தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக் கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணை முழவாம் மனிதர்
வாயினிலும் கையினிலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம்
நன்கொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன்
ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே
கானமுதம் படைத்தகாட்சி மிக விந்தையடா
காட்டு நெடுவானம் கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை
இல்லையடா.

மகாகவி பாரதியார் இசை எங்கெங்கே பிறந்து விளங்குகின்றது எனச் சுருக்கமாக ஒரு பட்டியல் தந்து இறுதியில் இறைவனை நோக்கி,

**ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே**
**கானாமுதம் படைத்த காட்சிமிக விந்தையடா**
**காட்டுநெ டுவானம் கடலெல்லாம் விந்தை எனின்**
**பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா**

என்கிறார்.

அண்ட கோளங்களால் அமைந்துள்ள இப்பிரபஞ்சம் ஓம் என்னும் ஓசையினின்றும் தோன்றியதாக வேதங்கள் கூறுகின்றன. விவிலியமும் ஆதியில் சப்தம் இருந்ததும் அதன் வழித் தோன்றியவையே யாவையும் என்கிறது. ஞானக் கொழுந்தாகிய விநாயகனைப் பிரணவத்தின் புற வடிவாகக் கூறுகிறார் திருமூலர்.

ஓசையை உயிரினங்கள் (உலகம்) உய்யச் செம்மைச் செய்து அமைத்துக் கொண்ட பொருளே "இசை". இறைவனோடு ஒன்றுபடுவது யோகம். அதனை மூன்று கோணங்களில் அடையலாம் என்பது மெய்ஞ்ஞானிகள் முடிபு. அவை ஞானயோகம், தியான யோகம், கானயோகம் என்பவை மற்றை இரண்டினும் எளிதானவை. அதனால் தான் இறையடியார்கள் அருளாளர் யாவரும் இசைவாயிலாக இறைவனைக் காண்கின்றனர்.

"இன்னிசை ஏழும் இசைந்த செந்தமிழ் ஈசன்" என்கிறார் சேக்கிழார்.

**பண்ணும் பதம்ஏழும் பல ஓசைத் தமிழவையும்**
**உண்ணின்ற தோர்சுவையும் உறுதானத் தொலி பலவும்**
**மண்ணும் புனலுயிரும் வரும்காற்றும் சுடர்மூன்றும்**
**விண்ணும் முழுதானான்**

என்கிறார் திருஞான சம்பந்தர்.

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்கிறார் திருநாவுக்கரசர்.

"ஏழிசையாய் இசைப் பயனாய் என்னுடைய தோழனுமாய்" என்கிறார் சுந்தரர்.

"முன்னல் யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே" என்கிறார் – நம்மாழ்வார்.

இங்ஙனம் அருளாளர் – தெய்வப் புலவோர் யாவரும் இறைவனை இசை உருவாகக் கண்டு போற்றுகின்றனர்.

வைதிக சமயக் கடவுளர் யாவரும் இசையோடு, இசைக் கருவிகளோடு இணைத்தே விளங்குவதைக் காணலாம். வேயுறு தோளிபங்கன் மிக நல்ல வீணை தடவிப் பாடுகிறார். திருச்செவியில் கானம் பாடும் கந்தர்வர்களையே குழையாக அணிந்துள்ளார். கண்ணபிரான் வேணுகோபாலனாகவே விளங்குகிறான். கலைமகள் கையில் வீணை – நாரதர் கையில் வீணை– நந்தி முழங்குவது குடமுழா– இங்ஙனம் தெய்வம் யாவும் இசையோடு இணைந்தே உள்ளன.

புராணங்களும் இதிகாசங்களும் காப்பியங்களும் இசையின் சிறப்பு, பெருமை, பயன்களை எடுத்தியம்புகின்றன. இசைக்கு ஓரறிவுயிர் முதல் தெய்வங்கள் ஈறாக யாவும் ஆட்பட்டுத் திகழ்தலைக் காணலாம்.

விறகாளாய் வந்து ஈசன் ஏமநாதனை மயக்கிப்பாடும் பாடலின் இசையின் அற்புதத்தைப் பரஞ்சோதி முனிவர்,

**தருக்களும் சலியா முந்நீர்ச் சலதியும் கலியா நீண்ட**
**பொருப்பிழி அருவிக் காலும் நதிகளும் புரண்டு துள்ளா**
**அருட்கடல் விளைத்தக்க இன்னிசை அமுதம்மாந்தி**
**மருட்கெட அறிவன் தீட்டி வைத்த சித்திரமே ஒத்த**

என்கிறார்.

சங்க இலக்கியங்களில் யானை இசைக்கு மயங்கியது முதலாய பல நிகழ்ச்சிகள் உள்ளன. ஞானசம்பந்தரும் அப்பரும் இறந்தவர்களை இசைபாடி எழுப்பினர். முதலையுண்ட பாலனைச் சுந்தரர் உயிரோடு அழைத்தார். இங்ஙனம் இசையின் சிறப்பினை விரிப்பின் எல்லையின்றி விரியும். மட்டக்களப்பு நீர்நிலைகளில் உள்ள மீன்கள் யாழிசை கேட்டு மேல்வந்தன என்கிறார் விபுலானந்தர். யாழிசைக்கு யானை மயங்கும். குழலிசைக்கு ஆனிரைகள் மயங்கும். நல்லிசைக்கு

அசுணமா மயங்கும். மகுடியிசைக்கு நாகம் மயங்கும். கின்னரி இசைக்குப் பறவைகள் மயங்கும். இங்ஙனம் ஏழிசைக்கு மயங்காத உயிரினங்களே இல்லை என்பார் நூலோர்.

மக்கள் புரியும் மங்கல விழாக்கள், தெய்வத்திற்கு எடுக்கும் விழாக்கள் யாவற்றிலும் இசை இடம்பெறும். இசையில்லாத விழா இல்லை. பொதுவாகப் பலர் சேர்ந்து நிகழ்த்தும் நன் நிகழ்ச்சிகள் யாவும் இசையோடு தொடங்கி இசையோடு முடிவதைக் காணலாம். இறைவணக்கத்தில் தொடங்கித் தேசீய கீதத்துடன் நிறைவுறும். மக்கள் பிறப்பு தாலாட்டில் தொடங்கி இறப்பில் ஒப்பாரியில் முடிவது மரபாக அமைந்துள்ளது. விழாக்களில் பெரும்பாலும் கருவி இசைகளே முதலிடம் பெறும். காரணம் இசை நுணுக்கங்களை எல்லாம் கருவியில் வெளிப்படுத்தலாம். போர் நிகழ்ச்சியில் முதலிடம் கருவியிசை கொண்டு வெற்றி முழக்கம் கருவியிசையால் நிகழும்.

மருந்தென்பது நோயினை நீக்கிச் சமநிலைப் படுத்தும் கருவி. நோய் என்பது துன்பத்தைத் தருவது. மருந்து என்பது துன்பத்தை நீக்குவதும் அதற்குமேல் இன்பத்தைத் தருவதுமாகும்.

அம்முறையில் மருந்துகள் உடம்பிற்கேற்ப ஆக்கப் பெறும். பருவுடம்பாகித் தூல உடம்பிற்கு மருந்து பருப்பொருளாக அமையும். நுண்ணுடம்பாகிய சூக்கும உடம்பிற்கு மருந்து நுண் பொருளாக அமையும். புற உடம்பின் நோய் அகவுடம்பையும் பாதிக்கும். அவ்வாறே அகவுடம்பின் நோயாகிய மனநோய் புறவுடம்பையும் பாதிக்கும். புற உடம்பின் நோய்க்குரிய மருந்து மூலிகை முதலியவற்றால் ஆக்கம் பெறும். அகவுடம்பு நோய்க்குரிய மருந்து - வாய் மொழி - ஏழிசை நற்காட்சிகளால் ஆக்கம் பெறும்; இவற்றுள் தலையாயது இசை. இராகங்களைப் பண்ணோடும் பாட்டோடும் சுரங்களோடும் இசைக்கும் போது அது இசை எனப்படும்.

எழுத்தொலிகள் தனித்தும் இணைத்தும் பண்ணோடு தழுவாமல் ஏற்றம் இறக்கம் கனைப்பு ஊங்காரங்களால் இசைக்கும் போது மந்திரம் எனப்படும். மந்திரங்களை ஜபமாகப் புறச் செவிக்கு இசைப்பது தந்திரம். புறத்தே வெளிப்படாமல் அகத்தே

உருக்கொண்டியல்வது அஜபா மந்திரம். மந்திரங்களால் விஷங்களையும், மூளைக் கலக்கத்தையும் வெப்ப சுரத்தையும் நரம்பு வலிகளையும் காமாலை முதலிய நோய்களையும் நீக்கலாம் என்பது அத்துறை வல்லுநரின் கருத்தாகும். அம்மந்திரமுறை பெரும்பாலும் வழக்கிழந்து வருகிறது.

இனி, குரலிசை நோய் தீர்க்கும் மருந்தாக ஆக்கம் பெறுவதைக் காண்போம். நோய்கள் பெரும்பான்மையும் நரம்பு எலும்பு தசை மூளை பற்றியே வரும். நோய்களைப் புலப்படுத்துவன தச வாயுக்களும் தச நாடிகளுமாம்.

இனி இசையானது கண்டத்தினின்றும் வெளிப்படுவது எனினும் நாதவளியால் உருப்பெறும் இசை முதற்கண் மூலாதாரத்தில் தோன்றி, சுவாதிட்டானம் முதலிய ஆதாரங்களில் சஞ்சரித்து, மூளையின் ஆணையால் வெளிப்படுவதாகும். மூலாதாரத்தில் உருக்கொள்ளும் நாதம் உடலில் உள்ள எல்லா நரம்புகளையும் கிளரச் செய்து வெளிப்படுவதாகும். அம்முறையில் இசை உடல் உறுப்பு யாவற்றோடும் தொடர்புடையதாய் அவற்றைப் பாதிக்கும் ஆற்றலுடையதாக அமைந்தள்ளது.

இருபத்திரெண்டு சுருதிகளின் அடிப்படையில் பன்னிரண்டு சுரத்தானங்களில் அமைந்து சுரங்கள் உருப்பெற்றுப் பன்னூறு இராகங்களாக வெளிப்படுகின்றன. சுரங்களின் எண்ணிக்கை முன்பின் அமைப்பு ஆரோகண அவரோகணங்களாகிய ஏற்ற இறக்க நிலை சுவை மெய்ப்பாடு உள்ளத்தின் குறிக்கோள் முதலியவை காரணமாகப் பாடுவோர்க்கும் செவிமடுப்போர்க்கும் மன அமைதியெய்யும், சிந்தனைக் கிளர்ச்சியையும் உண்டாக்கிக் களிப்பையும் ஆனந்தத்தையும் பரவசத்தையும் உண்டாக்குகின்றன.

இங்ஙனம் அகமலர்ச்சியையும் முகமலர்ச்சியையும் தருவதனால் மக்களின் உள்ளுடம்பாகிய அந்தகக்கரணங்களைப் பற்றிய நோய்கள் நீங்குகின்றன. அக உடம்பின் கிளர்ச்சி ஆனந்தம் காரணமாகப் புறஉடம்பு நோய்களுள் பல குணமாகின்றன.

ஒவ்வா உணவு, பொருந்தா உடலுறவு, தொற்றுக்கிருமி, பரம்பரை காரணமாக வரும் நோய்களைத் தவிர நல்லிசை

பலநோய்களை ஓசைஒலி ஒழுங்கு காரணமாகக் குணமாக்குகின்றது. தலைவலி, வயிற்றுவலி, நரம்புவலி, மயக்கம், களைப்பு, சோர்வு உறக்கமின்மை முதலிய நோய்களை இசை நீக்கிவிடும்.

நல்ல குரல் வளம் இசை இலக்கண அறிவு இராகங்களின் அமைப்பு முதலியவற்றை உடையவர்கள்தான் பாட வேண்டும் என்பதில்லை. எல்லோரும் பாடலாம். தேவாரத் திருவாசகங்கள், திருவாய்மொழி அருட்பாடல்கள், பாரதி, பாரதிதாசன் பாடல்கள், விரும்பும் பிறருடைய பாடல்களை நன்கு மனப்பாடம் செய்து தாமே பாடலாம். தனிமையில் வாய்விட்டுப் பாடலாம். நண்பர்களோடு கலந்து பஜனை பாடலாம். வாய்விட்டுக் கூச்சமின்றிப் பாடினால் இசையின் பயனைப் பெறலாம். பிறர் பாடக் கேட்டும் அனுபவிக்கலாம். கருவிகள் வாயிலாகவும் கேட்டுப் பயன் பெறலாம். தாமே பாடுவதனால் முழுப்பயன் கிட்டும். பிறர் பாடக் கேட்குமிடத்துச் செம்பாதிப் பலன் கிட்டும். வாத்தியங்களை நாமே இசைத்துப் பிறர் இசைக்கக் கேட்டும் மகிழலாம்.

## இசை

உயிரினங்களும் கருவிகளும் எழுப்பும் நாத ஓசையை ஆன்மாவோடு இயைத்து இன்பமுறச் செய்வது இசை எனலாம். நூலோர் சுருதி சுரம் இராகம், தாளம், கருத்து, அலங்காரம், சுவை (மெய்ப்பாடு) ஆகியவற்றைத் தன்னுள் அடக்கி இருப்பது இசை என்பார். இயற்பாட்டுடன் நிறத்தை இசைத்தலான் இசை எனப்பட்டது என்பார் சிலப்பதிகார உரையாசிரியர்.

### ஓசையின் நாதம்

இசை நூலார் காற்று நெருப்பு, இரண்டின் கலப்பே நாதம் என்பர். நாதம் ஆகதம் – அநாகதம் என இருவகைப்படும் என்பர்.

1. ஆகதம் :- சுருதி சுரம் முதலிய கமகங்களுடன் வெளிப்பட்டுச் செவிப்புலனாவது. யாவராலும் உணரப்படுவது.

2. அநாகதம் : சித்தந் தெளிந்து சிவமாக விளங்கும் ஞானயோகியரால் அகத்தே உணரப்படுவது தனக்கே புலனாவது. இதனை ஐந்து கூறாகப் பகுத்துரைப்பர். அவை வருமாறு :

1. சூக்குமம் (நுண்மை) உந்தியில் நிலை கொள்வது.
2. அதிசூக்குமம் : இதயத்தானத்து நிலை கொள்வது.
3. வியக்தம் (தெளிவு) கண்டத்தில் நிலை கொள்வது.
4. அவ்வியக்தம் : வாயுறுப்புக்களில் நிலை கொள்வது.
5. கிருத்ரவம் : பிறர் செவிக்குப் புலனாக வெளிப்படுவது.

தமிழிசை நூலார் விளக்கம்

இசை என்பது மூலாதாரத்தில் உருக்கொண்ட நாத ஓசை உந்தியில் ஊன்றி, உடம்பாவிப் பிடரி வழியாகத் தலை உச்சியில் கால்கொண்டு பின்கழுத்து வாயிலாக இறங்கி மிடற்றினும் மிடறின் மேற்பகுதியாகிய மூக்குத் துளையினுள் நுழைந்ததுபின் கீழிறங்கி நெஞ்சினுள் தங்கிக் குரல்வளை வாயிலாக வாயுறுப்புக்களாகிய நா அண்ணம், இதழ், பல் ஆகியவற்றால் உருப்பெற்று நெஞ்சுவழி உந்த வல்லோசையாகவும் மூக்குவழி உந்த மெல்லோசையாகவும் மிடற்றுவழி உந்த இடை ஓசையாகவும் வெளிப்படும். இவ்விலக்கணம் மொழி எழுத்துக்களுக்கும் இசைச் சுரங்களுக்கும் பொதுவானதாகும். அதனால்தான் "அசையும் சொல்லும் இசையெனச் சொல்வார்".

இசைவகை

தமிழிசை அல்லது கர்நாடக இசை இந்துத்தானி இசை - ஐரோப்பிய இசை தமிழில் கலந்துள்ளன. இசையின் அடிப்படை எழுவகைப் பண்கள் கர்நாடக இசையாளர் சுரங்கள் என்பர். பேச்சு மொழி எழுத்தொலி ஓசைகள் வேறு, இசை ஓசைகள் வேறு.

சுரங்கள்

| பண்கள் | - | சுரங்கள் | - | எழுத்து |
|---|---|---|---|---|
| குரல் | - | சட்ஜம் | - | ச |
| சத்தம் | - | ரிஷபம் | - | ரி |
| கைக்கிளை | - | காந்தாரம் | - | க |
| உழை | - | மத்திமம் | - | ம |

| | | | | |
|---|---|---|---|---|
| இளி | - | பஞ்சமம் | - | ப |
| விளரி | - | தைவதம் | - | த |
| தாரம் | - | நிஷாதம் | - | நி |

பிறப்பு முறை

தாரத்தில் உழையும், உழையில் குரலும் குரலில் இளியும். இளியில் துத்தமும் துத்தத்தில் விளரியும் விளரியில் கைக்கிளையும் பிறக்கும்.

பண்களுள்: 2,7, இணை 3,6 பகை 4- நட்பு; 5 கிளை - எடுக்குப் பண்ணிலிருந்து இவற்றைக் காணல் வேண்டும்.

பண்கள் பிறக்கும் தானங்கள் 8.

நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல் (அண்பல்) தலை.

கிரியை 8

எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு.

இயக்கம் வகை 3

மந்தரம் - மெலிவு

மத்திமம் - சமன்

தாரம் அல்லது உச்சம் - வலிவு

| | |
|---|---|
| ச | - காற்றின் கூறு |
| ரி | - நிலம், நெருப்பின் கூறு |
| க | - நெருப்பின் கூறு |
| ம | - நீரின் கூறு |
| ப | - நிலக் கூறு |
| த | - நிலக் கூறு |
| நி | - நீர் - நெருப்பின் கூறு |

ஏழு சுரங்களுள் சட்ஜமும் பஞ்சமமும் ஒரே சுருதி பெறும். ஏனைய ஐந்தும் ஒவ்வொன்றும் நான்கு சுருதிகளைப் பெறும். அம்முறையில் சுருதிகள் 22 ஆகும். மேளகர்த்தா இராகங்களில் சுரஸ்தானங்களைப் பன்னிரண்டாகக் கொள்வர்.

சட்ஜம் சமநிலை பஞ்சமம் ஒரேநிலை :

- ரிஷபம்
  - சுத்த ரிஷபம்
  - சதுஸ்ரு ரிஷபம்
- காந்தாரம்
  - சாதாரணக் காந்தாரம்
  - அந்தரக்காந்தாரம்
- மத்திமம்
  - சுத்தமத்திமம்
  - பிரதிமத்திமம்
- தைவதம்
  - சுத்த தைவதம்
  - சதுஸ்ராதிதைவதம்
- நிஷாதம்
  - கைசிக நிஷாதம்
  - காக நிஷாதம்

இவை ஐந்தும் இரண்டிரண்டு நிலைகள் பெறும்.

பண்டைத் தமிழிசையாளர் கொண்ட சுரங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ | 7 |
| அ | இ | உ | எ | - | ஒ | - | |
| 2 | 2 | 2 | 2 | 1 | 2 | 1 | = 12 |

பால் அமைப்பு:

| | | |
|---|---|---|
| குரல், கைக்கிளை, தாரம் | - | ஆண்பால் |
| கிளி, துத்தம், விளரி | - | பெண்பால் |
| உழை | - | அலிப்பால் |

கமகங்கள் 10 ஏழுசுரங்களின் அடிப்படையில் நிகழும்

1. ஆரோகணம்
2. அவரோகணம்
3. டாலு
4. அந்தோளம்
5. ஸ்புரிதம்
6. ஆவாதம்
7. மூர்ச்சனை
8. திரிபுச்சம்
9. பிரத்யாவிதம்
10. கற்பிதம்

த்வனி 10 : நாதம் அ. இ, உம், ஓம் தோன்றும். ஓங்கார த்வனியில் தோன்றும்

| | | | |
|---|---|---|---|
| 1. | சுரத்வனி | 6. | மேகத்வனி |
| 2. | நிர்க்கோஷத்வனி | 7. | பேரித்வனி |
| 3. | வேணுத்வனி | 8. | மத்தளத்வனி |
| 4. | காளத்வனி | 9. | மத்தளத்வனி |
| 5. | சங்கத்வனி | 10. | குமந்தத்வனி |

ஒரு சாரார் கூறும் இசை (பண்) பிறப்பிடங்கள் 7

| | | | |
|---|---|---|---|
| குரல் | - | மிடறு மாத்திரை | 4 |
| விளரி | - | நெற்றி ..... | 3 |

| | | | |
|---|---|---|---|
| துத்தம் | - | நாக்கு ...... | 4 |
| இளி | - | நெஞ்சு ...... | |
| கைக்கிளை | - | உண்ணாக்கு | 3 |
| தாரம் | - | மூக்கு ...... | 2 |
| உழை | - | தலை ...... | 2 |

ஸ்வரங்களின் அடிப்படை இசைகள் – இயக்கம் – விளைவு

| | | | | |
|---|---|---|---|---|
| ஸட்ஜம் | – ச | – ஸ்ஸ்அ | SSA | – ஏனைய ஆறு சுரங்களுக்கும் ஆதார சுருதி |
| ரிஷபம் | – ரி | – ர்ர்கி | RRE | – உருட்டொலி – உயிர்ப்பொலி |
| காந்தாரம் | – க | – க்அ | GAA | – கமகாந்தரம் தொண்டை ஒலி |
| மத்திமம் | – ம | – ம்அ | MMA | – ஹுங்காரம் தரும் மூக்கொலி |
| பஞ்சமம் | – ப | – ப | PA-BA | – மூடித்திறக்கும் உதட்டொலி |
| தைவதம் | – த | – த்வ | DHA-THA | – தடைசெய்யும் தாள ஒலி |
| நிஷாதம் | – நி | – ந்ந்இ | NNEE | – நிரவல் செய்யும் மூக்கொலி |

சாகித்யங்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி ஆகியவற்றில் அமைந்து இராக தாளங்களோடு பாடுமிடத்து ஏழு சுரங்களும் தத்தம் அடிப்படை ஓசைகளை அச் சொற்களுக்குத் தரும். அதனால் பாடகனின் குரல் மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களிலும் விரவி வெளிப்படும்; உடல் நரம்புகளும் மூளையும் செயற்படும்.

பாடுவோனுடைய இசையில் ஒன்றிச் செவிமடுக்கும். கேட்போருக்குப் பாடகனுடைய உணர்வுகளுள் ஓரளவு பாதிக்கும்; புத்தியும் சிந்தையும் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், வெகுளி, உவகை, பெருமிதம் என்னும் மெய்ப்பாடுகள் விளையும்.

ஆளத்தியிசை

பண்களை அடிப்படையாகக் கொள்ளாமல் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நீட்டியும் குறுக்கியும் மடக்கியும் முடக்கியும் அளவை தவறாமல் எழுப்பும் குரலோசை ஆளத்தி எனப்படும்.

எழுத்து :- அ இ உ எ ஒ - ஆ ஈ - ஊ ஏ ஓ - தா நா க் - ன ய ர ல சிறுபான்மை வரும்.

**குன்றாக் குறிலைந்தும் கோடா நெடிலைந்தும்**
**நின்றார்ந்த மன்னகரம் தன்னோடு – நன்றாக**
**நீளத்தால் ஏழும் நிதானத்தால் நின்றியங்க**
**ஆளத்தியா மென்றறி.**

என்பது இலக்கணம்.

இதன் சந்தம் : ததநரி – தனன – தந்தந் தனதா – தத்தரின

சிறுபான்மை ஆராரோ அரிரரோ – ஆலோலம், ஏலேலோ – எனவரும்.

**மகரத்தின் ஒற்றால் சுருதி விரவும்**
**பகரும் குறில்நெடில் பாரித்து – நிகரிலா**
**தென்னா தெனா என்று பாடுவரேல் ஆளத்தி**
**மன்னா இச்சொல்லின் வகை.**

எழுத்து : மதன அடிப்படை; ர தகரத்துணை; ய மகரத்துணை; ல.ந. - னகரத்தின் திரிபு.

ஆளத்தியை இடைக்காலத்தார் 3 வகையாகப் பிரித்துக் கூறுவர்.

1. காட்டாளத்தி :- அச்சுடன் நிகழ்வது. அச்சு என்பது குறிலாம். அகரத்தோடு தாளத்துடன் வெளிப்படுவது.
2. நிற ஆளத்தி :- பாரணையுடன் திகழ்வது. பாரணை என்பது நெடிலாய் அகண்டாகாரமான ஓசையுடன் வெளிப்படுவது.
3. பண்ணாளத்தி :- 7 வகைப் பண்களால் நிகழ்வது.

# 4. இசைக் கருவிகள்

இசைக் கருவிகள் 1. நரம்புக் கருவி 2. துளைக் கருவி 3. தோற் கருவி 4. கஞ்சக் கருவி என 4 வகைப்படும்.

1. நரம்புக் கருவி : யாழ் - பண்டைய யாழ் நரம்புகளால் கட்டப்படும். பின்னர் அதன் வடிவமும் அமைப்பும் மாறித் தந்திகளால் கட்டப் பெறும் வீணையாக மலர்ந்தது. ஐரோப்பிய நரம்புக் கருவிகள் பல்வேறு வகையில் பலவாக அமைந்துள்ளன.

2. துளைக் கருவி : மூங்கில், மரங்களின் துளையிடப்பட்டுக் குழலாக அமைவது. மேலைநாட்டுக் கருவிகளில் துளைக் கருவி பலவாக அமைந்துள்ளது.

3. தோற் கருவி : மரம் முதலியவற்றைக் குழலாகவும் கிண்ணமாகவும் உருளையாகவும் அமைத்து அதன் ஒருபுறத்திலோ இருபுறத்திலுமோ தோலால் போர்த்தி விரித்துக் கட்டிக் கையாலும் சிறு கோல்களாலும் தட்டித் தாள ஓசையைப் பெறும் கருவி தோற் கருவியாகும். பல்வேறு வகையில் பலவாக அமைந்துள்ளது.

4. கஞ்சக் கருவி : உலோகத் தகடுகளைக் கொண்டு தாள ஓசை பெற அமைக்கப்படும் கருவி கஞ்சக் கருவியாகும்.

நரம்புக் கருவியும் துளைக் கருவியும் பண்களை அடிப்படையாகக் கொண்டவை. தோற் கருவியும் கஞ்சக் கருவியும் தாள லயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

### தாளம் - தாளவகை - இலக்கணம்

பண்ணிசைக்குத் தாய் சுருதி - தந்தை தாளம். தாளம் பாடலின் ஆற்றலையும் பண்ணின் பயனையும் பெருக்கும் ஆற்றலுடையது. பழந் தமிழிசை நூல்களில் தாளம் பலவாகக் கூறப்பட்டுள்ளது. கர்நாடக இசையில் $(7x5 = 35)$ முப்பத்தைந்தாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஏழு என்ற எண் சுரங்களையும், 5 என்பது திணைகளையும் கொண்டு, 35 ஆகக் கணக்கிடப்பட்டது.

தாளம் என்பது மாத்திரையாகிய கால அளவையின் அடிப்படையில் அமைந்ததாகும். தாள நூலின் மாத்திரை அலகு எனப்படும். ஒருவர் தன்பாதமாகிய தாளை நிலத்தில் வைத்த அளவில் அந்நேரம் அலகு எனப்படும். ஊன்றி அழுத்தும் நேரம் ஈரலகு எனப்படும். எடுக்கும் நேரம் முழுமையாகும். முழுமையை லகு என்பர்.

ஓரலகு நேரம் அநுத்ருதம் எனப்படும். அதன் அடையாளம் 1

ஈரலகு நேரம் திருதம் எனப்படும். அதன் அடையாளம் O 2

முழுமையான நேரத்திற்கு லகு எனப்பெயர். அதன் அடையாளம் | .

அடிப்படைத் தாளங்கள் துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, ஹட, ஏகம் என ஏழு வகைப்படும். இவை ஒவ்வொன்றும் திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம் சங்கிரணம் என்னும் வகைகளை ஏற்றுவரும். தனியேயும் வரும். இவ்வகைகளின் லகுவும் ஓசைக் குறிப்பும் பின்வருமாறு அமையும் லகுவுக்கு அட்சரம் என்பதும் பெயர்.

| | தாளம் – | அட்சரம் |
|---|---|---|
| 1. | துருவம் | 1011 |
| 2. | மட்டியம் | 101 |
| 3. | ரூபகம் | 01 |
| 4. | ஜம்பை | 10 |
| 5. | திரிபுடை | 100 |
| 6. | ஹட | 1100 |
| 7. | ஏகம் | 1 |

| | வகை | லகு | சந்தம் |
|---|---|---|---|
| 1. | திஸ்ரம் | 3 | திதந |
| 2. | சதுஸ்ரம் | 4 | தகதிமி |

| | | | |
|---|---|---|---|
| 3. | கண்டம் | 5 | தகததிந |
| 4. | மிஸ்ரம் | 7 | தகிட தக திமி |
| 5. | சங்கீர்ணம் | 9 | தகிட ததக ததிந |

ஒன்றற்கு எடுத்துக் காட்டு : துருவ தாளம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திஸ்ர துருவம் | 30 | 3 | 3 | அட்சரம்11 |
| 2. | சதுஸ்ர துருவம் | 40 | 4 | 4 | அட்சரம் 14 |
| 3. | கண்டதுருவம் | 50 | 5 | 5 | அட்சரம்17 |
| 4. | மிஸ்ர துருவம் | 70 | 7 | 7 | அட்சரம் 23 |
| 5. | சங்கீர்ண துருவம் | 90 | 9 | 0 | அட்சரம் 29 |

பிறவும் இவ்வாறே வரும்.

சித்தர்களின் நூல்களில் இசைக் கருவிகள்

வாசியோகம் என்னும் சரப் பயிற்சியில் நிலை பற்றி மச்சமுனிவர் விளக்குவார். "மணியுடனே, செயகண்டி, சங்கு, "தாளக்கருவி" என்பன ஒலிப்பது கூறப்பட்டுள்ளது." சித்தி கொண்டு சத்திசேரும், சிலம்பொலியும், திருநடன தீப ஞானம் என்றும் வருகின்றன. வழக்கிழந்த சிலம்பு, நூலாசிரியர் காலத்தில் பயன்பாட்டில் இருந்திருத்தல் கூடும். தேரையர் தன்னுடைய யமக வெண்பாவில்,

> **வீணை இசை நத்தோசை வேயோசை, நாயோசை, வீணை**
> **இசை நத்தோசை, வெற்போசை வீணையிசை**

என்பார். இதற்கு உரையாசிரியர், தம்புரா, கின்னரி, வீணையின் ஒலியைப்போலவும், கையில் புரட்டும் (சொக்கட்டான்) தாயக்கட்டையின் ஒலியைப்போலவும், சங்கின் ஒலி, குழலின் ஒலி, இச் என்ற ஒலியும், எதிரொலியும், பயனற்ற ஓசையும் என்று விவரிப்பார். சங்கு அக்காலத்தில் பயன்பாட்டிலிருந்துள்ளது. **தாரையியம், பேரியம், தப்பாது ஒன்றா திலக்கம். தாரை, இயம்பேர், கலைவிதான்** வழக்கில் உள்ள தாரை என்ற இசைக்கருவியின் ஒலி, முரசின்ஒலி ஒன்றாக ஒலிக்க, மாலையணிந்து கூறுவாய் முரசு இன்று வழக்கில் இல்லை. மண முரசு, போர் முரசு, விழா முரசு என்ற முரசுகள் அரண்மனைகளில் முழங்கப்பட்டன.

இதுபோன்றே **காலில் சிவமே கனத்த மயேசுரன், மூலத்தில் நின்ற முழக்கம் அறிந்திலர்** என மூலத்திலிருந்து எழும் ஒலியைப் பற்றிக் கூறுகின்றார். இது பற்றிக் **கன மார்க்கம் என்பது மூலாதாரத்திலிருந்து ஒலியை உண்டாக்கிப் பாடுவதென்றும், தொடங்கும்போது அந்த ஒலி ஊங்கார சப்தத்தோடு எழுமென்றும், ஆரோகண, அவரோகணத்தில் பலவிதமான சங்கதிகள் வரும்படி பாடுவதென்றும், அங்க சேட்டைகள் இல்லாமல் பாட வேண்டும் என்றும் சொல்வர்.** இசைத் தமிழில் உள்ள **உள்ளாளப் பாட்டுப் பாடுங்கால் இட கலையை இயக்க, மறுத்து, மூலாதார முதல் பிரமாந்தரமளவும் இயக்கமாக்கி நடுவு தொழில்வரப் பாடுதல் என்றறிக. கண்இமையா கண்டந்துடியா, கொடிறசையா, பண்ணளவும் வாய் தெரியல் கைத்தவனே, கந்தருவர் உள்ளாளப் பாட்டிலுணர் இசை மரபு** என்று நச்சினார்க்கினியர் உரையில் வருகின்றது. மேலும் இவரது சிறப்புரையில் **விண் என்றது முற்கூறிய உள்ளாளத்திற்குரிய மூலாதாரம் தொடங்கிப் பிரமரந்தர ரத்தளவு நின்ற வெளியைக்** கூறுவார். எனவே இத்துறையைப் பற்றிச் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

இசைக் கருவிகள் பற்றி அகத்தியர் "ஞானகாவியம் 1000" இல் வருகின்றது. **பாரப்பா, செயகண்டி, சங்கு, பூரி, பரிவான மாபேரி, தாளம், தாரை, ஏரப்பா, எக்காளம், துந்துபி, மல்லாரி, இயல்பான, நகாறு, கின்னரி, வீணை, பதினெண்வாத்தியம்.** இதில் 13 வகையான கருவிகளின் பெயர்களே இருக்கின்றன. சங்கு, சேகண்டி, பூரி, பேரிகை, (சாலர்) தாளம், தாரை, எக்காளம், துந்துபி, மல்லாரி, நாகரம், கின்னரி, வீணை என்பன, அகத்தியர் காலத்தில் வழக்கிலிருந்தன. அகத்தியர் 12000 என்ற நூலில் 3ஆம் காண்டத்தில் பாடல் 697இல் இசையுடன் கலந்து பாடுதலைக் குறித்து "நீதியுடன் உபசரணை, வாத்திய கீதம்" என்றுள்ளது. 5ஆம் காண்டத்தில் (பக். 15, பா. 25) இல் **நாதமுடன் செயகண்டி, ஓசையோடு, நாதாந்த சித்தொளிவும், தலம் கொள்வரோ.** கொங்கணரும் இசைக் கருவிகள் பற்றி **சங்கமொடு, செய்கண்டி, மணியின் ஓசை, சத்த முழங்க சின்னங்கள், சார்மத்தளம்** என்றும், **பூட்டிடுவாய், மணியோசை, சங்கினோசை, புகழான நாத செயகண்டி ஓசை** என்று இயம்புவார். "சத்த முழங்கு சின்னங்கள்" என்பதில் அதிக ஒலியை எழுப்பும் கருவிகள் என்றும், ஏழுவகையான ஒலிகளை

எழுப்பும் கருவிகள் என்றும், சின்னங்கள் என்பதற்குச் திருச்சின்னம் என்ற கருவி என்றும் கொள்ளலாம்.

திருச்சின்னம் என்னும் கருவி இன்றும் வழக்கில் உள்ளது . இறைவன் திருவுலா வரும்போது, இது ஊதப்படுகின்றது. அகத்தியரின் வாத சௌமியத்தில் **தவுல் என்ற மேளத்தைப் பற்றி வருகின்றது. நாட்டடா, மணியோசை சங்கியோசை, நலமான செயகண்டி, மேளவாத்தியம் இசைக் கருவிகளைப் பற்றி 18 சித்தர்களின் நாடி சாத்திரம்** என்ற நூலிலும் வருகின்றது. **மாவித்த மணியோசைஒத்தல்லோ, போலும், மகத்தான உடுக்கை அதின் ஓசை போலும்**[11] . இதில் உடுக்கின் ஓசை மணியோசை பற்றியும் வருகின்றது. உடைந்த சங்கின் ஒலிக்கு, ஒப்புமை கூறப்பட்டுள்ளது. **உடைந்து போன சங்கின் ஓசை, உயிர்களும் உடல் புகா என்று** பெரிய ஞானக்கோவை கூறும். பழுதான சங்கின் ஒலியைப் போன்று உயிர்கள் மீண்டும் உடலில் நுழையாது என்று சங்கை, உடலுக்கு ஒப்பிடுவார். சிலம்பின் ஒலியைப் பற்றியும் சித்தர்கள் கூறியுள்ளார்கள். **தித்தியென்ற கூத்தும், திருச்சிலம்பினோசைகளும், பக்தியுடன் கேட்டுப் பணிவது எக்காலம்.** இப்பாடல் தாயுமான சுவாமிகளின் கண்ணியை நினைவூட்டுகிறது.

குதம்பைச் சித்தர் கையால் தாளமிட்டு ஒலி எழுப்புவதைக் கூறுகின்றார். **செந்தாமரைபோலே திரியும், மெய்ஞ்ஞானிக்கு, கைத்தாளம் ஏதுக்கடி குதம்பாய், கைத்தாளம் ஏதுக்கடி.** இடியின் ஓசையைப் பற்றியும் கூறுகின்றார். **வாரென்ற இடிபோல் முழங்கும் அங்கே, வாத்தியங்கள் கேட்குமடா, சங்கினோசை.** இதுபோன்றே கொங்கணர் தன்னுடைய வாலைக் கும்மியில் சிலம்பொலியென்னைக் **கேட்குமடி, மெத்த சிக்குள்ள பாதை ஓடக்கமடி, வலம்புரியச் சங்கம் ஊதும்படி மேலே, வாசியைப் பாரடி வாலைப் பெண்ணே** என்பர்.

திருக்கோவிலில் இசைக்கருவிகளை இயக்குவது குறித்து ஔவையாரின் கருத்து" நெடிதான தாரையொன்று, சங்கிரண்டு, நின்றூதும் திருக்கோவில் அறைக்குள்ளே". இதில் இசை முறையைக் கூறியுள்ளார். தாரை என்பது இன்று தப்பு என்ற சிறு பறையுடன் இணைத்துக் கூறப்படுகின்றது. ஔவையார் காலத்தில் "தப்பு" உயர்ந்த நிலையில் இருந்தது. இக்காலத்தில் இது வழக்கிலில்லை.

கோவில்களில் தப்பு, சங்கு என்பன பயன்பாட்டில் இருந்தன. இன்று இக்கருவிகள் வழக்கில் இல்லை. தப்புடன், சங்கொலிப்பது அக்காலத்துக் கோவில்களில் இருந்துள்ளதற்கு, இப்பாடலே சான்றாகும்.

சேகண்டி என்னும் (உலோகக் கருவி) கஞ்சுகக் கருவியின் ஒலியை, மிடற்றோசைக்குத் தேரையர் ஒப்பிட்டுள்ளார். "சேகண்டியைப் போல் தொனியுண்டாகும்." நல்ல தமிழிசைப் பாட்டு அர்ச்சனை செய்வதற்கு இணையாகும்." தெண்ணருச்சனை, தெந்தன முந்துறல்" மத்தள ஒலியைப் பற்றியும் பேசியுள்ளார். "தொண்டகமத் தளத்தில் தொனி எனவே ஒலிக்கும்". இதற்காகப் பதவுரையாக, தொண்டு –அகமத்தளம்; குறிஞ்சிப் பறையின் ஒலியென இருக்கும். தொல்காப்பியக் கருப்பொருளில், குறிஞ்சித் திணைக்குரிய பறை தொண்டகப் பறையும், வெறியாட்டுப் பறையும் ஆம். எனவே, தொண்டகப் பறையின் ஒலியை மத்தளத்தில் வாசிப்பது போன்று என்ற ஒப்பீட்டைக் காட்டும் நயம் மகிழத்தக்கது. தேரையர் காலத்தில் தொண்டகப் பறையானது வழக்கிலிருந்துள்ளது. வரலாற்றில் பொறிக்கத்தக்கது.

மேளத்தின் ஒலியால் நோய் அதிகப்படும். இதை, "ஓவியம், நெல் இலை, ஓவியம், மஞ்சள், பால், ஓரம்" என்பார். ஓவியம் (சித்திரம்), நெல், இலை, மேளம், மஞ்சள், பால் என்பன பக்கத்திலிருந்தால் நோயானது வலிமை பெறும். ஓவியம் என்பது மேளத்தைக் குறிப்பதாக உரையில் உள்ளது. மேளம் என்பதைவிட மேளசத்தம் என்று கொள்ளலே பொருந்தும். தேரையர், தன் சேகரப் பாவில் வீணையின் இசையைக் காட்டியுள்ளார். **வீணையிசை, பேய்மிருகக் குந்தங்கட்கும், விரும்பவிசை தருவது போ, நிரம்ப ஆசை.**

போகர், தன்னுடைய "சத்தகாண்டம்" என்னும் நூலில் இசைக் கருவிகள் பற்றிய செய்திகளைக் கூறியுள்ளார்'' தொனியான வாத்தியங்கள் கேட்கக் கோவில், தோற்றமுள்ள வடிவேலர் சேவைதானே.'' மேலும் இவர் தொடர்ந்து 4ஆம் காண்டத்தில் **வேரேதான் ஒருமாளி பிரமதாளம், வேகமுடன் ஒருமாளி துத்தாரியாகும், சேரேதான் ஒருமாளி துத்தாரியாகும், சிறப்பான ஒருமாளி மத்தளமுமாமே, ஆமேதான் ஒருமாளி கைத்தாளமாகும், அப்பனே ஒருமாளிதம் பறையுமாகும்** என்றும், **பாரேதான், அட்டவித மாளி தன்னில், பாங்குடனே அட்டவித வாத்தியங்கள், நேரேதான் ஒருமாளி சின்னமாகும், நேர்ப்புடனே ஒருமாளி திரிசங்காகும்.** இதில் மாளி என்பது இசையின் கால அளவு எனலாம். இவை இன்று

மாத்திரைகள் எனப்படும். குரல், துத்தம், இளி 4 மாத்திரைகள், தாரம், உழை - 2 மாத்திரைகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. 9 வகையான தாளத்தில் "பிரமதாளம்" என்பது கூறப்படவில்லை. இது குறித்த விளக்கம், சித்தர் நூல்களில் எங்கும் இல்லை. இதில் பிரமதாளம், துத்தாரி, தம்பூரா, மத்தளம், கைத்தாளம், பறை, திருச்சின்னம், திரிசங்கு என்பன எட்டுவிதமான இசைக்கருவிகளாகும். இதில் "பிரமதாளம்" என்பது இசைக்கருவியின் பெயர் போல உள்ளது. இதை ஆய்வு செய்தல் வேண்டும்.

இசைக்கருவிகளில் ஒன்றாகக் கையினால் தாளமிடுதலைக் குறிப்பிடுகின்றார். இசையரங்குகளில் இல்லாமல், தனியாகப் பாடும் போது, கையால் தாளமிடுவதையே இவர் கருவியெனக் கொண்டார் போலும். அகத்தியர் இசைக்கு, 108 வகையான தாள வகைகளை விவரித்துள்ளார். **அகத்தியன் சொன்ன அருந்தமிழ் தொகுத்தவை நூற்றெட்டுத் தாளங்கள் நூற்றெட்டுத் தாளம் கூறும் முதனூலகத்தியம், சொன்னான் இனித்தாள விதியொரு நூற்றெட்டு, தொல் புவிக்கே** சித்த மருத்துவத்தின் முதல்வரான அகத்தியர் 108 தாள வகைகளையும் இசைக்கு வழங்கியுள்ளார். இசைக் குழுவில், தம்புரா, மிருதங்கம், பிடில் என்பன முதன்மையானதாகும். கஞ்சிரா, கடம், முகர்சிங், தபேலா, கொன்னக்கோல், நாகசுரம், தவில், துருத்தி, தாளம், சங்கு, கிடிகிட்டி, சூரியப்பிரபை, சந்திரப்பிரபை, ஒத்து, சுருதிப்பெட்டி, தம்புரா என்பன துணையாகவும் இடம்பெறுகின்றன. இதுபோன்ற இசைக்குழுவை, போகர் எடுத்துக் கூறுவது வியப்பாக உள்ளது. போகர் கூறியது "பிரமதாளம், கைத்தாளம்" என்பன. வட இந்தியாவில் பிரமதாளம் என்ற கருவி உள்ளது. இதுவும் போகர் கூறும் கருவியும் ஒன்றா? என்பது ஆய்வுக்குரியதாகும். எனவே இசை நுணுக்கம், அறிந்தவராகப் போக முனிவரைக் கொள்ளலாம். ஆயினும் பிரமதாளம் கைத்தாளம் என்பவற்றைத் தாளக் கருவிகளாகக் கொள்ளவில்லை என்றால் ஆறு இசைக்கருவிகளை மட்டுமே கூறுவது அவசியம். இவர் மேலும் **தொனியுடனே சாமரங்கள், வாத்தியங்கள், தொல்லுலகில் அனந்தம், அதைக்கண்டோம் தானே தண்டு, களபமாலை பாத்திரங்கள், சட்டமுள்ள கமண்டலமும், செய்கண்டியுமாமே** செயமுடனே வீரமணி,

**வீரசங்கு, மணி போன்ற ஓசையது கேட்கும் பாரு வேணவே கீதங்கள், வாத்தியங்கள், விருப்பமுடனே செய்வார்கள். அனந்தமாமே. அனந்தமாம் சிலம்பின் ஓசை கேட்கும், அப்பனே, நடுசாம வேளைதன்னில் கடிப்பிடிவோன், முரசொடு, வாத்தியங்கள், கருத்துடனே, கைதொழுதிட்டாரே. தொனியான வாத்தியங்களோடு, தாளம், தோற்றமுடன் வையகத்தில் வரும்போது** என்றெல்லாம் இசையைப் பற்றிப் பேசியுள்ளார். மேலும் இசைக் கருவிகளைப் பழுதடையச் செய்யும் வழிகளையும் எடுத்துரைக்கின்றார். உடுக்கையை உடைக்க சாலம், கந்தக திராவகத்தில் தோய்த்த குச்சியைக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் இடுதல் வேண்டும். உடுக்கையை அடிக்கும்போது அது இரண்டாகப் பிளக்கும். இதைச் **சாழல் என்னும் மூசையது முறிந்துபோக, சட்டமுடன் யாம் உரைப்போம், வன்மை காணே** வீரம் காடிக்காரத்தால் தெரியாமல் உடுக்கையில் கோடு போட, உடுக்கையானது பூசாரி அடிக்கும்போது கிழியும்.

சித்தர்களில் ஒருவர் தமரகனார் ஆவர். சிவபெருமானின் இசைக் கருவிகள், உடுக்கை, டமரகம், கல்லாடம், கல்லலகு, கொடுகொட்டி, தகுணிச்சம், வீணை, யாழ், முழவு, மொந்தை என்பனவாகும். எனவே, தமரக்கனார் இசைக்கருவியின் பெயரைக் கொண்டவராவார். இவர் 300 ஆண்டுகள் இருந்ததாகப் போகர் கூறுகிறார். இவரது சித்தைப் பற்றிக் கூறும்போது **காணவே, செகசால தமரகந்தான், காசினிலிலே அத்த வித்தை செய்த சித்து**, என்பார். உடுக்கையை ஆட்டி, குறி சொல்லுவது குறித்தும் விவரிக்கின்றார். **நலமான உடுக்கை தனைக் கையிலேந்தி, பாரினிலே, பலகுறிகள் சொல்லுவான் பாரே.** விடிகாலையில் உடுக்கையை அடித்துக் கொண்டு, குடுகுடுப்பைக்காரன் குறிசொல்லுவது இன்றும் வழக்கிலுள்ளது. **ஏற்றமுடன் துத்தாரிவாயில் ஏந்தி வாமேதான் வாத்தியங்கள், கோட்டம்போல வளமையுடன், விநோதவகை வரிசை கேட்டேன் வீணையுடன் வாத்தியங்கள் முழங்கலாச்சு, வேதாந்தத் தாயினது மகிமையப் பாணையானது**, மிடற்றோசைக்குத் துணையாகவும், தனியாகவும் அரங்குகளில் இசைக்கப்படும். வீணை தனியாக முதன்மை பெறும்போது, இதனுடன் ஏனைய கருவிகளான, மிருதங்கம்,

தம்பூரா என்பன சேர்ந்து ஒலிக்கும். இதையே போகர் குறிப்பிடுகின்றார். வீணையை உடலுடன் ஒப்பிட்டுச் "சாரீர வீணை" என்பர். தளர்ந்த நோயுள்ள உடலுக்கு வீணையை ஒப்பிடுகின்றார் தேரையர். "வாகு, வீணை தெறித்தால்போல வலிக்கும்." வீணை மீட்டுதலைத் "தெறித்தல்" என்பார். நரம்புகளில் ஏற்படும் வலியைத் தெறித்தல் என்று சித்த மருத்துவர்கள் கூறுவர். மதுமேகத்தினால் ஏற்படும் வலியை, விரல் நுனியில் வீணை மீட்டிய பின் ஏற்படும் வலிக்கு ஒப்பிடுகின்றார். ஆடல்வகைகளில் ஒன்று "பாண்டரங்கம்" ஆகும். இதைச் சிவபெருமான் ஆடினார் என்பது புராண வழக்கு. இதைத் தேரையர் தன் காப்பியத்தில் **பாண்டரங்கன் புரியும் இத்தாணு லோகத்தில் இருவழி நடத்திடும் இயல்பென வாதம்** என்பார். குருமருந்தைக் கூறவந்த தேரையர், சிவபெருமான் ஆடிய நடனத்தின் தன்மையை ஒத்து இருவழியில் செயல்படும் குருமருந்து இரசவாதம் செய்யும்; வாத நோயைத் தீர்க்கவும் செய்யும். இது சிவன் உமையொரு பாகனாக ஆண், பெண்ணாக மாறி ஆடியதை ஒக்கும்.

உடுக்கை

தோற்கருவிகளின் ஓசையைக் கருத்தில் கொண்டு உண்மை, தொன்மை, மென்மை என்று பகுப்பர். உடுக்கு மென்மை இனவகையைச் சார்ந்ததாகும். இனக் குழுச் சமூகத்தின் மற்றொரு பிரிவில் இனக் குழுத்தலைவர்கள், புரோகிதன், பூசாரி, மந்திரவாதி, தேராளன், தேவராட்டி (பெண்) என்று தொழில் கருதிப் பிரிவினை ஏற்பட்டது. இவற்றுள் மந்திரவாதி என்பவன் மருத்துவம், குறி சொல்லல், பேய் விரட்டல் போன்றவற்றைச் செய்தான். பேயை விரட்டிவிடும் தொழிலைக் கற்ற மருத்துவனைக் கோடாங்கி என்றுரைக்கலாம். சில கோடாங்கிகள் மண்டை ஓடுகளையும், மனித எலும்புகளையும் உடன் வைத்துள்ளார்கள். கோடாங்கி தனது பாடலுக்கும் நிகழ்ச்சிக்கும் மெருகூட்டும் முறையில் உடுக்கையை இசைப்பான். உடுக்கின் இசையும், பாடலும் சேர்ந்து, பேய்பிடித்தவர்களின் மன உணர்வுகளைக் கிளர்ச்சியடையச் செய்யும். இந்த மனக்கிளர்ச்சியின், மூலம், கோடாங்கி சில செய்திகளைத் தெரிந்து கொள்வான். பேயினால் உள-உடல் நலக் கேடுகளை நலமடையச் செய்த தொன்மைக்கால உளவியல்

மருத்துவனே, கோடாங்கி எனலாம். இசைவழி இங்கு உளமருத்துவம் செய்யப்படுகிறது. பேயோட்டும் சடங்கில் இசையும், மருத்துவமும், சமயமும் கலந்து காணப்படுகின்றன. இசையும், பாடலும் கலந்து மரபு வழியில் செயல்படும் நிகழ்ச்சியே பேயோட்டும் சடங்கு" எனலாம். பாடல்களைப் பாடும் கோடாங்கிகள் கற்றறிந்த புலவர்கள் இல்லை. அப்பாடல்கள் இலக்கண விதிகளுக்கு உட்பட்டு இனிமையும், பொருட் செறிவும் உள்ளவையல்ல. கோடாங்கிகள் சூழலுக்கு ஏற்ப உடனுக்குடன் பாடவல்லவர்கள். பேய் பிடித்தவர் நலமடையும் வரையில் பாடல்கள் பாடப்படுவதால், நீண்டு உள்ளன. உடுக்கடிப் பாடல்களில் காணப்படும் சொற்கள், சமூகப் பேச்சு வழக்கில் காணப்படுகின்றன. பேய்ப்பாட்டு என்பது உணர்ச்சி மேலிட்டதால், பாடுவதும், பேசுவதுமான செயல்களைப் பேய் பிடித்தவர் செய்வதாகும். இதைப் பேயே பாடுவதாகக் கொள்ளுவர்.

கோடாங்கி தனது பாடலுக்கு இனிமை வேண்டி உடுக்கு என்ற இசைக் கருவியைப் பயன்படுத்துகிறான். உடுக்கு இசை அதிர்வுகளைக் கேடு அடைந்தவர்களை நலமாக்கிட உதவுகின்றது. பேய் அணுகாதிருக்க மணிஓசை எழுப்புதல் இலவம், வேம்பு ஆகிய மரங்களின் தழைகளைச் செருகுதல், ஐயவி என்ற வெண்சிறுகடுகினைத் தூவுதல், உல்லியம் கூறல், காஞ்சிப் பண் பாடுதல் என்பன பேய்க்குப் பகைப் பொருட்கள் என்பதால் பேய் அணுகாது.

"பஞ்ச மரபு" என்ற இசை நூலிலும் அதற்கான உரையிலும் 34 கருவிகள் கூறப்பட்டுள்ளன. இத்தோற் கருவிகளில் உடுக்கையும் ஒன்றாகும். இது தொன்மையான தோல் இசைக் கருவியாகும். சிவன் உடுக்கையைக் கொண்டுள்ளார் என்பதால் உடுக்கின் இசையையும், பழமையினையும் அறிந்து கொள்ளலாம். இதர தோற் கருவிகளின் தாய்க் கருவி "உடுக்கு" என்று சொல்லலாம்.

பலவகையான இசைக்கருவிகளைப் பற்றிச் சித்தர்களின் இலக்கியங்களில் வருகின்றது. இவை 18 என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. "அகத்தியர் ஞானகாவியம் 1000" இல் செயகண்டி, சங்கு, பரி, மாபேரி, தாளம், தாரை, எக்காளம், துந்துபி,

மல்லாரி, பரிசங்கு, இராவணாத்திரம், மேளம், நாகம், சாந்தம், கின்னரி, வீணை என்பன சுட்டப்படுகின்றன. இதில் சங்கு, பரிசங்கு என்பன தனித்தனியான இசைக் கருவிகளாகக் கூறப்பட்டுள்ளன. செம்பால் செய்யப்பட்ட உலோகக் கருவி அதிகமாக ஒலியை எழுப்பும். இதைச் **சேலான செம்பு, நாதத்தொனி முழங்கும் செம்பு நாதத்தொனிமேலே சிகரம் காணும்** கொம்புக் கருவியான **துந்துபியைப் பற்றிப் பேசுகின்றார்,** கருணை துந்துபியோடு ஆர்ப்பரிக்கும், மத்தளம், டமாரம், கொம்பு, மல்லாரி, கின்னரி, வீணை, நாகசுரம், இராவணாத்திரம், பேரிகை போன்ற இசைக்கருவிகளைப் பற்றிய செய்திகள் உள்ளன. மல்லாரி, இராவணாத்திரம் என்பன இன்று வழக்கில் இல்லை.

சங்கு, இசைக்கருவிகளில் ஒன்று. சித்தர்கள் காலத்தில் வேதம் சொல்லும்போது பயன்படுத்தியுள்ளனர். **தொனியான சங்கு நாததொனி** முழங்கும் தொண்ணூற்றாறு சபையோர்கள், சொல்லுவார்கள் வேதம், சங்கை இன்று மார்கழி மாதத்தில் காலை நேரத்தில் தாதர்கள் ஊதிவருகின்றார்கள். வேறு ஓர் பாடலில் நாதக்கிங்கிணி, மல்லாரி, டமாரம், வீணை, எக்காளம், இராவணாத்திரம், விடும்பை, கின்னரி, தாளம், தமறு, தாரை, டம்பேரி, பரி மத்தளம், தும்புரு என்பவைகளைக் கூறுகின்றார். இதில் கிங்கிணி, மல்லாரி, விடும்பை, கின்னரி, தம்பேரி, பரி மத்தளம் என்பனவற்றை ஆய்வு செய்தல் வேண்டும். இன்று சுரங்கள் என்றழைக்கப்படும் இன்னிசை ஒலிகளுக்கு முற்காலத் தமிழகத்தில் நரம்புகள் என்ற பெயர் வழக்கிலிருந்தது. நரம்புக் கருவியைப் பற்றிக் கூறியுள்ளார். இது "யாழாக" இருத்தல் வேண்டும். அலர் நரம்பின் முந்நூறு முழக்கவரே கட்டி கோவில் புராணத்தில் நடராச சுருக்கத்தில் பலவிதமான இசைக் கருவிகள் சொல்லப்படுகின்றன. குடமுழா, கொக்கரை, தாளம், குழல், வீணை, படகம், கத்தரிகை, தடாரி, பணிலம், துடி, கரடிகை, சச்சரி என்பன. இதன் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியர். இவரின் காலம் கி.பி.13 ஆம் நூற்றாண்டு. முத்தமிழை ஆய்வு செய்ததாகக் கருவூரார் தன் நொண்டிச் சிந்தில் **"முத்தமிழ் ஆராய்ந்து கற்றுணர்ந்தோர் முன் நூல் உரைத்தபடி இந்நூலே."** முந்திய நூல்களைச் செய்த சித்தர்கள்,

மூன்று தமிழிலும் வல்லவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். கருவூராரின் நூல், அவர்களுடைய மரபில் வந்தது என்றும் சொல்வார்கள்.

திருக்கைலாய ஞான உலாவில் குடமுழா இடம்பெறுதல். "சகடை" என்பதைக் கருவூர்த் தேவர் குறிப்பிடுகின்றார். சித்தர்கள் குறிப்பிடும் "துந்துபி" திருக்கைலாய ஞான உலா, திருவிசைப்பாவில் குறிப்பிடப்படுகிறது. காளம், இக்கருவி. இன்று எக்காளம் எனப்படுவது. காளம் என்பது பல நூற்றாண்டுகளாக வழங்கி வரும் ஓர் துளைக் கருவி. தென்னிந்தியாவில் காணப்படும் நேரான ஒரு காளத்திற்குத் திருச்சின்னம் என்று பெயர். மெல்லிய, நீண்ட இக்கருவி இரண்டாக இருக்கும். இதை ஒருவரே ஊதுவது வழக்கம். இது இன்றும் வழக்கில் உள்ளது. இதைப் பற்றியும் சித்தர்கள் கூறியுள்ளார்கள். சுமார் முக்கால் மீட்டர் நீளமுள்ள இக்கருவி பொன், வெள்ளி, செம்பு போன்றவற்றால் செய்யப்படுகிறது.

கல்லாடம் கூறும் ஓர் யாழ் மருத்துவ யாழாகும். வைத்திய கல்லாடம் என்பது சித்த மருத்துவத்தில் உள்ளது. இதை மதுரை இராம குருசாமிக் கோனார் பதிப்பித்துள்ளார். மருத்துவ யாழ் என்பது நாரதப் பேரியாழையும், கீசக யாழையும் விடச் சிறியது. இதில் 62 வகையான இசை தோன்றும். இதனை அறிஞர்கள் சீரிய யாழ் என்றும் தெய்வயாழ் என்றும் அழைப்பர். குறுக்காக வைத்துக் கொண்டு வாசிக்கும் புல்லாங்குழலே நாடெங்கும் காணப்படுகிறது. பழங்குடி மக்களின் கருவியாகவும், நாடோடிக் கருவியாகவும், சங்கீத வாத்தியமாகவும், வழங்கும் பெருமை பெற்றது. குறுக்காக வாசிக்கப்படும் எவ்விதச் சங்கீதத்திற்கும் ஏற்றது. விரல்களைப் பயன்படுத்திக் காற்றைக் கட்டுப் படுத்தி ஊதுவது. வெவ்வேறு கோணங்களில் உதட்டில் வைத்து வாசிப்பது என்பனவற்றால், நுட்பமான சுருதிகள், கமகங்கள் ஆகியவற்றை இசைப்பது ஆகியவற்றைக் குழலில் கொண்டுவர முடியும். குழல் இசைப்பவர்களும், கலைஞர்களும் மென்மையான ஒலியைத் தரும் மூங்கில் குழல்களையே விரும்புகின்றார்கள்.

**மகுடி** என்ற இசைக் கருவி பழமையானது. மேல்பகுதி காய்ந்த சுரைக் காயாலானது. கீழ்ப்பகுதி மூங்கில் அல்லது நாணல் கொண்டு

பொருத்தப்பட்டுள்ளது. மேல் பகுதி ஒரு குழாய், வெளியே தெரியாமல் தோல், அல்லது மூங்கில் பட்டையால் மூடப்பட்டிருக்கும். இக்கருவியைப் பற்றியும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சித்தர்கள் குறிப்பிட்ட ஓர் இசைக்கருவி "கின்னரி"யாகும். இசையாசிரியர் மதங்கரின் "பிருகத்தேசி"என்பது கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கின்னரிகள் பெரியது, சிறியது என்று இருவகைப்பட்டன. 75 மீட்டர் நீளமுள்ள சுரப்பலகை பொருத்தப்பட்டு 14 மெட்டுகளை உடையது. மெட்டுகள் கழுகின் மார்பெலும்புகளால் ஆனவை. இது சிறிய கின்னரியாகும். அடிப் பகுதியில் இருபரங்கிக் காய்களைப் பொருத்தி இருப்பார்கள். **கின்னரி** என்பது வீணையை ஒத்தது. அடிப்பகுதி மூன்று சுரைக்காய்களில் பொருத்தப்பட்டது.

**முன்னான்கு மெட்டுவைத்தார் கின்னரிக்கு**
**ஆனை நரம்பெடுத்து ஆட்டிவைத்தார் கின்னரியை**
**பூனை நரம்பெடுத்து பூட்டிவிட்டார் கின்னாரம்**
**முழங்கை நரம்பெடுத்துப் மூன்று பிகுவாக்கி**
**வாசித்தார் கின்னரியை வானுலகந்தான் அதிர**

கின்னரி என்ற இசைக் கருவிக்கு நான்கு வகையான மெட்டுகளை அமைத்தார். யானையின் நரம்பு எடுத்துக் கின்னரியை வாசித்தார். பூனையின் நரம்பைக் கின்னாரக் கருவியில் பொருத்தினார். முழங்கையின் நரம்பைக் எடுத்து மூன்று பிரிவாக்கிச் சேர்த்து வானுலகம் அதிரும்படி வாசித்தார்.

இராவணஹட்ட அல்லது இராவண வீணை என்பது குசராத், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள ஓர் இசைக் கருவி. இது கி.பி.7ஆம் நூற்றாண்டில் குறிக்கப்பட்டது. வரலாற்று ஆசிரியர்கள், இதைக் கண்டறிந்தவன் இராவணன் எனக் குறிப்பிட்டார்கள். இக் கருவிக்கு இராவணனுடைய பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்பது புதிராக உள்ளது. இது இன்று மேற்கு இந்தியாவில் வழக்கில் உள்ள பிடில் கருவியாகும். இக்கருவியும், சித்தர்கள் கூறியதும் ஒன்றா என்பது ஆய்வுக்குரியதாகும். இராவணன் பெயரில் சித்த மருத்துவ நூல்

இலங்கையில் உள்ளது. இராவணன் சிறந்த இசை வல்லுநன். அவனது கொடியில் வீணை பொறிக்கப்பட்டது. அவனின் இசைப் பற்றை உணர்த்தும். இக்காரணங்களாலேயே பிடில் போன்ற இசைக் கருவி "இராவண அத்தம்" என்றழைக்கப் பட்டிருத்தல் வேண்டும். வட இந்தியாவில் இன்றும் இக்கருவி நடைமுறையில் உள்ளது.

கேரளக் கோவில்களில் வழிபாடு 18 வகை இசைக் கருவிகளைக் கொண்டுள்ளது. சங்கு, சுத்த மத்தளம், தொப்பி மத்தளம், செண்டை, வீக்கன் செண்டை, திமிலை, இடங்கை, சேங்கிலை, இலைத் தாளம், மரம், குழல், கொம்பு, குழித்தாளம், நந்துணி, கரடிகை, படகம், கிடிபிடி, பிராணம் என்பன இசைக்கப்படுகின்றன. சங்கு, கரடிகை என்பன தமிழத்தில் வழக்கற்றுப் போனவைகளாகும்.

"ஞானக் காவியம் 1000" என்ற அகத்தியரின் நூலில் செயகண்டி, சங்கு, மாபேரி, தாளம், தாரை, எக்காளம், துந்துபி, மல்லாரி நகாறு, கின்னரி, வீணை, பூரி என்ற 12 வகையான இசைக்கருவிகள் கூறப்பட்டுள்ளன. "திருமணக் காட்சியில்" கூறப்படும் இக் கருவிகளில் சங்கு, எக்காளம் மட்டுமே பொதுவாக அமைகின்றன. சிற்பங்களில் சங்கு, தாளம், தாரை, எக்காளம், துந்துபி, வீணை என்பனவற்றைக் காண முடிகின்றது. செயகண்டி, மாபேரி, மல்லாரி, நகாறு, கின்னரி, பூரி என்பன பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. பல்வேறு வகையான ஒலியைப் பற்றிச் சச்சிதானந்த சூத்திரம் பாடல் 17, 18 இல் வருகின்றது.

**தோணப்பா, இதுக்கு மேல்தான் கேளு**<br>
**தொனியுடனே, முழங்குகின்ற வகையைக் கேளு,**<br>
**ஆனப்பா, முந்திமுந்தி மணியி னோசை**<br>
**அதன்மேலே, யானை என்ற சங்குநாதம் கேளு**<br>
**தொனியுடனே, முழங்குகின்ற வகையைக் கேளு**<br>
**ஆனப்பா, முந்தி முந்தி மணியினோசை**<br>
**அதன்மேலே பனைஎன்ற சங்குநாதம் – தொடுப்பா**<br>
**அதன்மேலே, சங்கு குழலின் நாதம்**<br>
**தொகுத்த தன்மேல்**<br>
**துடியுடைய இடியின் நாதம் கொடுத்துப்பார்**

**செவியதனைப் பாம்பு நாதம் குமரனே**
**மணி, வயிரத் தும்பி நாதம் எடுத்துப்பார்**
**யாழுடன், பேரிகையின் நாதம் இதனுடைய**
**தொகையது தான் பத்துமாச்சே.**

இதில் பத்துவகையான ஒலிகள் கூறப்படுகின்றன. மணிஒலி, உடுக்கு, "யானை" என்ற இசைக் கருவியின் ஒலி, சங்கு, யாழ், குழல், இடி, பாம்பு, தும்பி, பேரிகையின் முழக்கம். இப்பாடல் மிகவும் தொன்மையானது என்பதை, இசைக் கருவிகளில் ஒன்றாக "யாழ்" கூறப்பட்டுள்ளதால் அறியலாம். பல்வகையான யாழ்கள் கூறப்பட்டுள்ளதில் இப் பாடலில் வந்தது எவ்வகையான யாழ் என்பது தெரியவில்லை. "சகடை" என்ற இசைக் கருவியைக் கருவூர் தேவர் குறிப்பிடுகின்றார். இது உடுக்கு, முரசு என்றும் கூறப்படுகின்றது. "சச்சிதானந்த சூத்திரம்" துடி என்பதைக் குறிப்பிடுகின்றது. துந்துபி என்ற இசைக் கருவியைப் பற்றித் திருவிசைப்பா, திருக்கயிலாய ஞான உலாவில் வருவது போன்று, ஞான காவியம் 1000 இல் வருகின்றது. காளம் என்பது எக்காளம். இது பொன், வெள்ளி, செம்பு, பித்தளை ஆகிய உலோகங்களால் உருவாக்கப்படும். இதைப் பற்றியும் ஞான காவியம் 1000 இல் வருகின்றது. நரம்புக் கருவிகள், யாழ், வீணை, இரட்டைக் கின்னரி என்பனவாம். சச்சிதானந்த சூத்திரம் "யாழ்"இசைக் கருவியைப் பற்றிக் கூறும். கஞ்சக் கருவிகள் உலோகத்தால் ஆனவை. அகத்தியர் சௌமிய சாகரம், 1200 இல் பல்வேறு இசை ஒலிகள் கூறப்பட்டுள்ளன. **முட்டா, மணியோசை, சங்கினோசை, முழக்கடா, சகநாத ஓசையோடு கூட்டா, சங்கீதமேள வாத்தியம், குமறவே, நாகசுரமாம்.** மத்தளம் சகநாதம் என்பது "சகடை நாதம்" என்றே கொள்ளப் பொருத்தமாம். மேளம், நாகசுரம், மத்தளம் ஆகியவை சேர்ந்திசைத்த இசை நிகழ்ச்சியை இங்கு அகத்தியர் தருகின்றார். இக்காலத்தில் இது "ஆர்கெஸ்ட்ரா" என்று வழங்கப்படுவதை ஒத்திருக்கும். இசைக் கருவிகளை 64 பேர் இயக்குவது "உத்தம சம்பிரதாயம்" என்று "சங்கீத ரத்தினாகரம்" என்ற இசை நூல் விவரிக்கும். நட்டுவம் 4 பேர், பாடலியம் 8 பேர், கானப்பாடி 5, வங்கியம் 3, உடுக்கை 2, வீணை 2, ஆரியம் பாடுவார் 3, தமிழப்பாடுவார் 4,

கொட்டி மத்தளம் 2, சங்கு 3, காரைக்கால் அம்மையாரின் பதிகத்தில் சங்கம், படகம், தாளம், ஊர்பேரி, கொம்பு, தாளம், உட்டமர்தான், வீணை, தக்கை, உடுக்கை, குழல் என்ற இசைக் கருவிகள் பெயர் கூறப்படுகின்றன. காமிகாகமம் என்ற ஆகம நூல், 50 பெண்கள் ஆட, 34 துணை இசைக் கருவிகள் ஒலிப்பது சிறப்பானதாகும் எனக் கூறும். 400 பெண்கள் ஆட, 250 இசைக் கருவிகள் ஒலித்த இசை நிகழ்ச்சியை இராசராசன் கல்வெட்டில் காணலாம். போகர் 7000 இல் முதல் ஆயிரத்தில் பேசப்பட்டுள்ளது. **வாமென்ற மண்ணெடுத்துத் தாளம்போல வகையாகப் பிடித்துமே, தாளம் கொட்டி** இதில் தாளம் பற்றிய செய்தி அதை இயக்குவது பற்றிக் குறித்துள்ளது. மண்ணில் ஆனது, கடம் என்பதாகும். இது இன்னும் வழக்கிலுள்ளது.

இசைக் கருவி "வேல் கொண்டுமே, குழல் கொண்டுடன் மூலமே" என்ற வரிகளால் புல்லாங்குழல் பற்றியும் சிலம்பின் ஒலியைச் "சிலம்பொலி கேட்டு, வாலாம்பிகை" என்றும் ஊதியதாரை, வெளியில் நல்ல "ஓசை சிலம்பொலியில், ஓங்கு தனஞ் செயன்தான்" "நாணியும், சங்கீதத்தரையின் ஏவியும் விட்டேன்" 'ஊதும் தாரை சுழியோசை காணாமலும்........... கண்டதாரையறிந்து, ஊதிடும் வாசியை" என்றும் "ஊதி மூலத்தின் தாரையினால் உடல், உயிர்களும்" "ஒட்டிக் கண்ட தாரை ஓயாமல் ஊதிடும்" என்றும் வருகின்றது. சிலம்பின் ஒலி, தாரையின் ஒலி என்பன பாடல்களில் காணப்படுகின்றன. இவற்றால், இக்கருவிகளை இசைத்துப் பாடும் முறையானது இருந்துள்ளதை அறியமுடியும். வீணையைப் பயன்படுத்துவது பிற்கால வழக்கம் இங்குக் கூறப்படுகின்றது. மிடற்றோசையைப் பற்றித் திருவள்ளுவர், **பஞ்சரத்தினம் 500 இல் மக்கியும், இருகண்களில் பீளை சொரிய, மழலைபோல் குரலது தளரப் பின்பு, தாளக் கருவியைப் பற்றியும் பண் பற்றியும் போகர் திரிந்துவுமே, திரிபுரத்தில் பண்ணும் சிவன் தானும், திருவாலங்காட்டின் முன்னே** என்றுரைப்பார். தேவதத்தம் என்ற சங்கை அளித்தது குறித்துப் போகர் கூறுகின்றார். **அளிக்கவுமே தேவதத்தன் என்ற சங்கை அர்ச்சுனர்க்கு அளித்தானே இந்திரன்** சலங்கை மணியானது இசைக்கருவிகளில் ஒன்றாகும். இதனைப் போகர் குறிப்பிடுகின்றார். "சமுச்சயங்கள் வராது சலங்கை மன்னே" என்றும்,

"சலங்கை மணி, புகை கண்டால், சரக்கின் புகைதான்" என்றும் கூறுவார். திருவள்ளுவர் பஞ்சரத்தினம் 500 **இல் பாடிக் கறக்கும் வகையறியாக் காதகர்க்கு, பாலேது, இறக்கும் துறை அறியாரே** என்பதால், விலங்குகளிடத்தில் இசையுணர்வு உள்ளதை அறியலாம். திருவள்ளுவர் பஞ்சரத்தினம் 500இல் இப்பாடல் இசையைப் பற்றிக் கூறுகின்றது.

**பாரப்பா செயகண்டி சங்கு பூரி**
**பரிவான மாபேரி தாளம் தாரை**
**ஏரப்பா எக்காளை, துந்துபி மல்லாரி**
**இயல்பான பரிசங்கு இராவ ணாத்திரம்**
**நாரப்பா, நாக ஆனந்தமா மேளங்கள்**
**நகாறு கின்னரி வீணை பதினெண் வாத்தியம்**
**போரப்பா, பூசைசெய்து, தியானம் செய்தால்**
**புகழான கணபதி தான் புனிதமாமே.**

விநாயகரை வழிபாடு செய்யத் தியானம், பூசை முறைகள் என்பன கூறப்பட்டுள்ளன. பதினெட்டு வகையான இசைக் கருவிகள் இதில் பயனாகின்றன. அவையாவன: சேகண்டி, சங்கு, பூரி, எக்காளம், தாளம், தாரை, மாபேரி, துந்துபி, மல்லாரி, பரிசங்கு, இராவணாத்திரம், நாகம் (நாகசுரம்), மேளங்கள், நகாறு, கின்னரி, வீணை ஆகிய பதினெட்டு வகையான இசைக் கருவிகளுடன் வழிபாடு நடத்தப்பட்டது. மேளங்கள் என்பது இக்காலத் தவில் என்ற தோற் கருவியையும் பதினெட்டு வகையான இசைக் கருவிகளுடன் கூடிய நிகழ்ச்சியையும் உணர்த்துகிறது.

**காணடா நாகசரம் செய்து தூரி**
**கருவாகப் பதினெண் வாத்தியத்தோடையா**

பதினெட்டு இசைக் கருவிகளுள் ஒன்றாக நாதஸ்வரத்தைக் கூறுகிறார். திருக்கைலாய ஞான உலா,

**நந்திமாகாளர் கடைகழிந்த போழ்தத்து**
**வத்து வசுக்கள்**

**மன்னும் அகத்தியன் யாழ் வாசிப்பர்**

**ஈசானன் வந்தடைப்பை கைகொள்ள அச்சுனிகள்**

கடம், முகர்சிங், தபேலா, கொன்னக்கோல், நாகசுரம், தவில், துருத்தி, தாளம், சங்கு, கிடுகட்டி, சூரியப்பிரபை, சந்திரப்பிரபை, சுருதிப்பெட்டி என்பன இடம்பெறுகின்றன. உடல், எலும்புகளாலானது. தாள வகைகள். பூர்ண கங்காளம், கண்டகங்காளம், சமகங்காளம், விடம்கங்காளம் எனப்படும்.

1. பூரி, 2. தாளம், 3. தாரை என்ற எக்காளை, 4. துந்துபி, 5. இராவணாத்திரம் 6. மேளம், 7. கின்னரி, 8. வீணை என்பன முதல் காண்டத்திலும், இரண்டாம் காண்டத்தில் மத்தளம், கொம்பு, நாகசரம், இராவணாத்திரம் என்பனவும் வருகின்றன. மத்தளம், டமாரம், கொம்பு, மல்லாரி, கின்னரி, வீணை, நாகசுரம், இராவணாத்திரம், பேரிகை என்பன கூறப்பட்டுள்ளன.

**துத்தி புல்லாங் குழல் தம்பூரா**
**சிறந்த நகரா நவபத்து**
**மத்தளம் தக்கை தப்பு கொம்பு**
**வங்கா எக்காளம்**

என்பன சித்தர் நூல்களில் கூறப்பட்டுள்ளன.

கங்காளம் என்பது உடலைக் குறிக்கும். உரையாடல் இன்றி இசையுடன் நடிக்கப்பட்டவைகளே, நாடகம் எனப்பட்டன. பிற்காலத்தில் உரையாடல் அமைந்ததால் முன்சொன்னவகை, "இசை நாடகம்" எனப்பட்டது. இசை நாடகங்களில் உடலசைவுகள் உள்ளன. கைகளையும், உடலசைவுகளையும் காட்டி, கருத்து விளக்கப்பட்டது. ஆவாக்கிய தொந்த அபிநயம் என்பது பாடகன் மெதுவாகப் பாடும்போது, பொருத்தமாக, நடிகை, இன்பம் தோன்ற நடிப்பதாகும். அரைவிழியாய் விழித்தல் "நிமீலிதிருஷ்டி" ஆகும்.

தமிழிசை என்பது ஒழுங்கிசையாகும். மேனாட்டு இசை ஒருங்கிசையாகும். ச முதல் நி வரை உள்ளது ஏற்றம். பின் இறக்கம். இதுவே மேளகர்த்தா எனப்படும். விம்மல்கள் ஒரு வினாடிக்கு

அதிகமாகும்போது காதுக்கு வெறுப்புணர்வு தோன்றும். மேலே சொன்ன இசை நட்பு, பகை என்று இருவகைப்பட்டது. ஏழிசைக்கும் அடிப்படையாக உள்ளது. விலங்கினங்களின் குரல் ஒலியாகும். இவ்வட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது. மிடறு மூலம் ஏற்படும் ஒலியே இசை எனப்படும். மிடறு அடிப்படையான இசைக் கருவிகளில் ஒன்றாம்.

| | | |
|---|---|---|
| விலங்கினங்கள் : | குரல் | - வண்டு, கொக்கு |
| | துத்தம் | - கிளி, குயில் |
| | கைக்கிளை | - குதிரை |
| | உழை | - யானை |
| | இளி | - மயில், குயில் |
| | விளரி | - பசு |
| | தாரம் | - ஆடு |

ஞானக்காவியம் இரண்டாம் காண்டத்தில் கூறப்பட்ட இசைக் கருவிகள்.

**காணப்பா, நாத கிங்கிணி மல்லாரி**
**கண்மணியே, டமார மல்லாரி வீணை**
**ஏனப்பா, எக்காளை, இராவாணாத்திரம்**
**என்மகனே விடும்பை, கின்னரியோ டொக்க**
**தாணப்பா, டமாரமாய் தாளம் தமருதாரை**
**தருவானடம்பேரி, சங்கு நாதம்**
**பூணப்பா, பூரியோடு பரிமத்தாளம்**
**புகழான தம்புருவாத்தி யந்தான் காணே**

**காணடா நாகசரம் செய்துதாரி**
**கருவாகப் பதினெண் வாத்தியத் தோடையா**

காணுங்கள் நாதசுரம் செய்யப்பட்ட துத்தாரி ஆகிய பதினெட்டு வகையான இசைக்கருவிகள் கூறப்பட்டன.

கோயில் புராணத்தில், உமாபதிசிவாச்சாரியர் சுட்டியுள்ள இக்கருவிகள் யாவும் சித்தர் நூல்களில் வருகின்றன. நாகசுரமும் சதாரியும் பதினெட்டு வகையான இசைக் கருவிகளில் அடங்கும்.

**நடவான நாதகிணிகிணி ஓசைதான்**

**நாமெப்பா, சொல்வ மப்பா, தொனி முழங்கும்**

**சடவான, சங்கு நாத தொனி என்னாலே**

**சமர்த்தாகச் சொல்லுவதற்கு நாவொன்றில்லை**

ஒலியை எழுப்பும் சலங்கையும், முழுங்கும் சங்கின் ஒலியையும் பற்றி விளக்குவதற்கு எவர்க்கும் இயலாது.

**மெய்யப்பா, நாதஒலி சங்கு நாதம்**

**மேலான டம்பேரி தாளம் தாரை**

**மெய்யப்பா, நாத கிண்கிணி கின்னரி வீணை**

**எய்யப்பா, இடிமின்னல் மழைகள் போலே**

**என்மகனே, பதினெண் வாத்தியம் காண்பாயே**

உண்மையாகக் கூறுகின்றேன் சங்கின் ஒலி, டம்பேரி, தாளம், தாரை, சலங்கை ஒலி, கின்னரி, வீணை இவைகளின் வழி எழுந்த இன்னிசை இடி மின்னல் மழைபோல இருப்பதைக் காணுங்கள். இதில் பல்வேறு இசைக் கருவிகள் ஒன்றாக இணைந்து இசைக் கச்சேரியை நடத்துவதுபோல உள்ளது.

**செம்பு நாதத்தொனி முழுங்கும் தேராட்டம்**

அக்காலத்தில் தேரோட்டத்தின் போது சங்கு பயன்பட்டது.

செம்பால் செய்யப்பட்ட ஒலி எழுப்பும் இசைக் கருவி பயன்படுத்தப்பட்டது.

**சயம்பிடிவீர், சங்கு, செய்கண்டி நாதம்**

**டம்பேரி, பூரி எக்காளை தாரை**

**வியம்பிடிவீர், வீணை கின்னரியும் மேளம்**

**மேலான பதினெண் வாத்தியத்தோ டாமே**

வெற்றி தரும் சங்கைப் பிடித்தும், சேகண்டியின் ஒலியும், டம்பேரி, பூரி, எக்காளம், தாரை, வீணை, கின்னரி, மேளம்(தவுல்) ஆகிய பதினெட்டு வகையான இசைக் கருவிகளுடன்,

**ஓடான சகல மேள வாத்தியத்தோடையா**

அனைத்து வகையான நாகசுரத்துடன் கூடிய இசைக் கருவிகள் பற்றிக் கூறப்படுகின்றன. இதில் சகல என்ற சொல் நாகசுரத்தில் உள்ள திமிரி, பாரி ஆகிய வகைகளை மறைமுகமாக உணர்த்துகிறது. மேளம் என்பது நாகசுரத்தைக் குறித்தது.

அகத்தியர் சௌமிய சாகரம் 1200, இல் வரும் முத்தமிழ் பற்றி,

**ஏன இயல் இசை நாடகத்தமிழ் மூன்றும்தேறு**
**இதமென்ற முக்குணம் இருக்கும் தானே**

என வருகின்றது.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழை மனிதனின் மூன்று வகையான இயல்புகளுக்கு ஒப்பிட்டுள்ளார். மூன்று வகையாய இயல்புகளாவன இரஜத குணம், தமோ குணம், சத்துவக் குணம் என்பனவாகும்.

"தந்திர சமுச்சயம்" என்ற கோவில் வழிபாட்டு நூலில் சங்கம் (சங்கு), படகம், தாளம், ஊர்பேரி, (இடுப்பில் கட்டிக்கொண்டு தொடையில் தாங்கி, அடிக்கும் பேரிகை) கொம்பு, காளம், உட்டமர், தமர், வீணை, தக்கை, உடுக்கை, குழல் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இக்கருவிகளில் பல சித்த மருத்துவத்தில் கூறப்பட்டவையாகும்.

# 5. சித்தர் இலக்கியத்தில் இசை

சித்தர் மருத்துவத்துடன் தொடர்புள்ள சில கும்மிகள்.

1. அகத்தியர் வைத்தியக் கும்மி
2. வாக்காஸ்பத்திரி கும்மி
3. அகத்தியர் வைத்தியக் கும்மி
4. கொங்கணர் வாலைக்கும்மி
5. வைத்தியக்கும்மி, (கருணானந்த சுவாமிகள்)
6. ஆயுர்வேத வைத்தியக் கும்மி
7. அகத்தியர் வைத்தியக் கும்மி
8. யூகி முனிவர் வைத்தியக் கும்மி
9. தன்வந்தரிக் கும்மி

சுவடியாக உள்ள கும்மி:

1. நந்திக் கும்மி.

திருக்குற்றாலக் குறவஞ்சியில், திரிகூட இராசப்பக் கவிராயர் விநாயகர், முருகன், குற்றால நாதர், குழல்வாய் மொழியம்மை, கலைமகள் ஆகிய இறைவர்களை வணங்கி, சைவ சமயக் குரவர் நால்வர், அகத்தியர் ஆகியோரை வாழ்த்தி நூற்பயனை அவையடக்கத் தோடு கூறுகின்றார்.

ஐதராபாத்தில் உள்ள செஞ்சு மக்களிடம் கின்னரி என்ற இசைக் கருவி உள்ளது. அது மூன்று சுரைக் குடுக்கைகளையும், ஒலிபரப்பும் பலகைகளையும் உடையது.

இதுபோலவே, யமக வெண்பாவில் தேரன் "பதுமாழை, மந்தன் மேல் பண்" என்பார். மத்தளத்துடன் கூடிய இசை என்றும், ஊமத்தம் பூவைத் தலையில் சூடி மத்தளம் இசைக்கு ஆடும் சிவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

தமிழிசையானது வாய்பாட்டாலும், கருவிகளாலும் இசைக்கப்படுவன என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. வாய்பாட்டில் குரலானது இனிமையுடன் இருத்தல் மிக அவசியமானது ஆகும். இதைப்பற்றிச் சித்தர் இலக்கியங்களில் நிரம்ப வந்துள்ளன. "போகர், 7000" என்னும் நூலில் பாட்டிசைப்பது குறித்து, குறிப்பிட்டுள்ளார். **வண்டான கூட்டங்கள் கீதம் பாடும், மகத்தான தொனியோசை அனேகம்பாரே** இதில் வாய்பாட்டின் ஒலியானது, வண்டுகளின் கூட்ட ஒலிக்கு ஒப்பிடப்பட்டது. வண்டுகளின் கூட்டம் எழுப்பும் ரீங்கார ஒலி, பாட்டொலியை ஒத்துள்ளது. கீர்வாணி இராகத்தை ஒத்துப் பாட்டோசை இருக்கும்.

**சண்டமாருதம் போல நூல்கள் தானும்**
**சார்பான கீர்வாணம் என்னலாமே**
**சாழல் எனும் ஓசையது முறிந்துபோக**
**சட்டமுடன், யாம் உரைப்போம், வன்மைதானே**

ஓசையானது கடலின் இரைச்சலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது "கடல் இரைந்தால் போல் சப்தம், கோப்பன் குரலாம்".

எனவேதான் சித்தர்களில் தேரையர் இசைக்கு முதன்மையைத் தந்துள்ளார். "மருத்து பாரதம்" நூலையும் இயற்றி, நாடகத்தைப் பரப்ப வழிகோலியுள்ளார். மேலும் "பண்கொட்டு, மென்மொழியாய்" என்றும் கூறுவார். பண்ணுடன் சேர்த்து, கையால் தாளமிட்டுக் கொண்டும், எண்ணிக்கையைக் கணக்கிட்டுக் கொள்ளுவதான முறைகளைக் கையாளும், மென்மையாகப் பேசும் பெண் என்றும் குரலோசையைச் சிறப்பிப்பார். மென்மொழியை, பண்ணுக் கிணையாகக் கூறியுள்ளார். வெறி அழல் நோயைப் பற்றிக் கூறும்போது **பாதிநேரம் அசைத்து வரும் பாடி ஓடி எழுந்திருக்கும், பணைத்தெழுந்து பாடும், மதி தப்பியும்** என்பார். இதில் பாடுதலான தொழில், ஓடுதல், எழுந்திருத்தல் என்பன வருகின்றன. மேலும் "பாடாமிடறும், பண் பாடிடுமே" என்றும் குறிப்பிடுவார். மிடறு பண்ணுடன் சேர்ந்தொலிக்கும் நிலையை, தன் நூலில் விளக்கியுள்ளார். இதுபோன்றே குரல் என்பது மட்குடத்தைத் தட்டியது போன்ற குரல் ஒலியைக் கொண்டு, ஆனந்த பைரவி எனும் இராகத்தை இசைத்தலாகும். அமைதியுடன் குரலானது மகிழ்ச்சியுடன் இருக்கும்

என்று பொருள் கொள்ளலாம். "பந்தணிக் குழலாய்! கேளாய்". இங்கும் குழல் போன்ற குரலை உடைய பெண்ணே, கேள் என்ற சொல்லைக் கூறுகின்றார். பாகார், மொழியீர், தேங்காயின் பால் என்று பாடல் 437இல் உள்ளது. காய்ச்சி எடுத்துள்ள கரும்பின் பாகுபோல, இனிமையான குரலை உள்ள பெண் என்று மகடூஉ முன்னிலையாகப் பெண்ணை அழைத்துள்ளார். குரலினிமையைப் பற்றிப் பலவிதமான பொருள்களுடன் ஒப்பிட்டுள்ளார்கள்.

இசையைத் தக்க உச்சரிப்புடன் பாடாவிடில், நகைப்புக்கு இடந்தரும் செயலாக அமையும். பாடலின் பொருள் உணர்ந்து, அதற்கான பாவமுடன் பாடுதலே, நல்ல பெயரை ஈட்டித் தரும். இன்னொரு பாடலில் குரலினிமையைத் தேனுக்கு ஒப்பிட்டுள்ளார். "தேனேர் மொழியாய் கேள், தேரை குணந்தான் இயம்புகிறேன்"[17] தேன் மொழியை உடைய பெண்ணே, தேரை என்ற குழந்தைகளுக்கு வரும் நோயைப் பற்றிக் கூறுகின்றேன். தேரை என்பதற்கு, தேரையராகிய நான் கூறுகின்றேன் என்னும் பொருளமையுமாறு பாடுகின்றார். குயிலின் ஒலியை ஒத்ததாக, பெண்ணின் நிறம் கருமை. குரல் குயிலின் இனிமை "காமே, கறுத்தகுயிலாளே, கலந்த தோடமிதே".

"பிடகர்" என்னும் சொல்லானது, பழஞ் சுரங்களைப் பாடுவோரைக் குறிக்கும். பிடாரர் என்றும் அழைக்கப்படுவார்கள். "தமிழிசை வல்லார் " தேவாரம் பாடுபவர்கள். இது பட்டாரகர் என்னும் மருஉப் பெயராகிய படாரர் என ஆயிற்று. எனவே, பிடகர், பிடாரகர் பண்இசைவல்லாரைக் குறிக்கும். பிடர் என்பதற்கு மருத்துவர் என்ற பொருளும் உண்டு. தேரையர் தன்னுடைய காப்பியத்தில் இச் சொல்லைக் கையாண்டுள்ளார். "பனசை, கனி, வளி, பயித்திய ஆங்காயின், முறுவாதம் என்றியம்புவர் பிடகர்." பனைசக்கனி, பலாப்பழம், பலாப்பழத்தின் இயல்பைக் குறித்துள்ள தேரையர், மருத்துவரைக் குறிக்கப் பிடகர் என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். இதுபோன்றே வாரம் என்ற சொல்லானது வருகின்றது. "வாரம்" என்பது பண்ணிசைத்தல் என்னும் பொருளை உடையது.

"வாரமுரைப்பார், நோய் வாரமுரைப்பார்". வாரம் உரைப்பார் என்பது வாரத்தின் பகுதிகளை, திதி, கரணம், யோகம், நாள்,

நட்சத்திரத்தினுடைய இயல்புகளை அறிவிப்பவர். வாரம் உரைக்கும் மருத்துவர்களின் இயல்பு, நோயின் வரலாறு, கணிப்பு, மருந்துகள் என்பனவற்றை விளக்குவார் என்று மருத்துவர்களுக்கும் ஆரியர்களுக்குமுள்ள ஒற்றுமையையும் "சுரம் கணிப்பார், சுத்ததைத் தணிப்பார்" வேதியர்கள் ஏழு சுரங்களில், சாமவேதத்தைப் பாடலாகப் பாடுவார்கள், நான்கு வேதங்களுக்குத் துணையாகக் காந்தர்வ வேதத்தைக் கொள்ளுவார்கள். மருத்துவர்கள் சுரம் என்னும் வெப்பு நோயை அதிகமாகாதபடி, மருந்துகளைத் தந்து, நீக்குவார்கள். இவ்வாறு சுரத்தைப் பற்றியும், வாரத்தைப் பற்றியும் தேரையர் பொருத்தமாகக் கூறியுள்ளார். மேலும் தேரையர் மகாக்கரிசலில் மருத்துவராக வரக்கூடாதவர்களின் இலக்கணம் கூறுகின்றார். "உலோபி, கபாலி, உசானி, பாண்டிலி, உடோலி - மேளம் கொட்டுபவன், காபாலி, அங்காளம்மை மருளன், உசானி, பாடகன், பாண்டிலி, தேர்ப்பாகன்" என்று பொருள்கொள்ளப்பட்டுள்ளது. இதில் உசானி- வடஇந்தியப் பாடகன் என்பதே பொருத்தமாக இருக்கும். தமிழிசையைப் பாடாமலிருந்த காரணத்தால், தேரையர், இவ்விசையை வெறுத்து, மருத்துவனாக வரத் தகுதி இல்லாதவர்களின் பட்டியலில், சேர்த்துள்ளார். உசேனி இராகமானது, தேரையர் காலத்தில் புகழ் பெற்றிருத்தல் கூடும். எனவேதான், அந்த இராகத்தைப்பாடும் பாடகனை உசேனி என்றழைக்கின்றார். ஆரியம்பாடுவார் தமிழ்பாடுவார் என்று பெரிய கோவில் கல்வெட்டில் வருகிறது.

**பாட்டும், தேரையன்,**
**பாடலும் உண்மையே**

**பாடும், தேரையன் பாட்டு பொய்யாதே**

என்றும் இசையைப் பற்றி எடுத்துக்காட்டுவார்.

தேரையர் 1500 என்ற நூலில்,

**பறக்கும் என்றல்லோ, பாடின, உண்மை காண்,**
**பறக்கும் என்றல்லோ, பாடினர் தேரனே**
**அறியாமல் பாடிவைத்தோம், நாள்கள் தோறும்**
**பாட்டுத் தப்பாமல் பாங்காய் அறுவேளை**

**இயம்பும் தேரன், இசையும் மொழியிது**
**இசையஞ்ச திரவியமாம் இருவேலி யசையாத**

என்றெல்லாம் விவரித்துள்ளார். இதுபோன்றே நஞ்சு நூலில்,

**இசைப்பா, இருவங்கம், கொண்டோருக்கு**
**இசைப்பம், கரும்பு இலையே**

என்று வருகின்றது.

"திருவள்ளுவர் ஞானவெட்டி 1500" என்ற நூலில் இசைபற்றி "இங்கித நாத, சங்கீதமங்களமதாய்" என்றுள்ளது. "தேடலும், கவிபாடலும், அதி கூடலும், நடமாடலும்", "உச்சிதமாய்க் கண்டத்தொனியில் ஓடிய தாரை" என்று மிடற்றோசை குறித்தும் சங்கத் தாரையின் ஏணியும் விட்டேன்" "பாட்டிய ஊஞ்சல் அசைய, நாட்டிய மாதர், பரத சங்கீதமுடன் பாங்கிகள் ஆட, ஆட்சி". இதில் இசை, சங்கீதம் என்றழைக்கப்பட்டுள்ளது. **சீரான கொங்கை மட மாதுகள் – பாடச் சித்திரச் சதுர்கூட எல்லாம், பிரகாசிக்கவே ஆட்டி கோகிலம் போல் அன்னை, என்மேல் சிந்துகள் பாட, வீரான மாதர் வந்து வீணை வாசிக்க.** இதில் பாடலுடன் ஆடலும் கூறப்பட்டுள்ளது. நடனம், "சதுர" என்ற பெயரிலும் வீணையை இசைக் கச்சேரிகளில் வாசிப்பது குறித்தும் குறிப்பிடப்படுகிறது. சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான சிந்து பற்றியும் உள்ளது. நச்சினார்க்கினியர் தன்னுடைய உரையில் சித்தராரூடச் சிந்து என்ற சித்த மருத்துவ நூலை மேற்கோளாகக் காட்டுவார்." **கோகில சிந்துகள் பாடி, அன்னை துதிக்க................வண்டுமொழி கிள்ளை என்னும் மாதர் கூடியே, மதுரவாக்கியமுடனே, பதங்கள் ஒக்கியமாக ஆட்டி என்றும், சதுர் கூடமெல்லாம் நிறைந்து தாதிகள் பாட திருத்த உடலும், வச்சிர ஊஞ்சல் அசைய – மாதர் தெளிந்து கலிகள் பாடி, என்னைத் தள்ளவே ஆட்டி** என்றும் வந்துள்ளது. தேவாரம் என்ற சொல்லால் இசைபோது என்றும் "சத்தமுடன் தேவாரம் கூகைபோலும்" என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கீதம் என்ற சொல்லால் இசையைச் சுட்டுவார். "பேரிகை கொட்டி முழங்க, சங்கீதமெங்கே". என வருகின்றது. மிடற்றோசையுடன், பேரிகையைப் பயன்படுத்தும் நிலை இருந்தது என்றும் நடனமுடன் பாடல் இசைக்கப்பட்டது **குறித்தும் காட்டப்படுகிறது. மேலும்**

**எண்திசையும் வான முதலிடம் கொள்ளாத, இயல்பெல்லாம் பாடுகின்றேன், இனிதான் காணும்"**

கண்ணி என்னும் சிற்றிலக்கிய வகையைப் பற்றிப் பதினாறு கண்ணி, மதி ரவி, சூழும் பாடலை யான்" எனச் சொல்லப்பட்டுள்ளது. முத்தமிழ் பற்றி, "முத்தமிழ் அமிர்த சிவஞான சுரூபி" "முத்தமிழால் குறு முனி அனுக்கிரகம், இருந்தமையால் முடித்தாண்டே". இடியை ஒத்தும், குயிலை ஒத்தும் குரலானது ஒப்பிடப்பட்டுள்ளது." "அண்ணமாரே, கேளீரேல், அந்த அஞ்சு திங்கள், பாடல்தனில், என்ன என்று, யானுரைப்பேன், நல்ல இடிபோல், இடி முழங்கிடவே" **"குயில்போல் இளமொழி மடமாது – இரு"** என்று வருகின்றது.

"ரீங்காரம்" என்ற வண்டின் ஒலியை மச்சமுனி தீட்சை ஞானம் 55 "இருக்கும் சுழிமுனை ரீங்காரம் மேலே" எனக் குறிப்பிடுகின்றது. "ரீங்காரத்துள்ளே இருக்கின்ற வல்லபை" (மச்சமுனி ஞான தீட்சா விதி 100- பாடல் 7). பேரொலியை முழக்கம் என்பார்கள். "மூலத்தில் நின்ற முழக்கம் அறிந்திலார்". இசையானது மூலாதாரத்திலிருந்து எழும்புவதாக நூல்கள் கூறும்.

"நடை" என்ற இசைத்தமிழ் பற்றித் **தேரையர் அருளால் சிறந்த தமிழ் நடை சொல்லுவான் போல், ஒரு நாளும் குறையாது** முத்தமிழைப் பற்றி **"நந்தீசர் நிகண்டு 300"** என்ற நூலில் **இயல் இசை நாடகத் தமிழ் மூன்றும் தேறு, இதமென்ற முக்குணம் இருக்கும்தானே.** பண் பற்றிய செய்தி" கானொடு காற்றினாப்பண், கட்டியே வித்துமாச்சி". **தேரையர் வைத்தியம் 1000 "** என்ற நூலில் இசையைப் பற்றிய ஒரு பாடல் வரி" "இசைத்தனர் பன்னருந் தமிழின் படியைக் கண்டே". வாரம் என்ற சொல்" "வார மட்டும் வனமுலை மாதே கேள்". இசையைப் பற்றி" இயம்பும் தேரன் இசையும் மொழியிது" "இசைப்பா, இருவங்கம் கொண்டோருக்கு நல்ல இசைப்பாம், கரும்பு இலையை" என்று இசைத்தல் பற்றிக் கூறுகின்றார். மிடற்றோசை என்ற வாய்ப்பாட்டைப் பற்றி "உச்சிதமாகிய பண்டத்தொனியில் ஓடிய தாரை" என வருகின்றது. குரல்வளை ஒலி, தாரையின் ஒலியுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. மனித உடல், யாழ் போன்ற இசைக்கருவி என்று "கருணாமிருத சாகரம்" கூறும். திருவள்ளுவர் "நாணியும் சங்கத்தாரையின் ஏணியும்

விட்டேன்." தாரையுடன், சங்கும் ஒப்பிடப்படுகிறது. நடனத்துடன் சேர்ந்த இசையைப் பற்றியும் தொடருகின்றார்

> **பாட்டிய ஊஞ்சல் அசைய, நாட்டியமாதர் பரத சங்கீதமுடன் பாங்கிகள் ஆட, ஆட்டி**
>
> **கோகிலம் போலன்னை என்மேல் சிந்துகள் பாட, வீரான மாதவர் வந்து வீணை வாசிக்க,**
>
> **சீரான கொங்கை மடமாதர்கள் பாடச் சித்திர சதுர்கூட எல்லாம் பிரகாசிக்கவே ஆட்டி**

இதில் கூறப்படும் சதுர் என்பது பரத நாட்டியத்தின் பழம் பெயராகும். "சதுர்" என்பது "சதிர்"என்று மாறி வந்துள்ளது. இசைக் கச்சேரிகளில் வாசிக்கப்படும் வீணை நடனத்திற்கான வாய்ப்பாட்டு பற்றியும் கூறப்பட்டுள்ளது. நடனமாடும் இடம் "கூடம்" எனப்பட்டது. இதைச் "சதுர்கூடமெல்லாம்" "நிறைந்தது தாதிகள் பாட". நடனமாடும் இடங்களில் பணிப் பெண்கள், இசையுடன் பாடுகின்றார்கள். "சாலப்புளியதின் அரளைகள், சதிருடன்". இதில் "சதிர்" என்ற சொல்லாட்சி வந்துள்ளது. சதிர் என்ற சொல், நடனத்தைக் குறிப்பது, இங்கு இவ்வாறு இடம் பெறுகிறது. **"சட்டி அரைவாசி சதுருடனே தானிட்டுத் தட்டி, கல் உப்பிட்டுச் சதிராக"** வாய்ப்பாட்டைப் பற்றிப் " பாடாது பாடலாம் பாடியே". கிளி, வண்டு என்பன பெண்களின் குரலுக்கு ஒப்பிடப்படுகின்றன. **வண்டுமொழி கிள்ளை எனும் மாதர் கூடியே – மதுர வாக்கியமுடனே பதங்கள் ஒக்கியமாக ஆட்டி.** இதில் இன்றும் நடனத்திற்குப் பாடப்படும் பாடல்களைப் "பதங்கள்" என்றே இசைவல்லார் கூறுகின்றனர். இசையைச் "சங்கீதம்" என்றே கையாளுகின்றார். "கந்திரமா நடன சங்கீதமெங்கே". நல்லிசை அல்லாதவற்றை, கோட்டானின் ஒலிக்கு ஈடாகக் கூறியுள்ளார். **சத்தமுடன் தேவாரம் கூகை போலும் சதாநித்தியம் ஓதிக் குடிகெடுப்பார் ஆண்டே** எனவே, தேவாரத்தை இசையுடன் பயிற்சி பெற்றவர்கள் பாடியதை இதன் மூலம் அறிய முடிகிறது. இசைப் பயிற்சி இல்லாமல் ஓதுவது, கோட்டான் ஒலி எழுப்புதல் போன்றது. கோட்டான் ஒலி, தீமை தரும் என்பது உலக வழக்கு. இசைக் கருவிகளில் ஒன்று பேரிகை. வாய்ப்பாட்டுடன்

பேரிசையைச் சேர்த்து இசைத்துள்ளார்கள். இக்கால "டிரம்" கருவியை, இசைப்பதை ஒத்துள்ளது''. பேரிகை கொட்டி முழங்க, சங்கீதங்களாலும்''. நடனமுடன் சேர்ந்த வாய்ப்பாட்டு பற்றி சித்தர்களின் இலக்கியங்களில் வருகின்றன. உண்ணும்போது செய்யக் கூடாதவை "பாடல், ஆடல், பேசல், படிப்புறக்கம், வாய் கைப்போர்". வாய்ப்பாட்டைப் பற்றி இராமதேவர் "குணமும்பெற்ற அதிசயங்கள் பாடிப்பாடி" என்றும் "பாசையதுமிகப் பேசிப் பாட்டுப்பாடி" என்பார். பண்ணைப்பற்றி யூகி முனிவர் "பண்ணகப் பாகத்தைவிட்டு விட்டு" என்றுரைப்பார். அகத்தியரைப்போல நந்திதேவரும் இசையுடன் தொடர்புடைய சித்தர். இவர் திருமூலரின் ஆசிரியர் ஆவார். இவர் சிவபெருமான் நடனம் ஆடும்போது, மத்தளம் இசைப்பார். குடமுழா இசைப்பதாகத் தமிழ் இலக்கியங்களில் வருகின்றது. இதைப் பற்றி யூகி முனிவர் குறிப்பிடுகின்றார்,

**தூறவே துந்துபியின் முழக்கத் தோடே,**
**துடியான நந்தியைத்தான் கண்டு கேளு**

அப்பர் தன் தேவாரத்தில் "குடமுழ நந்தீசனை வாசகரைக் கொண்டாய்" என்று குறிப்பிடுவார், திருமணஞ்சேரிக் கல்வெட்டில் "நின்றாடி அருளுகின்ற பரமசாமிக்கு குடமுழா வாசிக்கின்ற நந்தீசன்" என்று உள்ளது. நந்தீசரால் "பாரசைவம்" தோன்றியது. துந்துபி என்பது உலோகத்தாலான பெரிய குழலாகும். இக் கருவியைக் குறித்து, நந்தியம்பெருமானிடம் கேட்குமாறு யூகி முனிவர் கூறுகின்றார். அருணகிரிநாதரைப் பற்றி அகத்தியர் தன் "கௌமதி நூல் 400" இல் "அப்பனே, அருணகிரி வெளியாய்ச் சொன்னான்''. இவர் பிற்காலத்திலுள்ள அகத்தியராகலாம். இந்த நூல் மதுரை இராம. குருசாமிக் கோனாரால் பதிப்புச் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. இசையை அரங்கேற்றுதல் மரபு இன்றும் உள்ளது. "அங்கமாய் பாடி அரங்கேற்றி". இசை இலக்கணம் பற்றி அறியாதவர்கள் "மெல்லவே சுருதி முறை அறியாவாதி" என்று பாடியதைப் பற்றிச் சுட்டுகின்றார். எனவே அக்காலத்தில் இலக்கணம் அறியாத இசைப் புலவர்கள் இருந்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது. இவ்வகையான இசை இன்றும் நாட்டுப்புறக் கலைகளான தெருக்கூத்து, கணியன் கூத்து

நலங்கு, இரங்கல், கும்மி, கோலாட்டம், போன்றவைகளில் இடம்பெறுகின்றது.

இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களின் பகுதியாகத் தொழில் களப்பாடல் என்ற பிரிவு உண்டு. அதாவது பயன் கருதி மருத்துவத் தொழிலில் உளவியல் சார்ந்தது என்று கொள்ளலாம். தொழிற் களப்பாடல்களில் சார்ந்ததாகப் பேயோட்டுவதற்காகப் பாடும் உடுக்கடிப் பாடல்கள் அமைகின்றன. உடுக்கை சங்க இலக்கியத்தில் துடி என்று அழைக்கப்பட்டது. இன்றும் இவ் இசைக் கருவி கிராமப்புறப் பூசாரிகளால் கோயில் திருவிழாக்களில் குறி சொல்லுவதற்கும் பேய் விரட்டுவதற்கும் பயன்படுகிறது.

சுவடியாக உள்ள கும்மி

திருக்குற்றாலக் குறவஞ்சியில், திரிகூட இராசப்பக் கவிராயர் விநாயகர், முருகன், குற்றால நாதர், குழல்வாய்மொழியம்மை, கலைமகள் ஆகியவர்களை வணங்கி, சைவ சமயக் குரவர் நால்வர், அகத்தியர் ஆகியோரை வாழ்த்தி நூற்பயனை அவையடக்கத்தோடு கூறுகின்றார். அகத்தியர் சித்தமருத்துவத்தின் முதல்வர். இவரைக் குறவஞ்சியின் ஆசிரியர் வணங்குவது இயல்பாகும்.

**சண்டமாருதம் போல நூல்கள் தானும்**
**சார்பான கீர்வாணம் என்னலாமே**

**சாழல் எனும் ஓசையது முறிந்து போக**
**சட்டமுடன், யாம் உரைப்போம், வன்மை தானே**

குரல் ஓசையானது கடலின் இரைச்சலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. "கடல்" இரைந்தால் போல் சப்தம், கோப்பன் குரலாம்". தேரையர் வாகடம் என்னும் நூலில் உள்ள பாடல் வரிகளில் பாடல் பற்றி வருகின்றது.

**பாடவே, பவள மேனிக்**
**கண்நுதல் கடவுள் பெற்ற**
**கணபதி காப்புத் தானே**

அமைதியுடன் இருந்து பாட்டு இசைக்க, முக்கண்ணை உடைய சிவனின் மகன், பிள்ளையார் காப்பாற்றுவார்.

# 6. நாட்டுப்புற இசை

இலாவணி என்ற இசைவகை மராத்தியர் ஆட்சியில் அறிமுகமான ஒன்று. இதை எரிந்த கட்சி, எரியாத கட்சி என்ற இருபிரிவினர் பாடுவர். "எரிந்த கட்சியினர் கூறுவதை மறுத்து எரியாத கட்சியினர் பாடுவர். புராண நம்பிக்கையைக் கொண்டவர்கள், எரிந்த கட்சியிலும், நம்பிக்கை அற்றவர்கள் எரியாத கட்சியிலும் பாடுவார்கள். எரியாத கட்சியைச் சேர்ந்தவர்கள் 18 சித்தர்களின் வழியைப் பின்பற்றுவர்".

இலாவணி பாடும்போது தப்பு, தப்பாட்டம், துந்தினா, தப்ளாக்கட்டை, டேப் போன்ற பக்க வாத்தியக் கருவிகளில் ஏதாவது ஒன்றோ, சிலவோ இருக்கும். இலாவணிப் பாட்டில் இராகம் முக்கியமன்று. மொழியும் கருத்தும், மிக முக்கியமானவை. சிவாசி அரசரின் ஆசிரியர் இராமதாசர். இவர் காலத்தில் மராத்தியத்திலிருந்து இது தமிழகம் வந்துள்ளது. வீடுகளில் குழந்தை பிறந்து எட்டு நாட்கள் வரை, இரவு நேரத்தில் தாய், குழந்தையும் விழித்து, பேய், பிசாசுகளின் தொல்லையின்றி இருக்க, மராத்தி மாநிலத்தில், மக்கள் இலாவணி பாடுகின்றனர்.

காமன் பாட்டு (இலாவணி)

காலப்புலவர்கள் போலிக் கதையதை
வேலிக்கப்புறம் தன்றா – சித்தர்கள்
நூலின்வழிநில்லு – ஞானத்தைக்
கோலியே மனதில்

என்பது காமன் கதைப் பாடல் – ஓர் ஆய்வு. என்ற நூலில் வரும் வினா.

மன்மதன் காரணம் – மக்கள் பேறு அடைய எனின் மலட்டுக்குக் காரணம் என்ன? எரியாத கட்சியாரின் வாதமாகும்.

**ஒப்பமுடன் சித்தர்களை நரசிங்கமூர்த்தி அப்போது வர நினைத்தார்**
**பதினெண் சித்தர்களும் என்னையன்முன் எதிர்விட்டோடி வந்து**
**வாசுகியைச் சித்தரெல்லாம் காயம் மேனியை வணங்கி**
**துதித்தா ர்கள்**
**சாற்றினர் புட்பமாலை பச்சைமால்தனைப் பார்த்தபேர்**
**கொண்டாட**
**போற்றினர் சித்தர்களை ஆதிமூலம் பார்த்துமிக ஓதலுற்றார்**
**தப்பிய பகவையெல்லாம் நீலமேகம் இப்போ தொருநொடியில்**
**செப்பமுடன் கொண்டுவர காயம்புமேனி அப்பனுரைத்திடவே**
**ஓடினார் சித்தரல்லாம் நீலமேகம் பசுவைத் தேடினார்**
**காடெல்லாம்**
**காடெங்கும் காணாமல் சித்தர் வாடிமிக நிற்கையில்**
**குன்றைக் குடைபிடித்த காயம்புமேனி கோவிந்தன்**
**தன்னருளால்**
**கன்னல் மறைப்பசுவும் அப்போ கன்றுகளைத் தான்தேடி**
**வெள்ளிமலைக் கோம்பைவிட்டுப் பசுக்களெல்லாம் விட்டு**
**வெளியேறி**
**தள்ளிவருகையிலே சித்தரெல்லாம் கண்டார் பசுக்களையும்**
**பசுக்களையோட்டி வந்து சித்தரெல்லாம் பட்டியிற் றான்சேர்த்து**

இதில் சித்தர்கள் கள்ளழகரைச் சந்தித்தது குறித்து நாட்டுப்புறப் பாடலில் வருகின்றது. கள்ளழகர், மதுரையில் சித்திரா பௌர்ணமியன்று வைகை ஆற்றில் இறங்குவார். அப்போது பாடப்படும் பாடல், "வர்ணிப்பு" எனப்படும். இதில் சித்தர்கள் இடம் பெறுகின்றார்கள். இதில், சித்தர்களுக்கும் வைணவ சமயத்திற்கும் உள்ள தொடர்பு தெளிவாகும்.

வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்ததைச் சுவடிகளில் வைத்தனர் என்பதற்கு நாட்டுப்புறக் கதைப் பாடல்களிலேயே அகச் சான்றுகளைக் காணமுடிகிறது. பாண்டவர் வனவாசம் என்ற நூலில், "தேசத்தை யாளுங் துரியோதனன் பாவி" என "ம்" என்ற எழுத்து "ங்" என்று மாறியுள்ளது. பாடகர் இவ்வரியை நீட்டிப் பாடியதன்

விளைவேயாகும். முத்தாரம்மன் கதையில் இருளணைஞ்ச பெருமான் வில்லுப்பாட்டில் பாடியதை, அருணாசலப் புலவன் சுவடியில் எழுதிவைத்ததாகக் குறிப்புள்ளது.

மருந்துயோகங்கள், சித்தராரூட நொண்டிச் சிந்து என்பன மருத்துவம் குறித்த சுவடிகளாக இருப்பினும், நாட்டுப்புறப்பாடல் யாப்பில், எளிய, இனிய சந்தத்தில் எழுதப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

வன்னிராசன் கதையில்,

**குளிகை – குளிசம் மந்திர சக்தியுள்ள**
**வலது புச மதிலே ஒரு குளிசம்**
**வலது துடையதிலே ஒரு குளிசம்**
**புடதியிலே ஒரு குளிசம்**
**புரிந்து மங்கே தானெடுத்தான்**

**வாந்தி போலும் பேதி போலும்**
**வயத்தோட்டம் மாந்தபேதி**
**மண்டையிடி காச்சல் போலும்**
**மாந்தபேதி குளுகு போலும்**
**எட்டோடே டெட்டு நாளாய்**
**எடுத்த கடன்கீழ் வையாமல்**

**வருத்த முறக்கண்டறிந்து**
**மருத்துவத்தைக் கூட்டி வந்தார்**
**கருமருந்தை நான் குடித்து**
**கல்லுப் போல் இருந்திடுவேன்**

அன்னீத நாடகம் :

**ஆதியில் வெண்குட்டம் தீர்ந்து கவுடதேசத்**
**தரசன் பொன்னிற மானான்**

என்று வருகின்றது. சிதம்பரத்தில் கோயில் கொண்ட நடராசரின் திருக்குளத்தில் குளித்த கௌடதேச மன்னனின் வெள்ளை நிறத் தோல் நீங்கி மஞ்சள் நிறம் கிடைத்தது என்ற புராண வரலாற்றை இங்குத் தில்லை விடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை தன் பாடலில் கூறுகின்றார்.

**வந்தவெண் குட்ட மாற்றிய மூதூர்**
**பதஞ்சலி வியாக்கிரம பாதரும் பணிய**

நாட்டுப்புறவியல் சிந்தனைகள் :

**சித்தர்கள் போற்றிடும் வாலைப் பெண்ணாமந்த**
**சத்தியின் மேற்கும்மிப் பாட்டுரைக்க**

சித்தர்கள் வழிபடும் வாலை என்ற சக்தியைக் கும்மி என்ற நாட்டுப்புறக்கலையில் சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

இசைக்கு விலங்குகளும் பணிகின்றன

"பிடிபட்ட யானையை இரண்டு கும்கிகளுடன் சேர்த்துக் கட்டி வெளியே போவார்கள். அப்போது ஒருவன் முன்னாலும் மற்றொருவன் பின்னாலும் தாழ்ந்த குரலில் ஒரே மாதிரியாக ஒரே பாட்டைப் பாடுவார்கள். யானை இடைவிடாது பாட்டைக் கேட்பதால் தீய பண்பை இழக்கிறது. இவ்வாறு பத்து நாள் செய்தால் பிறகு இரண்டு கும்கிகள் தேவையில்லை. ஒன்று போதும். அதன்பின் ஒன்றிரண்டு வாரம் சென்றால் கும்கி இல்லாமலே, பாகனே அதன்மீது ஏறிச் செல்லலாம். பெரும்பாலும், 6,10 மாதங்களில் பிடிபட்ட யானை முற்றிலும் பழக்கப்பட்டதாக ஆகிவிடும். கும்கி என்பது பழக்கப்பட்ட ஆண் யானைகளாகும்".

கெங்கையம்மன் நாடகம் இறையருளால் பிணி அகலும் என்பதையும், அகந்தையால் அழிவுநேரிடும் என்பதையும் விளக்குகிறது.

**நல்லுறவாகப் பேசி, நாரிசொல் தட்டிரென்று**
**கள்ள மருந்திட்டாளோ, கழந்தென்னை வெறுத்திட்டிரே**

பிளேக் நோயால் மக்கள் அடைந்த துயரத்தைப் பாடுகிறது. பிளேக் சிந்து. கீர்த்தனை எனப்படும் இசைப்பாடல் கடவுள் வணக்கத்தினைத் தொடர்ந்து பண் குறிப்புடன் தரப்பெற்றுள்ளது. பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்ற அமைப்பில் பாடல் அமைந்துள்ளது.

**மேகவியாதி வந்துடனே மெல்லிக்கு**
**மேலெங்கும் புண்தோன்றிடவே**
**கைகாலும் குறைந்து குட்டமுடமாகிட**
**கள்ளப்புருசனும் துரத்திவிட்டான்**

கொண்ட புருசனைக் கெடுத்த கொடும்பாவிச் சிந்துவில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள். டேப்பு, கஞ்சிரா, உடுக்கை, தம்பூரா, டிக்கிரிக் கட்டை, கைச்சலங்கை, சாலரா. இதைப் பாடும் கலைஞரோ அல்லது உதவியாளரோ இசைப்பார்கள். **தம்பூரா** : இது பரங்கிக் குடுவையின் சிறுதடி பொருத்தப் பெற்று ஒரு நரம்பை உடையது. இதை மீட்டி, இசை சேர்த்துக் கொண்டு பாடுவார்கள்.

சேலம் காக்காபாளையத்தைச் சேர்ந்த கிருட்டிணசாமி என்ற பாடகர் மம்மட்டியான் கதைப் பாடலை அச்சிட்டு விற்பனை செய்தார். நூல் விற்பனையோடு பேதி மாத்திரைகளையும் விற்றார்.

துரைசாமிக் கவுண்டர் கொலைச் சிந்துகளை இயற்றிச் சமையல் பாத்திரங்களை அடகு வைத்து நூலை அச்சிட்டுப் பாடிப் பிழைக்கத் தொடங்கி 2 1/2 ஏக்கர் நிலம் வாங்கியதாகக் கூறினார். கொலைச் சிந்து பாடுவதுடன், தாயத்து மந்திரித்துக் கட்டுதல், பேய் ஓட்டுதல், நாட்டு மருத்துவம் பார்த்து வருவதாகக் கூறினார். பெரும்பாலான கதைப் பாடகர்கள் நாட்டுப்புற மருத்துவர்களாக இருப்பதால், பேய், பிசாசுகளை விரட்டுகின்ற தொழிலை நடத்துவதற்கு இத்தகைய கதைப் பாடல்கள் உதவுகின்றன எனக் கருதலாம். "குள்ள ரெட்டி கொலைச் சிந்து"வின் ஆசிரியர் பாசார் என்ற ஊரிலுள்ள எ. துரைசாமி சித்தன், ரிஷிவந்தியம், ஸ்ரீதங்கம் மின்னியல் அச்சகம், நூலின் இறுதியில் "கற்பனை சிந்து" என்றுள்ளது. நாட்டுப் புறவியலில் சித்தர்கள் கொண்ட நாட்டத்தின் காரணமாகவே, பல சித்த மருத்துவ நூல்கள் படைக்கப்பட்டன. பள்ளு, கும்மி, குறவஞ்சி என்பன இவற்றிலடங்கும்.

**கும்மிப் பாடல்கள் சிந்துவகையைச் சேர்ந்தன**
**இதுவும் மும்மை நடைச் சந்தத்தை உடையன**

"கும்மி வகைகள் ஓரடிக் கும்மி, இரட்டைக் கும்மி, ஒயில் கும்மி என மூன்று வகைப்படும்."

கொங்கணர் வாலைக் கும்மியில் அரையடி தோறும் சத்தியின், தத்திமி, பத்தினி என எதுகையுள்ளது. அரையடி தோறும், மோனை அமைவது எல்லாச் சிந்துகளிலும் காணப்படுவது இயல்பு. நாட்டுப்புற இசையமைப்பில் காணப்படுவது அகத்தியர் பள்ளு 200, அகத்தியர் கும்மி, கொங்கணர் வாலைக் கும்மி, யூகி வைத்தியக் கும்மி, ஞான ரத்தினக் குறவஞ்சி, திருவள்ளுவரின் ஞானவெட்டியான் 1500, நவரத்தின வைத்திய சிந்தாமணி 800 என்பனவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். திருவள்ளுவரின் ஞானவெட்டியான், நவரத்தின சிந்தாமணி 800 ஆகியவற்றைப் பள்ளு இலக்கியத்துடன் இணைக்கலாம். ஈற்றடியில் "ஆண்டே" என்றும் "பள்ளீரே" என்றும் இவை முடியும். ஆயினும் முக்கூடல் பள்ளு போன்றவற்றின் இலக்கணங்களைக் காண இயலாது. எனவே இவைகளைப் "போலிப் பள்ளு'' என்றழைப்பார் வீ.ந. செயராமன். இவர் சிற்றிலக்கிய அகராதியை வெளியிட்டவர்.

''குறவஞ்சிப் பாடல்வகைகள், கீர்த்தனைகள் என்ற பண்ணத்திகளாகும்''. பெரிய ஞானக்கோவையில் உள்ள ஞானரத்தினக் குறவஞ்சி சிறப்பானதாகும். பெரிய ஞானக்கோவை யானது பல சித்தர்களின் பாடல்களைக் கொண்டதோர் நூலாகும். இதிலுள்ள பல பாடல்கள் இசையின் தாக்கத்தைக் கொண்டன. பெரியஞானக் கோவையில் மதுரை வாலையானந்த சாமியின் - ஞானக் கும்மி, (காயக் கப்பல் பாட்டு, சேஷயோகியின் ஞான ஏற்றப் பாட்டு. இவற்றையும் நாட்டுப்புற இயலில் அடக்கலாம். நாட்டுப்புற இசையின் தாலாட்டு இரங்கல், எள்ளல் என்பனவற்றிலும் சித்தமருத்துவக் கருத்துகள் பாடப்படுகின்றன. உளப்பிணிகளை நீக்கும் பேயோட்டும் பாடல்கள், சாமியாடுதல், குறிசொல்லும் பாடல்கள் என்பனவும் இவ்வகையைச் சேர்ந்தனவாகவே கருதலாம். செவ்வியலிலும் இத்தகைய நிகழ்வுகளின் தாக்கமுண்டு. சான்றாகக் "கடுவெளிச் சித்தரின்" புகழ் பெற்ற "நந்தவனத்திலோர் ஆண்டி" என்ற பாடலைக் குறிப்பிடலாம். இது ஆனந்தக் களிப்பு என்ற பிரிவிலடங்கும். "கொங்கணச்சித்தர் வாலைக் கும்மியில்" "பாலுக்கு மேலான பொருள் இல்லை கும்மிக்கு மேலான பாடலில்லை" என்பார்.

கிராமப் பகுதிகளில் கோவில் பூசாரிகள் உடுக்கடித்துப் பாடுவது "இன்றும் வழக்கிலுள்ளது. மழை பற்றியும் வேளாண்மை பற்றியும் இவர்கள் கூறுவார்கள். "நோயின் காரணமாக வந்திருந்தால் அவர்களுக்கு மருந்து கூறுதல் உண்டு". நோய் நீங்க, கோவில்களில் இசைப்பாடல்களைப் பாடுதல் வழக்கம். சான்றாக நெல்லை மாவட்டத்திலுள்ள "நாராயணசாமி கோவிலில்" கருடப் பத்து என்ற நூலைப் பாம்புக்கடி நீங்கப் படிப்பார்கள்." நோய்கள் நீங்க, கோவில்களில் இசைப்பாடல்களைப் பாடுதல் வழக்கம். நாட்டுப்புற இலக்கியமாகக் கருதப்படும் "அகத்தியர் கும்மியில் உள்ள மருத்துவம் "ஏலம், சுக்கு, சீரகம் மூன்றையும் ஏற்க நல்லெண்ணெய்யில் பொடித்திட்டுப் பால சூரியன் முன்வைத்துப்பூச, பறக்கும் கரப்பன் என்றடியுங்கடி". இதில் கரப்பன் என்ற தோல் நோய் நீங்கச் சீரகம், ஏலம், சுக்கு என்பவற்றைப் பொடி செய்து நல்லெண்ணெய்யில் கலந்து, இளஞ்சூரிய வெப்பத்தில் வைத்து எடுத்து வடிகட்டிப் பூசத் தீரும். இதுபோல நோய்களின் வகைகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றனர்.

சிங்கை அழகிய அம்மன் கும்மி,

**செந்திருமிகு முத்தத்தினில் சுத்தத்தங்க**
**தீவட்டி சித்தர் கணம் பிடிக்க**

**சங்குசேகண்டி லவண்டை மல்லாரி**
**தடாரிநவபத்தொடு நகரா**
**சங்கீதமேஒம் கைத்தப்பு துடி**
**சத்தமுகிலெனத் தான் முழங்க**
**வாங்காக் கொம்பு மணி சின்னத் தொன்மை**
**மாறாத நாகச் சுரந்தான்**
**பாங்காய்ப் பூரிகை எக்காளம் திருப்**
**பாற்கடல் போல**

| | | |
|---|---|---|
| **சேகண்டி** | – | **சேமக்கலம்** |
| **லவண்டை** | – | **வழக்கில் உள்ள கோவில்களில் பயன்படுத்தப்படும் தோல் கருவி** |

| | | |
|---|---|---|
| மல்லாரி | – | பம்பை மேளம் |
| தடாரி | – | பேரிகை |
| நவபத்து | – | நகரா |
| சத்தமுகில் | – | அறியப்படாதது |
| வாங்கா | – | கொம்பு போன்ற காற்றுக்கருவி. |
| பூரிகை | – | ஊதப்படும் கருவி |

"மகுடி" என்ற இசைக் கருவி பழமையானது. மேல் பகுதி காய்ந்த சுரைக்காயாலானது. கீழ்ப் பகுதி மூங்கில் அல்லது நாணல் கொண்டு பொருத்தப்பட்டுள்ளது. மேல் பகுதி ஒரு குழாய், வெளியே தெரியாமல் இருக்கத் தோல், அல்லது மூங்கில் பட்டையால் மூடப்பட்டிருக்கும். இக்கருவியைப் பற்றியும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். "காவடி ஆட்டத்தின் போதும்" தரையில் படுத்து உருளும் போதும், ஏணியின் குறுக்குச் சட்டங்களின் இடைவெளியில் புகுந்து மேலே ஏறும்போதும், கீழே இறங்கும் போதும் வளைந்து வளைந்து செல்வது, பாம்பை ஒத்துள்ளது. எனவே, மகுடி ஓசை நாகசுரத்தில் இசைக்கப்படுகிறது. இப்பாடல் பாம்பாட்டிச் சித்தரால் பாடப்பெற்ற பாடலாகும். இப்பாடல் 8ஆவது மேளகர்த்தாவான அனுமத் தோடியில் பிறந்து, புன்னாக வராளி இராகத்தில் இசைக்கப்படுகிறது. இப்பாடல் மத்திம சுருதியை அடிப்படைச் சுருதியாகக் கொண்டு வாசிக்கப்படுகிறது. விளம்ப காலத்தில் தொடங்கும் இப்பாடல் அநாகத எடுப்பில் அமைந்துள்ளது. இப்பாடல் ஆதி தாளத்தில் சதுர நடையில் வாசிக்கப்படுகின்றது.

நாட்டுப்புறப் பாடல்களிலும் சித்தர் பாடல்கள் இசைச் சான்றாகக் காவடியாட்டத்தைக் கூறலாம். காவடி ஆட்டத்திற்கு ஒத்த பெரும்பாலும் மக்களிடையே பரவியுள்ள இராகங்களும், நாட்டுப்புற இசை மெட்டுகள், காவடிச் சிந்து, சித்தர் பாடல்கள், பழங்கால நாடகங்களில் இடம்பெற்ற பாடல்களின் இசை மெட்டுகளும், திரைப்படப் பாடல்களும் இடம்பெறுகின்றன. சுரங்கள் அடங்கிய "நந்தவனத்தில்" ஓர் ஆண்டி" என்பது கடுவெளிச் சித்தருடையது. குழந்தைகளுக்கு வரும் நோய்களுக்கான மருத்துவம் நாட்டுப்புறப் பாடல்களில் உள்ளது.

**மண்டையிடி பொறுக்கலையோ கண்ணே**
**மருந்தரைத்துப் போடட்டுமா ?**
**கோரோசனை உனக்குக் கொடுக்கட்டுமா ?**
**குருமாத்திரை கொடுக்கட்டுமா ?**
**உடம்பெல்லாம் நோகுதம்மா – கண்ணே**
**ஒத்தடம் நான் கொடுக்கட்டுமா ?**
**ஏலமும், இஞ்சிச் சாறும் கண்ணே**
**எட்டுசொட்டு கொடுக்கட்டுமா ?**
**கைகாலு விக்கத்துக்குக் கண்ணே**
**கணைஎண்ணெய் வாங்கித்தாரேன்**
**வயிற்றுளைச்சல் மிஞ்சிப்போய் – கண்ணே**
**வயிற்றுவலி வந்திடுச்சா**
**வெற்றிலையும் உப்பும் வச்சு – கண்ணே**
**வெறும் வயிற்றில் தின்னுடம்மா**

வில்லுப்பாட்டு

**உச்சியிலே போட்டமுத்து**
**உச்சிப்பிளவை யாகி விடவே**
**கண்டத்திலே போட்ட முத்து**
**கண்டமாலை யாயிற்றே**
**மூக்கிலே போட்ட முத்து**
**முதுகுப்பிளவை யாகிவிடவே**
**அரைதனிலே போட்ட முத்து**
**அரையாப்பாகி விடவே**
**பாதத்திலே, போட்ட முத்து**
**பாதச் சக்கரங்க ளாகிவிடவே**

இதில் கொப்புளம், பிளவை, கண்டமாலை, அரையாப்பு, பாதவெடிப்பு ஆகிய நோய்கள் கூறப்படுகின்றன.

**சூளைவைத்தியன் – அவன்**
**சூரணத்தால் தீரும் என்றான்**

சூளை என்ற சென்னைப் பகுதியைச் சார்ந்த சித்த மருத்துவன் தன்னுடைய மருந்தினால் நோய் தீரும் என்று கூறினான்.

**ஓடவே அடித்தானையா**
**உடம்பெல்லாம் காயமாக**

உரை: பாணப்பெண்களை அரிச்சந்திரனின் ஆணைக் கிணங்க, பணியாளர்கள் அடித்துத் துரத்துகின்றார்கள். அடித்த உடலில் காயங்கள் ஏற்படுகின்றன (மாதர்கள் – விருத்தம்).

சித்த மருத்துவர், இராம குருசாமிக்கோனார் பல சித்த மருத்துவ நூற் பதிப்பாசிரியர். இவர் அரிச்சந்திர நாடகத்தைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் நாட்டுப்புறக் கலைகளில் சிறப்பாக உள்ளது தாலாட்டும் ஒப்பாரியும் ஆகும். தமிழகப் பெண்கள் இதை நாட்டுப்புறங்களில் இன்றும் கடைப்பிடித்து வருகிறார்கள். தாலாட்டில்,

**கசாயம் குடிக்காமல்**
**கடைச் சரக்கு வாங்காமல்**
**வெந்நீர் குடியாமல்**
**வேந்தனைப் பெற்றெடுத்தேன்**

என்று தாய்மைப்பேறு பற்றி வருகின்றது. மகப்பேறு பற்றிய பாடல்,

**அள்ளி மிளகு தின்று**
**அறுபது நாள் நோன்பிருந்து**
**கன்னிச் சிறையிலிருந்து**
**கண்டெடுத்த குஞ்சரமோ**

**நாழிநறுக்கு மஞ்சள்**
**நாழி பச்ச மஞ்சள்**
**அரைச்சுக் குளிப்பாளாம் – மீனா**

குழந்தைகளை நீராட்டுவது பற்றி இப்பாடலில் வருகிறது.

**சிறுமிளகும் சீரகமும் சீருவருதும் என்பேன்**
**வால்மிளகும் சீரகமும் வரிசை வருது என்பேன்**

இது பிள்ளை வகுப்பைச் சேர்ந்தவர்களின் பாடல்.

**வாழைப்பழம் வாங்கி, வாய்க்கு நல்ல தேன்வாங்கி**
**தேனோடு சர்க்கரையும் தேன்பாகு மோதகமும்**
**தித்திக்கும் தேனும் தினைமாவும் கொண்டுந்தன்**
**அத்தை வருவார் அழவேண்டாம் கண்மணியே**
**மாங்கனியும் நல்ல வரிக்கைப் பலாக் கனியும்**
**வாங்கியும் அம்மான், வருவார் அழவேண்டாம்**

இப்பாடலை அய்யங்கார் வகுப்பைச் சேர்ந்த பெண்கள் இசையுடன் பாடுவார்கள்.

**சீவக்கா நெல்லி**
**சிறுநெல்லி கஸ்தூரி**
**அரச்சு வளிப்பாளாம் ஆண்டாள்**
**அஞ்சுமுகக் கிண்ணியிலே**

மறவர் இனப்பாடலில் நெல்லிக்காய் கஸ்தூரி போன்ற சித்த மருந்துகள் கூறப்படுகின்றன.

**குழந்தைப்பிணி தீர்க்க – யேசு**
**கொற்றவராய் வந்திறங்கி**
**மதலைப்பிணி தீர்க்க – யேசு**
**மன்னவராய் வந்திறங்கி**

என்பது பரதவர் வகுப்புப் பாடலாகும். பிள்ளைகளை நீராட்டுவது குறித்துக் கூறப்பட்டுள்ளது.

**சீயக்காய் நெல்லி சிறுபருப்பு கஸ்தூரி**

**அரைத்து வழித்தார்கள் அஞ்சுமுகக் கிண்ணியிலே**

இது செட்டியார் வகுப்பினரின் பாடல்.

**பொன்னு சிமிழ் கடஞ்சி – என் அம்மாளுக்குப்**
**புனுகு படாமை சேர்த்து**

கண்மை பற்றிய நாட்டுப்புறப் பாடல். மருந்து வைத்தலைப் பற்றி,

**எனக்கு மறக்க மருந்து வச்சா**
**மாரணத்த கண்ணிலிட்டான்**
**இன்னக்கி அய்க்க மருந்துவச்சா**
**அஞ்சனத்தைக் கண்ணிலிட்டா**

இதில் மாரணம் என்பதும், அஞ்சனம் என்பதும், மருத்துவ முறைகளாகும். உலோகத்தை வேறு ஒன்றாக மாற்றுவது மாரணம். கண்நோய்களுக்கு இடுவது அஞ்சனம்.

**ஆனாவிட்டாளே மருந்துகளுக்கு**
**மூர்க்கண் பாம்பு நஞ்சதிலே**
**முன்னாழிநஞ்சு வரட்டெனவே**
**நல்லபாம்பு நஞ்சிவிசம்**

குருகுல மக்கள் கதையில் பாடல் வரிகள் வருகின்றன.

**மாவுருண்டை உண்டவுடன்**
**மதிமயங்கி வேலன்**
**வேப்பிலை போல் கசப்பு**
**விசுதடி பேத்தி**
**அடி மாபாவி சண்டாளி**
**மருந்து தன்னை வைத்தாள்**

என்று ஒயிலாட்டத்தில் வள்ளி திருமணம் பவழக்கொடி மாலை என்ற நூலில் சற்குணவதி குறிப்பிடுகின்றார். இதுபோன்றே முப்பந்தல் இசக்கி அம்மன் கணியான்பாட்டு என்ற நூலில் இடுமருந்து வைப்பது குறித்து வந்துள்ளது.

**கள்ளிப்பாலுடன் தில்லையின் பாலும்**
**காஞ்சிரம் பாலுடனே**
**காட்டெருக்கலம் பாலும்**
**காராவின் நன்பாலுடனே கூட்டி**

தமிழ்நாட்டு விளையாட்டுகள் – இரா. பாலசுப்பிரமணியம் இயற்றிய நூலில் உள்ள விளையாட்டு சஞ்சீவினி ஆட்டமாகும். சஞ்சீவினி ஆட்டம் – விளையாட்டில் நீக்கப்பட்டவர் கலந்து கொள்ளும் ஆட்டம். சஞ்சீவினி மூலிகைக்கு இறந்தவரை உயிர்ப்பிக்கும் ஆற்றல் உண்டு என்று கருதப்படுகிறது. இராம, இலக்குவர்களை உயிர்ப்பிக்க, அனுமன் கொண்டுவந்த மூலிகை சஞ்சீவினியாகும்.

**ஆந்தப்புத்து, கழுதபுத்து**
**மருந்ததுதான் சேப்பாளே**

**மயக்க மருந்துப் பாலெடுத்து**
**தெரியாமல் உண்ணுவாரே**

என்று இடு மருந்தில் சேரும் பொருள்களைக் கூறுகின்றார். ஆந்தையின் வாழிடமண், கழுதை நின்ற இடத்து மண் என்பன பற்றி விளக்கப்படுகிறது.

மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை –

**கருவா சனிக்கையிலே**
**கருமருந்தைத் தின்றேனில்லை**
**உருவா சனிக்கையிலே**
**உள்மருந்தைத் தின்றேனில்லை**

இதில் கருவுண்டான காலத்துத் தரப்படும் மருந்தைப் பற்றி வருகின்றது.

**கஞ்சிகுடி மறந்தாள்**
**கண்டபண்டம் திங்கலுற்றாள்**

மசக்கையில் பெண்களுக்கு ஏற்படும் வேட்கையை விளக்குகின்றார். 3ஆம் மாதம் மகப்பேறுள்ள பெண்கள் புளிப்புச் சுவையை விரும்புவார்கள். உணவை வெறுப்பார்கள். இது போன்றே மகப்பேற்றில் வரும் மசக்கையைப் பற்றிப் பாடல்கள் உள்ளன.

**மசக்கையம்மா மசக்கையடி – ஏலோலோ**
**மாமரங்கள் யம்மா காவலடி – ஏலேலோ**
**பிஞ்சியம்மா – புளியம் பிஞ்சு – ஏலேலோ**
**சோறெறங்கும் – ஏலேலோ**

இதை ஏலப்பாட்டு எனவும் கொள்ளலாம். ஏசல் பாடல் உருவ அமைப்பை நெருங்கிய உறவினர்கள் நகைச்சுவையுடன் கேலி செய்வதாக அமையும்.

7ஆம் மாதம்:

**மாங்காயும் பலாக்காயும்**
**மலப்புளியங் காயுடனே**
**தேங்காயும் நெல்லிக்காயும் தின்றாளே மங்கையரும்**
**எட்டாவது மாத்தையிலே**
**சுட்ட மண்ணைப் புட்டுத் தின்னாள்**

இதில் கூறப்பட்டவை புளிப்புச் சுவையுள்ள, மாங்காய், புளியங்காய், நெல்லிக்காய் என்பனவாகும். இவற்றை விரும்பி மகப்பேறுள்ள பெண்கள் உண்பார்கள்.

மகப்பேறு

**பிள்ளைவரம் கேட்டதற்குப்**
**பேய்முண்ட மதைத் தரலாமோ?**
**மதலைவரம் கேட்டதற்கு**
**முண்டமதைத் தரலாமோ?**

என்று சுடலை மாடன் வழிபாடு என்னும் நூலில் சண்முகசுந்தரம் எழுதியுள்ளார்.

**பாலும் அடுப்பிலேதான்**
**பாலகனும் தொட்டிலிலே**
**பாலகனைப் பெற்றெடுத்த**
**பாட்டனாரும் கட்டிலிலே**

வரையற்ற மகப்பேற்றைப் பற்றி அதன் தாய் பாடுவதாக இப்பாடல் உள்ளது.

**அப்போ ஒருதாதி அடியாள் எழுந்திருந்து**
**காயம், கடைச் சரக்கு கனமாக உள்ளது**
**கூட்டியே தானும் கொடுத்தாளே**
– சித்திரபுத்திர நாயினார் கதை

“ஈத்துப்புரை ” என்பது மகப்பேறுக்கெனத் தனியாக அமைக்கப்படும் பகுதி. வீட்டின் ஓர் ஒதுக்குப்புறத்தில் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மருத்துவச்சிகளே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டனர். கோவில்பட்டி பகுதியில் சக்கனப் பண்டிதர், சரவணப் பண்டிதர் போன்ற பெயர்கள் சித்த மருத்துவர்களுக்குள்ளன. மருத்துவப் பணிகள் – நாடி பார்த்து, உடல்நிலை பற்றிக் கூறுதல் தொழிலாகும்.

**ஒருகளஞ்சி பொன்தாரேன்**
**ஓவியமே, மருத்துவமே**

**ஒருகளஞ்சி பொன்னதுதான்**
**உனக்கெனக்கும், பத்தாது**
**பத்துக் களஞ்சி ஒத்தபோது**
**படிகடந்தார் மருத்துவமும்**

ஆண்குழந்தை பிறந்தால் குலவை இடுதல் மரபாகும். தொப்புள் கொடி அறுத்தல், குளிப்பாட்டுதல் என்பன மருத்துவச்சிகளின் பணிகளாகும்.

**மைந்தன் பிறந்தவுடன்**
**மங்கையர்கள் குலவையிட்டார்**
**தொப்புள் அறுத்தாரே**
**குளிப்பாட்டி, சேனை போட்டு**
**'மாலைசுத்திப் பிறந்தால்**
**மாமனுக்கு ஆகாதுன்னு**
**கொடி சுத்திப் பிறந்தால்**
**கூடப் பிறந்தானுக்கு ஆகாதுன்னு**

இதில் மகப்பேற்றின்போது நஞ்சுக் கொடி குழந்தையைச் சுற்றிப் பிறப்பது தீங்கு விளைவிக்கும் என்பது அக்கால நம்பிக்கை. இது இப்பாட்டில் கூறப்படுகிறது. கொடி சுற்றிப் பிறப்பது, உடன் பிறந்தவர்களைப் பாதிக்கும் என்பது பாடலில் வருகிறது.

**சேனைவைத்தல்:** சர்க்கரையைக் கரைத்தநீர். இதைக் குடும்பத்திலுள்ள முதியவர் முதன்முதலாகக் கொடுப்பது மரபு.

மறவர் கதைப்பாடல்கள்:

**எடுத்தனர் இனத்தோர்கள்தான்**
**ஏந்திய இருகையாலும்**
**திடத்துடன் நீரும் ஆட்டி**
**சேனையும் ஊட்டி**

சேர்வைக்காரன் கதையில் காயம், மிளகு போன்ற மருந்துகளை அரைத்துத் திரட்டிக் கொடுக்கின்றனர். குழந்தையைத் தாங்கி, விரிவடைந்த வயிறு, அப்படியே நிலைத்து விடாதபடி

**கூசாமல் சேலையைக்கட்டி யிறுக்கி**
**கும்பக்கழக்கு மருந்து மிட்டார்**

இதில் மகப்பேறு அடைந்தபின்பு மருத்துவர்கள் செய்யும் செயல்கள் விளக்கப்படுகின்றன. தாய்மை அடைந்த பெண்களுக்குப் பிறப்புறுப்பு புண்பட்டு இருக்கும். மேலும் வயிற்றை இறுக்கிக் கட்டாவிடில் பிற்காலத்தில் பெருத்துவிடும். இதைத் தடுக்க வயிற்றைக் கட்டுவார்கள். பிறப்புறுப்பில் மருந்துகளைப் பூசுவது இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

கரு அழித்தல்

**அறுத்துவிட்ட, கம்மனாட்டி**
**ஆறுமாதம் புள்ளத்தாச்சி**
**மானபங்கம் ஆகுதுன்னு**
**மருந்துகை, தேடுறாளே**

ஏற்றப் பாட்டுகள் என்ற கி.வா.ஜ. அவர்களின் நூலில் பக்.24 இல் வருகிறது. கணவனில்லாதவர் ஆணுடன் கொண்டதால் ஏற்பட்ட 6 மாத கரு இங்குக் கூறப்பட்டுள்ளது.

சுடலை மாடன் வில்லுப்பாட்டில் அ.கா. பெருமாள், கர்ப்பமாய்ப் பெற்ற கன்னிகள் என்ற நூலில் வருவதாகக் கரு அழித்தலைப் பற்றிக் கூறுகின்றார்.

**பாலிகைகளைச் சூலிகளைப்**
**பச்சை பிள்ளைத் தாச்சிகளை**
**ஈனாத மலடிகளைஇனம்**
**இனமாய் உருக்கவரம்**
**அஞ்சா மாதச் சூலிகளை**
**அல்லாமல் ஆக்கவரம்**
**ஏழு மாதச் சூலிகளைப்**
**இல்லாமல் ஆக்கவரம்**
**பத்து மாதச் சூலிகளை**
**பால் வடிய ஆக்க வரம்**

சுடலை மாடன், சிவனிடம், பிறரைப் பலியெடுக்கவும், கொல்லவும் வரம் கேட்டல் கூறப்படுகிறது.

எண்ணெய்க் குளியல்

திருமணம் நடந்த 7ஆம் நாளில்,

**ஏழாம் நாள் கழிவதற்கு**
**எண்ணெய் சடங்கு நடத்தலுற்றார்**

எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது குறித்துக் கூறப்பட்டுள்ளது.

மூலிகைகள்

**கிள்ளிய கொசுவத்துக்கோ**
**கீழ்மடியின் வெத்திலைக்கோ**
**அள்ளிய தேமலுக்கோ**
**ஆசை கொண்டேன் பெண்மயிலே**

இதில் தேமல் என்ற தோல் நோய் பற்றி வருகின்றது.

குமாரலிங்கர் குறவஞ்சியில் கீழ்க்கண்ட மூலிகைகள் கூறப்படுகின்றன. கன எருமை மரம், சோதி மரம், கருநெல்லி, சோமலதை என்ற கொடி என்பனவாகும்.

**கனக எருமைப் பாலது கண்டே பூசித்துண் டாலவர்**
**கனக மயமாகி நல்ல கதியுந்தரு மம்மே**
**சோதி விருட்சமுண் டாவது சொல்ல முடியாது**
**தொகை யேவிருத்தர் பால ராகியே**
**சுகிப்பர்மகிழந் திருப்பார்**
**சோம விருட்சப்பால் சோம லதைமிக வுண்டால்**
**முன்னால்**
**தோன்றாப் பகிரண்ட மெல்லாந் தோன்றுமடி யம்மே.**
**கன்னி மார்கள்களைக் கரைமேற்கரு நெல்லியது**
**உண்டு**
**காய சித்தியும் உலகப்பொருள் காட்டுமடி யம்மே**
**சீரு லாவிய குமார லிங்கையன் செந்நெற்**
**களஞ்சியத்தில்**
**செப்பு மூலிகை ஒப்பி லாதசொற் செப்புவேண்டி அம்மே**
**வேதன் மாலான தேவர் மானிடர் விளங்கும் பட்சி**
**அருளுனக்கும்**
**விரும்பு வாரந்த மூலிகைக் கிணை வேறிலையடி**
**அம்மே.**

**குந்த மும்நல்ல திந்துகமதி**
**குங்கிலியம் உண்டாகுமே**
**கோல மோடுத மால மும்நல்ல**
**சாலம் வேணதுஉண் டாமே**

குங்குலிய மரம், குந்திரிக மரம், பச்சிலை மரம் இவை மலையில் காணப்படும்.

**சந்தனம் அகில் மந்தரம்பிசு**
**மந்த மாதிகள் உண்டு**
**தாரில் நாகமும் பாரில் நாகமும்**
**சாரு மாமரம் உண் டம்மே**

சந்தனம், அகில், வேப்பமரம், சுரபுன்னை மரம், பெருங்காய மரம், கருந்தினை என்பன குறத்தி கூறும் மலையில் உள்ளன.

**சோம விருட்சமும் ரோம விருட்சமும்**
**சோதி விருட்சமும்உண் டம்மே**

சோம மரம், ரோம விருட்சம், சோதி விருட்சம் கன எருமை விருட்சம் என்பன பற்றிக் கூறப்படுகிறது. கன எருமை விருட்சப் பாலை உடலில் பூசப் பொன்னிறம் கிடைக்கும். சோதி விருட்சப் பாலை உண்ண முதியவர்கள் இளைஞர்களாக மாறி உலக இன்பத்தைத் துய்ப்பார்கள் என்று கூறுகின்றார். இது தரு புன்னாகவராளியில் அமைந்துள்ளது.

தமிழர் அடையாளங்கள் என்ற நூலில் சின்னத்தம்பி கதையில் வரும் நாட்டுப்புற பாடல்களில் மருத்துவம் கூறப்படுகிறது.

**ஒருதலை மண்டையிடி ஒருமாஸ்தை காலமாக**
**புகச்ச விருமல்கொண்டு புலம்பு மயங்கினதில்**
**வருத்த மடைகிறதை வைத்தியர்கள் தான்கேட்டு**
**ஆதளங்காய் தூதளங்காய் அறளவத்தக் கொடியுடனே**
**திரிகடுகு மாவிலங்கு செண்பகப்பூ கோரோசனை**

இதில் ஆதளங்காய், தூதுவளை, வத்தக்கொடி, திரிகடுகு மாவிலங்கு செண்பகப்பூ என்ற தாவரங்கள் கூறப்படுகின்றன.

**ஓழுக்கறை இரும்புப்பொடி ஊமத்தன்பூ சாருவிட்டு**
**தாம்பூரம் ராகமுடன் தைரியவானால் இடித்து**
**மைபோ லரைக்கவேணும்**

சோழி, இரும்புப் பொடி, தாமரம் இவற்றை ஊமத்தம் சாறு விட்டு அரைத்து மருந்து செய்வார்கள்.

**ஊமத்தஞ்சார் மதனகாமப்பூவும் ஒன்றாகத் தானரைத்து**
**அபினுடன் கஞ்சாவும் அதில்கொஞ்சம் தான்சேர்த்து**
**சாப்பிடச்சொல்லிக் கொடுத்தானே மாடன் சாம்பான்**

மயக்க மருந்து தயாரித்தல் பற்றி இதில் கூறப்படுகிறது. ஊமத்தஞ்சாறு, மதனக்காமப்பூ இரண்டையும் அரைத்துக்கொண்டு சிறிது கஞ்சா, அபின் இரண்டையும் சேர்த்து மாடன் சாம்பான் கொடுத்தான். திருநாளைப்போவார் என்னும் நந்தனார் சரித்திரம் கோபாலகிருஷ்ண பாரதியாரால் பாடப் பெற்றது. இதில் மருந்துப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

**கடுக்காயைத் தின்பாரோ ?**
**கன்னலது போல**
**கொடுக்காத தானாலும்**
**கொள்ளுவீர் என்றார்**

இப்பாடல் நீலாம்பரி ராகம், ஜம்பை தாளத்தில் பாடப்பட்டது.

**இவர் கோரோசனைப் பையை எடுத்தார்**
**அவர் தாராளமாய் வாரிக்கொடுத்தார்**

இப்பாடல் வராளி ராகத்திலும், சாப்பு தாளத்திலும் பாடப்பட்டது.

சித்தர்களை நந்தனோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார். கவி கோபால கிருஷ்ண பாரதியார்,

**ஒருநாளும் வாராத பத்தன்**
**திருநாளைப் போவாரெனும் சித்தன்**

இப்பாடல் ஜீரஞ்சுடி ராகத்திலும் ரூபகத் தாளத்திலும் அமைந்துள்ளது. நந்தன் கீர்த்தனைகள் யாவும் செவ்வியலாக இருப்பினும் இதற்கு அடிப்படை நாட்டுப்புறக் கதைப் பாடலே ஆகும்.

ஏசல்

**மஞ்சள் மணக்கப்பூசி**
**மரிக்கொழுந்தை நெருக்கவச்சு**
**மந்தையிலே நின்னாலும் – உன்னை**
**மடைநாயும் தீண்டாதடி**

என்று முறைப் பெண்ணைப் பற்றித் தலைவன் கேலி செய்கிறான்.

காதல் பாடல்கள்

வன்னிராயன் கதை:

**வருத்தமுறக் கண்டறிந்து**
**மருத்துவத்தைக் கூட்டி வந்தார்**

**கருமருந்தை நான்குடித்து**
**கல்லும்போல் இருந்திடுவேன்**

சுடலைமாடன் கதைப் பாடல்:

**பிள்ளைவரம் கேட்டதற்கு தந்தீரோ?**
**என்று சொல்லும் வேளையிலே**
**ஏது சொல்வார் சிவனாரும்**

இவ்வரிகளில் துளசி பற்றி வருகின்றது. முற்றங்களில் துளசிச் செடியை மாடங்களில் வைத்து வளர்த்துப் பூசிப்பார்கள்.

**தொண்ணூறு நாளாகத்**
**துளசிக்கு நீர்வார்த்து**

அண்ணமார் சாமி கதை

**சுக்கு நுணுக்கியே சூரணம் செய்தார்கள்**
**மிளகு அரைத்தார்கள், வெந்நீர் வைத்தார்கள்**
**சுக்குப் பொடி கொடுக்கச் சுகப்பிரசவம் ஆனதுவே**

மருத்துவருக்குச் சொல்லியதையும் அவரின் செயல்கள் பற்றியுமுள்ள பாடல். இதில் சுக்கு, மிளகு ஆகிய மருந்துப் பொருள்கள் கூறப்படுகின்றன. வெந்நீரை மருந்துடன் குடிக்கத் தருகிறார்கள்.

இரங்கல்

**பண்டிதப்பை யெடுத்து**
**பார்வேந்தன் ஓடிவந்து – அட**
**வாரும் ஓர்வேளையிலே**
**பண்டிதப்பை யெடுத்து – அட**
**பார்வேந்தன் ஓடி வந்து**
**காசிவளநாடு – அட**
**கயிலங்கிரி அட**

தஞ்சை மவாட்ட நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு சமுதாய ஆய்வு என்ற நூலில்,

**தஞ்சாவூரு வைத்தியரும் – ஐயா**
**தகுந்த நல்ல மாத்திரையும்**
**தருமதுரைக்குத் தந்தாலுமே – ஐயா**
**தங்கலியே என்வீட்டில்**
**வாருமையா வைத்தியரே**
**வலக்கையைப் பாருமைய்யா**

“தாங்கலியே” என்றாதல் வேண்டும். பொறுக்கமுடியாத வலியுடன் உள் நோய் நிலை காட்டப்படுகிறது. இரங்கல் பாடலில் மருத்துவரைப்பற்றிய செய்திகள்:

**வாதங்களும் பித்தங்களும் அப்படி**
**வலதுபுறம் பேசுதுன்னார்**
**மம்மட்டிய எடும்மின்னார்**
**மருந்துவகை தேடுமின்னார்**
**வாளப்பூ பட்டெடுத்து அப்படி**
**வலது கையும் தாது பார்த்தார்**
**காப்பலம் இஞ்சி வாங்கி**
**உரும நல்லாக் கடை தொறந்து**
**ஒருபலம் இஞ்சிவாங்கி**
**மண்ணடுப்புக் கட்டச்சொல்லி**
**மருந்து கசாயம் போடச் சொல்லி**

**சூட்டடுப்பு கூட்டச் சொல்லி**
**சுக்குச்சாயம் போடச் சொல்லி**
**சஞ்சீவி மாத்திரையை – அப்பு**
**சரியா நல்லா உரைக்கச் சொல்லி**
**கோரோசனை மாத்திரையை நல்ல**
**கூடஉரைக்கச் சொல்லி**
**வங்காள கிண்ணத்திலே**
**வச்சௌச்ச மாத்திரையை**

என்று வருகின்றது. வலது கை என்று வருவதால் நோயாளி ஆண் எனலாம். ஆண்களுக்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கையிலும் நாடி பார்க்க வேண்டும் என்பது சித்த மருத்துவ நூல்கள் கூறும் விதியாகும்.

**நாட்டு வவுத்துவலி**
**நாமக்கல்லு பண்டிதம்**
**நல்லவழி ஆகுமின்னு**
**நாடெங்கும் போய்ப்பார்த்தும்**

இது போன்றே மகப்பேற்றில் வரும் மசக்கையைப் பற்றிப் பாடல்கள் உள்ளன.

அண்மைக் காலத்தில் (1957) முதுகளத்தூர் கலகத்தைப் பற்றிக் கதைப்பாடல் ஏற்றப்பட்டது. இதைப் பாடியவர் எம்.எம். சுவாமி என்ற பாடகர் பரமக்குடியில் வசித்தவர் பாடியுள்ளார். இதில் பேரையூரைச் சேர்ந்த பெருமாள் பீட்டர் என்ற சித்தமருத்துவர் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பற்றி வருகின்றது. சித்த மருத்துவர்கள் அரசவையில் இருந்துள்ளார்கள். இது அண்மைகாலம் வரை தொடருகிறது.

**பேரையூர் வைத்தியர் பெருமாள் பீட்டரும்**
**பிரச்சனை தீர்க்க உடன் வந்திருந்தார்**

முதுகளத்தூர் கலகத்தில் தொடர்புடைய இம்மானுவேலுவின் பிறந்த ஊர் இதம் பாடல் என்பதாகும். இதுபோன்று இசை தொடர்பான பெயர்களை ஊருக்கு வைத்துள்ளார்கள் என்பதற்கு இது சிறந்த சான்றாகும்.

ஏசல் பாடல் உருவ அமைப்பை நெருங்கிய உறவினர்களை நகைச்சுவையுடன் கேலி செய்வதாக அமையும்.

**ஒருசல்லிக்குக் கீரை வாங்கி**
**ஒண்ணு ரெண்டுமா கடைஞ்சவிச்சு**
**வவுறு தள்ளின மச்சானுக்கு**
**வழிச்சு நக்கக் கீரையில்லை**

இதில் தொப்பை விழுந்த ஆணை அவனின் முறைப்பெண் கேலி செய்து பாடுகிறாள். இது போலவே,

**எல்லோரு வண்டியிலே**
**ஏலம் வரும் சுக்கு வரும்**
**என்புருசன் வண்டியிலே**
**எனக்கேத்த பாட்டு வரும்**

இதில் சுக்கு, ஏலம் என்ற மருந்துப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

விடுகதை

மிளகு:

**கட்டையன் கட்டையன்**
**களித்த கட்டையன்**
**ஊருக்கெல்லாம் உறைத்த கட்டையன்**
**கண்டால் முண்டன், காரியத்தில் வம்பன்**

இது யார்?

சிற்றரத்தை:

அத்தை இல்லா, என்னத்தை – சிற்றரத்தை

கண்வலியைப் பற்றிய செய்தி கூறப்படுகிறது.

**கண்ணுவலி வந்ததய்யா**
**கட்டழகர் பாண்டியருக்கு**

**கண்ணுவலி உபத்திரமும்**
**கண்முழிக்கக் கூடுதில்லை**

கண்ணில் வரும் நோய் பற்றிய குறிப்புகள் நாட்டுப்புறப் பாடல்களில் அதிகம் வருகின்றன.

# 7. ஒலிக் குறிப்பும் நோய்க் கணிப்பும்

### குரல்வளை காக்க மருத்துவம்

குரல்வளை, பிறந்தது முதல் மனிதன் இறக்கும்வரை நுரையீரலைக் காக்கும் முக்கியமான வேலையை அமைதியாகச் சலிப்பின்றிச் செய்து கொண்டே இருக்கிறது. கழுத்துப் பகுதியில் எலும்புகள், முருந்துகள் எவ்விதச் சார்புமின்றிச் சுருங்கி விரிதலால் மட்டும் ஒலிகளை உண்டாக்கும் அதிசய உறுப்பு குரல்வளையாகும். மனிதனுக்கு இரண்டு குரல்வளைகள் உண்டு. இவை தசையினால் செய்யப்பட்ட மிக மென்மையான உறுப்பு. கழுத்தின் மேல்புறத்தில் உள்ள இத்தசைகளின் மேல் பகுதியில் மிக நுண்ணிய தோல் போன்ற மிக முக்கிய உறுப்பு உண்டு. இது ஒரு கோடு போன்று வெள்ளை நிறத்தில் இருக்கும். இரண்டு குரல்வளைத் தசைகளின்மேல் படிந்துள்ள இந்த உறுப்புதான் குரல்வளத்தின் அடிநாதம். குரல்வளை எப்போதும் ஒரே மாதிரியான உருவ அமைப்போடு இருப்பதில்லை. தேவைக்கு ஏற்றாற்போல் ஒல்லியாக, தடிமனாக, மென்மையாக மாறிக் கொள்ளும் ஆற்றல் படைத்தது. இப்படியெல்லாம் அடிக்கடி மாறும் இயற்கை சக்தியை அது கொண்டிருப்பதால்தான் பாடகர்களால் உச்ச ஸ்தாயிக்கும் கீழ் ஸ்தாயிக்கும் உடனுக்குடன் சென்று பாட முடிகிறது.

மனிதர்களைப்போல் அல்லாமல் வாய்ப்புறத்திலிருந்து மிக அருகிலேயே விலங்குகளுக்குக் குரல்வளைகள் உள்ளன. இதனால் உணவு சாப்பிடும்போதே நுகரும் சக்தி அவற்றுக்கு உண்டு. உயிரைக் காத்துக் கொள்ள விலங்குகளுக்கு இறைவன் கொடுத்துள்ள வரப்பிரசாதம் குரல்வளை. உதாரணமாகப் புல்லை மேய்ந்து கொண்டிருக்கும் மானுக்கு அதேநேரத்தில் நுகரும் சக்தியும் இருப்பதால்தான், புலி வருவதை உணர முடிகிறது. துள்ளி ஓடித் தப்பிக்க முடிகிறது. ஆனால் விலங்குகளுக்குக் குரல்வளையின் அமைப்பு

காரணமாகச் சாப்பிடும்போதே மூச்சு விடும் சக்தி இருப்பதால் அவற்றால் நுகர முடிகிறது.

மூச்சுக்குழலின் வாயில் காவலனாக உள்ளதால் குரல்வளையை இதயத்துடன் ஒப்பிடலாம். நமது செயலுக்கு ஏற்றாற்போல் குரல்வளைகள் செயல்படுகின்றன. உதாரணமாக மூச்சு உள்ளே செல்லும்போது இரண்டு குரல்வளைகளும் பிரிந்து காற்று நுழைய வழி ஏற்படுத்திக் கொடுக்கும். இரண்டு குரல் வளைகளும் அதிர்ந்து ஒட்டிக் கொள்வதால்தான் நம்மால் பேச முடிகிறது. மூச்சு மற்றும் பேச்சு என அந்தந்தச் செயலுக்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு நொடியும் தன்னைத் தானே சரி செய்து கொள்கிறது குரல் வளை.

பாடகர்கள், ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், மடாதிபதிகள், மருத்துவர்கள் உள்பட பலர் குரல்வளையை நம்பியுள்ளோர் பட்டியலில் உள்ளவர்கள். இதில் கர்நாடக சங்கீத இசைக் கலைஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். நமது பண்பாடு கலாச்சாரத்தின்படி கர்நாடக இசைக் கச்சேரிகளுக்கு ஈடு இணை கிடையாது. ஒரு பாடகர், கச்சேரியின் தொடக்கத்திலிருந்து முடியும்வரை குரல் வளையை எவ்வளவு அதிகபட்சம் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு பயன்படுத்துகிறார். அதாவது உச்ச கட்டம் (ஸ்தாயி) வரை பாடி சாதனை படைப்பார். ஆனால் குரல்வளையின் நலத்தை முறையாகப் பராமரிக்காமல் பாட்டு, பாட்டு எனப் பாடிக் கொண்டே இருப்பதால் பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. இதேபோன்று அரசியல்வாதிகளும் விளைவைப் பற்றிக் கவலைப்படாமல் குரல்வளையைத் தாறுமாறாகப் பயன்படுத்துவது வழக்கமாக உள்ளது. தொழில் முறையில் அல்லாத பலரும் குரல் வளையைத் தவறாகப் பயன்டுத்துவது உண்டு.

குரல் வளையைப் பொருத்தவரை தனது கோளாறைக் குரல் மாற்றம் மூலம் உடனே தெரியப்படுத்திவிடும்.

மேலை நாடுகளில் பாட்டைக் கற்றுக் கொள்ளும்போதே குரல் வளத்தைக் காக்கும் மருந்து ரீதியான பயிற்சிகளும் தொடங்கிவிடுகின்றன. குரல் வளையைத் தொடர்ந்து தவறாகப் பயன்படுத்தும் நிலையில் குரல்வளைத் தசையில் (Vocal nodule or

Singer's nodule) மாறுபட்ட தடிப்பு ஏற்படலாம். விளைவு. உச்ச ஸ்தாயிக்குச் செல்லும்போது குரல் பிசிற ஆரம்பிக்கும். கட்டுப்பாடு போய்விடும். குரல் வளையில் தசை வளர்ச்சி (Vocal ployp), போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.

நீண்ட நேரம் கத்திக் கொண்டே இருப்பவர்களுக்குக் குரல்வளையில் இரத்தக் கசிவு (Hematoma) ஏற்படலாம். தைராய்டு பிரச்சினைகள் காரணமாகக் குரல் வளையில் பாதிப்பு ஏற்படலாம். மேலும், புகை பிடித்தல், மதுப் பழக்கம், பான்பராக் காரணமாகக் குரல்வளையில் புற்று நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இந்தியாவில் குரல்வளைப் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் அதிகம். இதனால்தான் முதன்மையான புற்றுநோய்களில் மூன்றாவது இடம் குரல்வளைப் புற்று நோய்க்கு உள்ளது. இதற்குப் புகை பழக்கமே முக்கியக் காரணம். புற்று நோய் உள்பட மேற்சொன்ன பிரச்சினைகள் ஏற்படும் நிலையில், குரலில் உடனடியாக மாற்றம் ஏற்படும்.

ஒரு சில ஆண்களுக்குப் பெண் குரல் (Puberophony) இருக்கும். ஒரு சிலருக்குக் குரல்வளை பாதிப்பு காரணமாகக் சுத்தமாக ஓசையே எழுப்ப முடியாத நிலை இருக்கும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க ஃபோனோ சர்ஜரி (Phono Surgery) என்ற நவீன சிகிச்சை முறை நடைமுறையில் உள்ளது. ஜப்பானிய மருத்துவ நிபுணர் இஷிகி கண்டு பிடித்த இச்சிகிச்சைமுறை கடந்த 5 ஆண்டுகளாக மிகவும் பிரபலமாக உள்ளது.

வீணையின் தந்தியில் சுருதி மீட்டுவது போல் குரல் வளையிலும் அதன் டென்ஷனை மாறுபடச் செய்து நமது தேவைக்கு ஏற்பக் குரல் வளத்தை நிர்ணயிக்க முடியும். சைலஸ்டிக் ஸ்டெண்ட்-ஐ(Silastic stent) பயன்படுத்தி இச்சிகிச்சை அளிக்கப்படும். அது நாளடைவில் அப்பகுதி தசையுடன் சேர்ந்துவிடும்.

இதேபோன்று ஓசையே வராமல் இருப்பவர்களுக்குக் குரல் கொடுக்க முடியும். பாதிக்கப்பட்ட இடத்தை மட்டும் மரத்துப் போகச் செய்து (Local anaesthesia) நோயாளி விழித்திருக்கும்போதே சிகிச்சை செய்யப்படும்.

குரல்வளை பாதிப்புக்கு நவீன சிகிச்சை முறைகள் இருந்தாலும்கூட, மேலை நாட்டினரைப் போன்று மருத்துவ சோதனைக் கருவிகள் மூலம் குரல் வளத்தை அவ்வப்போது சோதனை செய்து கொண்டு குரல் வளையில் பாதிப்பு வராமல் தடுத்துக் கொள்வதே சிறந்தது. ஒலி என்பது கேள்விப் புலனைப் பாதிக்கும் ஒருவகை உணர்ச்சி. ஒலிகளெல்லாம் அதிரும் பொருள்களிலிருந்து உண்டாகின்றன. ஒலி உண்டாகும் இடத்திற்கும் நமக்கும் நடுவே ஊடகம் ஒன்று இருந்தால்தான் நம்மால் ஒலியைக் கேட்க முடியும். சாதாரணமாகக் காற்று இத்தகைய ஊடகமாக உதவுகிறது. ஒரு பொருள் அதிரும்போது காற்றுப் படலத்தில் நெருக்க விலக்கங்கள் மாறி மாறி ஏற்படுகின்றன. இவற்றால் இயக்கப்பட்ட காற்றுத் துகள்கள் தம்மை அடுத்துள்ள துகள்களை இயக்குகின்றன. இவ்வியக்கங்கள் ஒலி அலைகளாகப் பரவுகின்றன. இவை கேட்பவரின் காதில் நுழைந்து சவ்வுத் தோலை அசைத்துச் சில சிறிய எலும்புகள் வழியாகவும், கேள்வி நரம்பின் வழியாகவும் சென்று மூளைக்கு உணர்ச்சியை உண்டாக்குகின்றன. இவ்வாறு ஏற்படும் உணர்ச்சியை நாம் 'ஒலி' என்று கூறுகிறோம். ஒலி அலைகளின் தன்மை மாறுபடும்போது ஒலியும் மாறுபடுகிறது. மாறுபட்ட ஒலிகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும். நாய் குரைக்கும். நரி ஊளையிடும். ஆந்தை அலறும். யானை பிளிறும். குதிரை கனைக்கும். கழுதை கத்தும் போன்றவை ஒலி பேதங்களினால் வெவ்வேறு பெயர்களைப் பெற்றனவாகும். தேங்காய் வாங்கும்போது அதைத் தட்டிப் பார்த்து வாங்குவோம். அதன் ஒலிக் குறிப்பிலிருந்து, இளந்தேங்காய், முற்றலானது, அழுகல் எனத் தரம் பிரித்து அறிந்து விடமுடியும். அதுபோலவே மண் பானை வாங்கும்போதும் தட்டிப்பார்த்து அதிலிருந்து எழும் ஒலியைக் கொண்டு ஓட்டைப் பானை, அது செய்யப்பட்ட மண்ணின் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்கிறோம். முட்டையை உடைக்கும்போது கெட்டுப்போனது, நல்லது எனக் கண்டறிய இயலும். அலை ஓசையின் ஒலியைக் கொண்டு கடலின் அமைதி, சீற்றம் இரண்டையும் அறியமுடிகிறது. வெடி வெடிக்கும் தன்மையைக் கொண்டு அது சிறியதா பெரியதா என்றும் அறியலாம். ஒருவர் காலடி ஓசையைக் கொண்டு நாம் அந்த

இடத்தில் இல்லாமல் இருந்தால்கூட இன்னார் என்று அறிந்து கொள்ள இயலும். இருசக்கர வாகனம், மூன்று சக்கர வாகனம், நான்கு சக்கர வாகனம், பேருந்து, இரயில், விமானம் என அவற்றின் ஒலியைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

நாம் தனியாக ஓர் இடத்தில் அமர்ந்திருந்தாலோ அல்லது தனிமையில் நடந்து கொண்டிருந்தாலோ அல்லது குளிக்கும் போதோ நமக்குப் பிடித்தமான ஒரு பாடலை முணுமுணுத்துக் கொண்டிருப்போம் அல்லது வாய்விட்டுப் பாடிக்கொண்டிருப்போம். இப்பொழுதெல்லாம் இசைத்தட்டுகளில் பாடல்களை இசைக்கச் செய்து அதனுடன் கூடவே பாடுவதோ இசையை இரசிப்பதோ நடைபெறும். இதுபோன்று ஒலிகளின் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டு நோயினையும் அறியலாம். இவையன்றித் தோலின் தொடு உணர்வினாலும் ஒலி அதிர்வுகளை அறிய முடியும். கண்ணுக்குத் தெரியாத இதய ஒலி நுரையீரலில் உண்டாகும் சுவாச ஒலி, நாடித்துடிப்பு, வயிறு இரைதல், இவை நோயை அறிந்து கொள்ள உதவும் ஒலிகளாகும். வயிற்றைத் தட்டிப்பார்த்து அந்த ஒலியினால் வயிற்றில் உள்ள நோயின் தன்மை அறியமுடியும். இரவில் பல்கடிக்கும் ஒலியால் வயிற்றில் கிருமி உள்ளது எனவும், குறட்டை ஒலியினால் அதன் அதிகரித்த தன்மை, மென்மை மற்றும் அதன்வழி நோய் குறிப்பையும் அறியமுடியும். விக்கல், வாந்தி போன்றவற்றில் உண்டாகும் ஒலியும், எதுக்களித்தல், ஏப்பம், அபானவாயு பிரிதல் போன்றவையும் நோய் கணிக்க உதவும் ஒலிக் குறிப்புகளாகும்.

ஒலிக் குறிப்பைக் கொண்டு முக்குற்ற நோயாளியையும், சாக்குறியையும் அறியும் விதத்தைச் சித்த மருத்துவம் சிறப்பாகக் கூறுகிறது.

**பலரோகி வார்த்தை பலவிதமாம் வாதத்**
**தலைரோகி வார்த்தை சமமாம் – நிலை கடந்த**
**பித்தரோ கிக்குயர்ந்த பேச்சுண்டாஞ் சேத்துமந்தான்**
**சாத்தமிசைச் சரமாகுந் தான்**

வாத நோயாளிக்குச் சமவொலியும், பித்த நோயாளிக்கு உயர்ந்த ஒலியும் கப நோயாளிக்கு இன்னிசை போன்ற ஈனத்தொலியும் இருக்கும்.

**வீணையிசை நத்தோசை வேயோசை நாயோசை**
**வீணையிசை நத்தோசை வெற்போசை – வீணையிசை**
**தாரையியம் பேரியியந் தப்பாதொன் றுதிலக்கந்**
**தாரையியம் பேர்கனல்வி தான்**

– தேரன் யமக வெண்பா

வீணை, சங்கு, புல்லாங்குழல், பாச்சிகை, பறவை என்னும் இவற்றின் ஓசையைப் போன்ற ஒலியும், மலையின் அடிவாரத்திலிருந்தும், கிணற்றுக்குள்ளிருந்து பேசுவோரைப் போன்ற ஒலியும், தாரை, பேரி என்னும் வாத்தியத்தை ஒத்த ஒலியும் உடைய பிணியாளர்கள் போன்றவை சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளன.

நோயின் தன்மையைச் சொல்வதற்கு இயலாத சிறு குழந்தைகளில் அவர்களின் அழுகை ஒலி நோய் கணிப்பிற்குப் பெரிதும் உதவுகிறது. பிறந்த உடன் குழந்தை அழும். அல்லது அழச் செய்தல் வேண்டும். இவ்வாறு அழும்போது நிறைமாதக் குழந்தை எனில் நுரையீரல்கள் நன்கு விரிவடைவதால் குரலெடுத்து வாய்விட்டு அழும். அதுவே குறை மாதக் குழந்தையாக இருப்பின் நுரையீரல்கள் நன்கு விரிந்து சுருங்காத காரணத்தால் ஈனமான குரலில் பூனைபோல் அழும். பசியினால் அழும் ஒலியையும், நோயினால் அழும் ஒலியையும் அனுபவத்தால் பிரித்தறிய இயலும். மேலும் வயிற்றில் நோயிருந்தால் வயிற்றிலும், காது நோயானால் காதிலும் கையை வைத்துக் கொண்டு அழும். இதுவும் நோய்கணிப்பிற்கு மிகவும் உதவும். இவையன்றி மூளைவளர்ச்சிக் குறைவு, மண்டையில் நீர் கோத்துப் பெருத்தல், உள் நாக்கு வளர்ச்சி இன்றிப் பிறக்கும் குழந்தை இவற்றின் குரலொலி ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக ஒலிக்கும். ஆண்பிள்ளைகளில் குழந்தைப் பருவத்திலிருந்து காளைப் பருவத்தை அடையும்போது அவர்களின் குரல் மாறுபட்டு அமையும். கணை நோயுள்ள குழந்தைக்கு மேல் மூச்சு, கர் கர் என்ற ஒலியுடன் இருமல், தொண்டைக் கம்மல் போன்றவை காணப்படும்.

**கொக்குக் கொக்கெனுங் கோழையிருமலால்**
**கக்குவாய்**

என்று குழந்தை மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது.

**கொக்கரித்துத் தும்பிக் கிளர்ந்திருமல் உண்டாகும்**
**கொக்கரித்துப் பற்கடித்துக் கோழைகபமே இறங்கி**
**வக்கரித்தங் காண்பெண்ணுமற்கட்டி யிட்டாற் போல்**
**நக்கரித்து நாணு நவில் கக்கு வானதுவே**

(பாலவாகடம், பக்.380)

ஒருவகையாகக் கூவித் ததும்பி மிகுதியாக இருமல், தேம்பல், பல்லைக் கடித்தல் போன்றவை கக்குவான் என்னும் நோயின் தனித்தன்மை உள்ள குறி குணங்களாகும்.

குரல் கம்மல் ஏற்படுவதைக் கொண்டு குரல்வளை இளைப்பு நோயையும், நிண வளர்ச்சியினால் ஏற்பட்ட குரல் கம்மலையும் அறிய முடியும். மூக்கடைப்புடன் நோயாளி பேசும் ஒலியிலிருந்து பீனிச நோயை அறியலாம்.

இருமல் ஒலியினைக் கொண்டும் இவ்வகை நோய் எனக் கணிக்க இயலும்.

**மார்பில் விலாவிரண்டில் மண்ணுமிரு நெறியில்**
**சேர்ந்து வலித்தல் திணறல் – தார்மூச்சு**
**உப்பல் வயிற்றி லுருவதுவே முற்குறியாச்**
**செப்பிரைப்பு நோய்க்கிதனைத் தேர்**

என்பதிலிருந்து மூச்சுவிடும் ஒலியைக் கொண்டு இரைப்பு நோயைக் கணிக்கலாம். தமரகத்தில் எழும் மாறுபட்ட ஒலியினைக் கொண்டு தமரக நோயைக் கணிக்க இயலும். விக்கல் ஒலியும் நோயைக் கணிக்க உதவும்.

பக்க சூலையில் மூச்சு விடும் ஒலியிலிருந்து, புப்புசப் பகுதியைத் தட்டிப் பார்த்து – கணிக்கலாம்.

பெருவயிறு நோயில் வயிற்றைத் தட்டிப் பார்த்து, நீர், காற்று, கழலை, கட்டி, இவற்றில் எதனால் ஏற்பட்ட பெருவயிறு என்று அறியலாம்.

குடலிலிருந்து எழும் இரைச்சல் போன்றவற்றிலிருந்து குடற்பிடிப்பு, செரியாமை போன்றவை அறியலாம்.

தைராய்டு சுரப்பு குறைவுகளால் உண்டாகும் குரல் கம்மல், உள்நாக்கு இல்லாததால் உண்டாகும் குளறுதல் பேச்சொலி போன்றவை நோய் கண்டறிய உதவும் ஒலிகளாகும்.

முகவாதம், பக்கவாதம் போன்ற நோய்களில் நோயாளியின் பேச்சொலி மாறுபடும். கருப்பையில் உண்டான கட்டி போன்றவைகளைத் தட்டிப் பார்த்தெழும் ஒலியைக் கொண்டு நோயைக் கணிக்கலாம்.

ஒலி, நோயறிவதற்கு மட்டுமின்றி நோய் தீர்ப்பதற்கும் பயன்படும். வினாடிக்குச் சுமார் 80,000 அதிர்வுகள் செய்யும் உலோகக் கோல்களைக் கொண்டு, உடலைத் தடவினால் அலைகள் உடலில் ஊடுருவிச் சென்று தசைகளை இதமாக அமுக்கிக் கொடுக்கும். அதனால் உடம்பில் ஏற்படும் பலவித வலிகள் நீங்கும்.

அறுவை சிகிச்சையில் இப்பொழுதெல்லாம் கத்திக்குப் பதில் செவியுணரா ஒலி அலைகளைப் பயன்படுத்தி உடலுக்குள் பிணியுற்ற பகுதிக்குச் சரியாக அனுப்பி அழித்து மற்ற இடங்களைப் பாதிக்காமல் சிகிச்சை செய்கின்றார்கள். பித்தக் கற்கள், சிறுநீரகக் கற்கள் முதலியவற்றை உடைத்துத் தகர்த்து இவை, இயற்கையாகவே வெளிவரும்படி செய்கின்றனர்.

# 8. இசையும் பஞ்ச பூதக் கூறுகளும்

1. நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களில் தன்மையியல்பாகிய தன் மாத்திரைகளில் - முதல் நான்கு ஆகாயத் தன் மாத்திரையில் ஒருங்கு கலந்து செவிப்புலன் வழியாக அந்தக் கரணங்களைப் பற்றும் நாத ஓசையே இசையாகும்.

2. நிலம், நீர், நெருப்பு, காற்று ஆய நான்கிலும் ஆகாயக் கூறு கலந்திருக்கும் - காற்றில் 1/2, பங்கும் நெருப்பில் 1/4 பங்கும், நிலத்தில் 1/2 பங்கும், நீரில் 1/16 பங்கும் கலந்திருக்கும். கருவிகளுக்கு ஏற்பச் சிறிது வேறுபடும்.

3. இவற்றின் கலவைகளில் அளவு மிகின் வெறுப்பும் பிணியும் பற்றும் - அளவு குறையின் சோர்வு மிகும் - பயன் குறையும். இவற்றை வெகுசுரம் என்றும் அபசுரம் என்றும் கூறுவர்.

4. மக்கள் குரலில் காற்றும் நெருப்பும் மிகும். நிலமும் நீரும் குறையும். இவை வன்மை மென்மை இடைமையாகச் சாரீரத்திற்கு ஏற்ப வரும். சாகித்யத்திற்கேற்ப வேறுபடும். விலங்கு - பறவை - இவற்றின் குரலில் பல்வேறு நிலையில் அமையும்.

5. நரம்புக் கருவியில் நிலமும் நீரும் நெருப்பும் மிகும். காற்றும் குறையும். குழற்கருவியில் நெருப்பும் காற்றும் மிகும் நிலமும் நீரும் குறையும்: தோற் கருவியில் நிலமும் நீரும் மிகும். காற்றும் நெருப்பும் குறையும், நீரும் நிலமும் மிகும். நெருப்பு சமநிலையிலும் காற்றுக் குறைந்தும் அமையும்.

6. சுருதியில் சமமாக அமையும் - பணிகளின் அமைப்பிற்கு ஏற்ப வலிவு. மெலிவு சமம் எனப் பிரிவுபடும்.

7. மேலை நாட்டு ஆர்மோனியம் - பியானோ முதலியவற்றில் நாற்பூதக் கூறுகளும் - ஒவ்வொன்றும் மிகுந்து குறைந்தும் ஏற்ற இறக்கமாக வரும்.

# 9. சங்கீதமும் சோதிடமும்

1. ஐந்திலோ, இரண்டிலோ புதன் சுக்கிரன் அல்லது குரு சுக்கிரன் இருப்பின் சங்கீதத்தில் அறிஞனாவான்.

2. புதனும் குருவும் சுபராக இருக்கும் சாதகன் சங்கீதத்தில் நிபுணனாவான்.

3. ஏழில் சுக்கிரன் நீசனாக இருந்தால் சிற்றின்பப் பாடல்களைப் பாடுவான்.

4. இரண்டில் சுக்கிரனும் செவ்வாயும் இருப்பின் பக்திப் பாடல்களைப் பாடுவான்.

5. இரண்டில் சனி பகவான் இருந்தால் கருணாசரப் பாடல்களைப் பாடுவான்.

6. ரிஷபம், கன்னி, மகரம் ஆகிய இராசிகள் பாட்டுக்கு இனிமை சேர்க்கும். ரிஷபம், மிதுனம், மகரம், துலாம் நல்ல உச்சரிப்பையும் இனிமையையும் தரும். சங்கீதத் திறமை இருக்கும். மேஷம் சிம்மம் தனுசு நல்ல உச்சரிப்புத் தரும்.

7. கடகம், விருச்சிகம் – மீனம் – சங்கீதத்திற்குப் பாதகமானவை.

8. சங்கீதகாரகன், சுக்கிரன்.

9. புதன், சுக்கிரன், சந்திரன், சந்திரன் சங்கீத போஷகர்கள் 10 புதன் வாக்குக் காரகன்.

# 10. தமிழிசையும் சித்தமருத்துவமும்

உலகத்திலுள்ள இசைக்கெல்லாம் இந்திய இசையானது அடிப்படையாக உள்ளது. இதை இசை வல்லுநர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர். இந்திய இசைக்கு அடிப்படையாகத் தமிழிசை உள்ளது. தென்னிந்திய இசை மரபை, " நாரதர் மரபு" என்றும், வட இந்திய இசை மரபை "அனுமன் மரபு" எனவும், அசாம், திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், அருணாசலப் பகுதி போன்ற பகுதிகளில் வழங்குவது ''தும்புரு மரபு'' எனவும் அழைக்கப்படுகின்றது.

பிறப்பு முதல் இறுதிவரையில் இசையுடன் இணைந்த வாழ்க்கையைத் தமிழர்கள் பழங்காலந்தொட்டே பின்பற்றி வந்துள்ளனர். இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அறிவியல் அடிப்படையில் தமிழிசை இன்று ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. ஆய்வுமையங்களில் "இசை மருத்துவமும்" புதிய துறையாகத் துவக்கப் பட்டுள்ளது. இவ்வாய்வு மையங்கள், சில வகையான நோய்களை, குறிப்பாக மனநோய், குடற்புண், இதய நோய், நரம்புமண்டல நோய்கள் போன்றவைகளை நீக்குவதாக இன்று அறிவியல்முறையில் கண்டறியப் பட்டுள்ளது. தொன்மைக் காலம் முதலே தமிழிசைக்கும், சித்த மருத்துவத்திற்கும் நீண்டதொரு உறவு நிலவி வந்துள்ளது.

தமிழிசைக்கும், சித்தர்களுக்கும் நீண்ட காலமாகவே உறவு இருந்துள்ளதைப் பல்வேறு சான்றுகளால் அறியலாம். செவ்வியலாக இருப்பினும், நாட்டுப்புறவியலாக இருப்பினும், சித்தர்களின் பாடல்கள் தமிழர்களின் உள்ளங்களில் நிறைந்துள்ளன. மிக்க இசையறிவு கொண்டோர் மட்டுமன்றி, படியாத பாமரரும் சித்தர்களின் பாடல்களைப் பாடுகின்றனர். ஒற்றைத் தும்புராவை ஏந்திப் பிச்சையெடுக்கும் ஆண்டி முதல் மிகப்புலவைமிக்க இசைவாணர்கள் வரை சித்தர்களின் பாடல்கள்,

பாடக் கூடியவகையில் எளிமையாகவும், பொருள் செறிவுடனும் காணப்படுகின்றன. தமிழிசையானது பல்வேறு காலங்களில், பல்வேறு மாறுதல்களுக்குள்ளாகியது. தேவாரகாலத்திலும், அதற்கு முன்னுமுள்ள இசையின் வரலாறு தெள்ளத் தெளிவுடன் காணப்படவில்லை. கி.பி.2ஆம் நூற்றாண்டின் சிலப்பதிகாரத்தை "அடியார்க்கு நல்லாரின்" துணைகொண்டே நோக்க வேண்டியுள்ளது. இதுபோன்றே கி.பி.5ஆம் நூற்றாண்டு நூலான திருமூலரின் "திருமந்திரத்தின் வழியாகவே, சித்த மருத்துவத்தின் சிறப்புகளை அறிய முடிகிறது. இந்நூலுக்கு அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர் இல்லாத நிலையில், பொருளைத் தெளிவாகக் காணும் நிலை இல்லை. இதைப்பற்றி ஆய்வுகள் கூட இன்னும் தொடங்கப்படவில்லை.

நம் உடலானது இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, என்பு, தோல், மூளை என்ற ஏழுவகையான பொருள்களால் இயங்குகிறது. இசையும் ஏழுவகையான பண்களால் இயங்கும். இசையை "மிடற்றோசை" எனவும் கருவிகளோசை எனவும் பிரிக்கலாம். ஏழிசையில் முதலில் வருவது "குரல்." இதற்கு நல்லுடல் வேண்டும். இல்லையேல் இனிய இசை பிறக்காது. குரல்வளத்தைப் பாதுகாப்பது இசை வல்லோரின் கடமையாகும். குரல் வளம், கெடாமல் காக்கும் வழிகளைச் சித்தர்கள் விளக்கியுள்ளார்கள். ஒலியானது தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் என்ற இடங்களில் பிறக்கும் என்று தமிழிலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. ஏதேனும் இவ்வுறுப்புகளில் பாதிப்பு ஏற்படின் இசையை நல்முறையில் பாட இயலாது. குரலைக் காக்கும் வழிமுறைகளை இசை நூல்களிலும் பரக்கக் காணலாம்.

அண்மைக் காலத்தில் சிறந்த சித்தமருத்துவராகவும், இசையறிஞராகவும், இசைப்பெருநூலான "கருணாமிர்த சாகரத்தை" இயற்றியவரும், தஞ்சையில் வாழ்ந்தவருமான ஆப்ரகாம் பண்டிதரைப் பற்றி இங்குக் குறிப்பிடாமலிருக்க முடியாது. பழைய சித்தர்களின் மரபை ஒட்டியே அவர் இசைத் தொண்டாற்றியுள்ளார். ஆயின் இவர், சித்தர்கள் கூறிய இசையைப் பற்றி எங்கும் கூறவில்லை என்பது பெருங்குறையாகும்.

சித்தர்கள் செவ்வியல், நாட்டுப்புற இயல் ஆகிய இருதுறைகளில் தங்களுடைய பாடல்களைப் புனைந்துள்ளார்கள். கும்மி, குறவஞ்சி, சிந்து போன்றவகை நூல்களை நாட்டுப்புறவியலிலும், மருத்துவ பாரதம் போன்ற சித்தர்கள் நூல்களை, செவ்வியலிலும் அடக்கலாம். சித்தர்களின் பாடல்களைப் பற்றித் தமிழ் நாட்டிலிருந்த சித்தர்கள் தத்துவப் பாடல்களை இயற்றியதோடன்றி, மருத்துவத்திலும் வல்லுநர்களாக விளங்கினார்கள். எளிதில் பொருள்புலப்படுமாறு பல பாடல்கள் அமைந்துள்ளன. இவை "மென்நடை" எனப்படும். சித்தர்கள் பொதுமக்களைப் பற்றிப் பாடியுள்ளனர். இப்பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துகள் நிறைந்திருக்கும். சித்தர்களின் எளிய பாடலில் மெய்யறிவு உட்பொருளாகத் திகழ்ந்தது என்றும் அவற்றின் மெட்டுகளும், பெரிய முறைகளில் அமைந்திருந்தன என்றும் அறியலாம். அகத்தியர் பஞ்ச காவிய நிகண்டில் இசையுடன் தொடர்புள்ள "நாதம்", "இராகம்", "பண்", "வாரம்", "தாரம்" போன்ற சொற்கள் இடம்பெறுகின்றன.

சித்தர்களின் இலக்கியங்களில் உள்ள இராகங்கள் சந்தத்துடன் அமைந்துள்ளதைக் காணலாம். "வைத்திய சிரோரத்தின நடன காண்டம் 1500" இல் நந்தீசர், அகத்தியர் மச்சமுனி, பிடிநாக்கீசர், தன்வந்திரி, புலத்தியர், புசண்டமூர்த்தி, கருவூரார், திருமூலர், சட்டமுனியார், உரோம ரிஷியார், கொங்கணர், பிரமமுனி ஆகியோர் தரு-நொண்டிச் சிந்து சந்தத்தில் பாடல்களை யாத்துள்ளனர். இடைக்காட்டுச் சித்தர் பாடலுக்கு இசையமைக்கப்பட்டுள்ளது. "தாண்டவராயக் கோன் என்ற தலைப்பிலான சந்தம்." "தாந்திமிதிமி திந்தக்கோனாரே, தீந்திமிதிமி திந்தக்கோனாரே, ஆனந்தக்கோனாரே, ஆனந்தக்கோனாரே." இப்பாடல், திரைப் படத்திலும் சிறிது மாற்றத்துடன் பாடப்பட்டது. "நாராயணக்கோன்" பாடுவதாக. "தந்தனதானானே" என்ற மெட்டும் உள்ளது. பிண்ணாக்கு சித்தரின் பாடலுக்குச் "சிந்து" இராகம் கூறப்பட்டுள்ளது. "வைத்திய சிரோரத்தின நடன காண்டம்" என்ற நூலில் பல்வேறுவகை இராகங்களின் பெயர்கள் பாடலுடன் இசைக்கும்படியுள்ளன. நந்தீசரின் மனோரஞ்சித லேகியம் - ஆனந்தக் களிப்பு, அகத்தியரின் சந்திரோதய லேகியம்- விருத்தம், மச்சமுனியின் வாதகுடோரி லேகியம்- விருத்தம், கொங்கணரின்

சௌபாக்கிய பன்னீர்ப்பூ லேகியம், வண்ணம், சட்டை முனிவரின் ஆனந்தச் சூரணம்- சுத்தசஞ்சீவி, உரோமரிஷியின் அழகிய சொக்கநாதச் சூரணம் - திருப்புகழ் சந்தம், நோய்தீரல், குயில்பாட்டு, (சுந்தரரின் செயப்பூரணச் சூரணம், ஏலப்பாட்டு, (ஓடப்பாட்டு) தேரையரின் வச்சிரவல்லிச் சூரணம், ஞானவெட்டிச் சந்தம், (திருவள்ளுவரின் ஞானவெட்டியான் 1500) என்ற சித்தர் நூலில் வகுக்கப்பட்டுள்ள சந்தம் மேகராசாங்க சண்டமாருத எண்ணெய், கும்மிச் சந்தம், எண்ணெய் பாகவிதம், நொண்டிச் சந்தம், புங்கம்வேர் எண்ணெய், வண்ணப்பா, வீரமா முனிவரின் கடைச்சரக்கின் பாகம். கும்மி, இது போன்றே "சித்தர்களின் பெரிய ஞானக்கோவை" யிலும் வருகின்றது. "பதஞ்சலி ஞானம் " என்ற தலைப்பில் திருப்புகழ் காப்பு சந்தத்திலும், "காய கற்பச் செந்தூரம்" என்ற தலைப்பில் "சந்தவிருத்தம்", "மவுன சித்தர்பாடல்" என்ற தலைப்பில் முடுகுவிருத்தமும், குறவஞ்சிப்பா சந்தமும் வருகின்றன. "சித்தராரூட நொண்டிச் சிந்து" என்ற சித்தர் நூல் சிந்து என்ற யாப்பில் அமைந்ததாகும். ஒன்பது சிறு நூல்களை இணைத்து மதுரை குருசாமி கோன் பதிப்பித்துள்ளார்கள். இந்நூலைப் பற்றி, "தமிழிலக்கிய வரலாற்றில்" தமிழறிஞர் மு. அருணாசலம் பின்வருமாறு எழுதுகின்றார். **"சித்தராரூடம்" இது சித்த மருத்துவ நூல். சிந்துப் பாடல்களின் தொகை 312. 5 பாடல்கள் மட்டும் விருத்தம். இந்நூல் இயல்புகாரணமாக மிகவும் எளிய, நடையிலிருப்பது தெளிவு. மிகவும் பிற்காலத்து நூல் என்று ஒதுக்கிவிட முடியாது. இதன் காலம் 13ஆம் நூற்றாண்டு". சித்தராரூடம் என்ற நூலைப் பற்றி "நச்சினார்க்கினியர்" தமது உரையில் சுட்டுகின்றார். உயிரின நஞ்சுகளைப் பற்றியும் அதற்கான மாற்று பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளது.** மு. அருணாசலத்தின் கருத்துகளுக்கு முரண்பட்டுள்ள கருத்துகளும் தமிழறிஞர்களிடைய உண்டு. "17ஆம் நூற்றாண்டுக்குமுன் நொண்டிச் சிந்துப் பாடல்களில்லை". எனவே, சித்தராரூடம் பற்றி நச்சினார்க்கினியர் குறிப்பிடும் நூலும் "சித்தாரூட நொண்டிச் சிந்தும்" ஒன்றல்ல எனலாம். "சித்தாரூட நொண்டிச் சிந்து" இசையுடன் அமைந்த நூலாகும். தாளமுடைய சிந்துப் பாடல்கள் முதன் முதலாகச் சித்தர் பாடல்களில் காண்கின்றோம். சிவவாக்கியர் பாடல்கள் யாவும் அந்தப் பாடல்கள்". சிந்துப் பாடல்கள் ஆதிதாளம் முதல் பகுதி, 1கோல், அடுத்த பகுதி இரண்டு அடிகளிலடங்கும்".

தேரையர் இயற்றிய "மருத்துவ பாரதம்" என்ற நூலுக்கு இசை வகுக்கப் பட்டுள்ளது. மேலும் இது இசை நாடகமாக மக்கள் மத்தியில் நடிக்கும்படிப் புனையப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள இராகங்கள், தாளங்கள் சிலவற்றை இங்குக் காணலாம்.

| பக்கம் | இராகம் | தாளம் | பருவம் |
|---|---|---|---|
| 1 | துசாவந்தி | அடதாளம் | முதல் |
| 2 | நாட்டை | ஆதிதாளம் | முதல் |
| 4 | ஆரபி | ,, | ஆதிபருவம் |
| 6 | பியாக்கடை | ,, | ,, |
| 7 | தரு | சம்பை | சபாபருவம் |
| 8 | ,, | திருபுடை | ,, |
| 9 | தரு | நொண்டி | ,, |
| 22 | வராளி | ஆதிதாளம் | ஆரண்ய பருவம் |
| 33 | கல்யாணி | ரூபகதாளம் | விராட பருவம் |
| 34 | தோடி | ஆதி ,, | ,, |
| 36 | சௌராட்டகம் | ரூபகம் ,, | ,, |
| 40 | கேதாரகௌளம் | ஆதி தாளம் | உத்தியோக பருவம் |
| 42 | தன்னியாசி | ஆதி தாளம் | ,, |
| 43 | கௌளிபந்து | அடதாளம் | ,, |
| 46 | மோகனா கல்யாணி | ஆதிதாளம் | வீட்டும பருவம் |
| 50 | மத்தியாவதி (முத்தியாவதி) | ஆதிதாளம் | வீட்டும பருவம் |
| 57 | உசேனி | அடதாளம் | வீட்டும பருவம் |
| 81 | ,, | அடதாளம் | வீட்டும பருவம் |
| 84 | பைரவி | ஆதிதாளம் | துரோணபருவம் |
| 85 | தோடி | அடதாளம் | ,, |

| பக்கம் | இராகம் | தாளம் | பருவம் |
|---|---|---|---|
| 88 | மத்திமாவதி | ஆதிதாளம் | துரோணபருவம் |
| 90. | பந்துவராளி | ஆதிதாளம் | ,, |
| 103 | வராளி | ஆதிதாளம் | கர்ணபருவம் |
| 106 | மத்திமாவதி | அடதாளம் | கர்ணபருவம் |
| 108 | கல்யாணி | ஆதிதாளம் | ,, |
| 119 | சங்கராபரணம் சல்லியபருவம் | ஆதிதாளம் | |
| 121 | தோடி | ரூபகதாளம் | சல்லியபருவம் |
| 122 | முகாரி | ஆதிதாளம் | ,, |
| 123 | ஆனந்தபைரவி | ,, | ,, |
| 124 | தரு | ஆதிதாளம் | ,, |
| 130 | மோகனம் | ஆதிதாளம் | கதாபருவம் |
| 131 | மோகனம் தரு | சாப்பு | ,, |
| 132 | வராளி | | ,, |
| 133 | இந்துஸ்தானி காபி | ஆதிதாளம் | ,, |
| 144 | சோபனம் ஆனந்தபைரவி | சாப்பு | 18ஆம் நாள் போர் |
| 144 | மங்களம் ஜெயமங்களம் | நிறைவு | |

“தாளப் பாக்கம் அன்னமாச்சாரியார் பல்லவி, சரணம் என்ற முறையில் முதன் முதலில் பாடல்களைப் புனைந்தார்கள்.” மருத்துவ பாரத நாடகம் என்பது இம்முறையிலேயே உள்ளது. சித்தர்தாமே இசையமைத்தார்களா? அல்லது பின்வந்தவர்கள் இசையமைத்தார்களா? அவ்விதம் அமைத்தவர்களின் வரலாறு என்ன? என்பதை ஆய்வு செய்தல் வேண்டும். “18ஆம் நூற்றாண்டில் புதிய வகையான கீர்த்தனங்கள், இராக

தாள நுணுக்கங்களை விளக்கும் இசைப்பாக்கள் (கீர்த்தனங்கள்) ஏற்பட்டன. கீர்த்தனங்களை உரையியல், இசையியல் எனப்பிரிக்கலாம். உரை இயல் சாகித்தியத்தில் உரைநடை அதிகம். சங்கீத நடையானது குறைவு. இசைஇயல் சாகித்தியத்தில் சங்கீத நடை அதிகம்; உரை நடையானது குறைவு. எடுப்பு (பல்லவி) தொடுப்பு (அனுபல்லவி) முடிப்பு (சரணம்) என்ற வகையில் இசைப்பாடல்கள் காணப்படும். இவ்வகையான தோற்றத்திலேயே சித்தர்களின் பாடல்கள் உள்ளன. "தியாகைய்யர் காலத்துக்கு முன்னால் பாடல்களின் சொற்களுக்கே முதலிடம் தந்தார்கள். எனவே, ஒரே மெட்டில் பல பாடல்களைப் புனைந்தார்கள். தியாகைய்யர் சுருதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மெட்டு அமைத்தார். திரிகூட இராசப்பக் கவிராயர், இவருக்கு முன்பே இதை அமைத்திருந்தார். இத்தகைய நோக்கில், சித்தர்களின் பாடல்கள் ஆய்வு செய்யப்படவில்லை. இவற்றை ஆய்வு செய்தல் வேண்டும்.

சித்தர்களின் நூல்களில் வாய்ப்பாட்டு பற்றியும், அத்துடன் சேர்ந்திசைக்கும் கருவிகள் பற்றியும் இசையுடன் சேர்ந்த இசை நாடகம் பற்றியும், கூத்து என்ற இசைநாடகம் பற்றியும் வருகிறது. கூத்தை நாட்டுப்புறவியலாகவும், நாடகத்தை செவ்வியலாகவும் கொள்ளலாம்.

**பாடலென்ற தமிழெல்லாம் பாடம் பண்ணி**
**பசப்பியே ஆண்டியர்கள் படித்துக் கொள்வார்**

**ஆடவே தண்டக்க மூலிவேரைப்**
**பாடவே, சொல்லிப் படித்து வைப்பார்கள்**

**உருகியே விழும்போது**
**ஒகோகோ மணியைக் கண்டேன்**
**பருகியே பின்னும் சென்றேன்**
**பரவிய முரசும் கேட்டேன்**
**தருகியே பின்னும் சென்றேன்**
**தனிச்சங்கு நாதம் கேட்டேன்**
**அருகியே பின்னும் சென்றேன்**
**அறைந்த பேரிகை போலாச்சே**
**ஆச்சென்ன பின்னும் சென்றேன்**
**அப்பனே மேகநாதம்**

**வாச்செனப் பின்னும் சென்றேன்**
**மகத்தான இடிபோல் நாதம்**
**ஓச்சென அதன்மேல் செல்ல**
**ஓகோகோ, சிலம்பினோசை**
**மாச்சென செவிடுமாச்சு**
**மயக்கிற்று, கண்கெட்டேனே**

**முத்தமிழ் கற்று முயங்கு மெய் ஞானிக்கு**
**சத்தங்களேதுக்கடி – குதம்பாய்**
**சத்தங்களே துக்கடி**

– குதம்பைச் சித்தர் பாடல், பெரிய ஞானக்கோவை

**நமது குரலாகப் பரிட்சை கண்டு**
**தேம்பெடுத்து விழிஈன்றார் செவிக்கே இன்பம்**

**கண்கெட்டேன், செவியும் கெட்டேன்**
**கருதிய நினைவும் கெட்டேன்**
**பண் கெட்டேன், குளிகை கெட்டேன்**

**ஆயிரம்பேர் சித்தருடன் அனுதினமும் பாடி**
**ஆனந்தத் திருநடனமாடுவமே கூடி**

இசைக் கருவிகளுடன் இணைந்து நடத்தும் இன்னிசை நிகழ்ச்சியையும் சித்தர் பாடல்களில் பார்க்கலாம்.

இசையில் குரலானது முதல் இடத்தைக் கொண்டது. உயர்ச்சி, தாழ்ச்சி என்பன இதில் இடம்பெறுகின்றன. இதனை முகடு, அகடு என்பர். இசையை மூன்று பிரிவுகளாகக் கொண்டு லய இசை, ஒழுங்கு இசை, ஒருங்கு இசை என்றுரைப்பர். (ரிதம், மெலடி, ஆர்மனி) ஒலிகளின் கால அளவு (மாத்திரை) ரிதம் எனவும், ஒலியின் ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படும் இன்ப உணர்ச்சி ஆர்மனி என்றும், வகைப்படுத்தப்பட்டன. இதுபோன்றே நட்பு, பகை என்றும் (கண்கார்டு, டிஸ்கார்டு) உணர்ச்சிகள் அடிப்படையாகவும் இராகங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நட்புள்ள இசை காதுகளில் இனிமையாகவும், பகையானது வெறுப்பையும், வழங்கும். விம்மல்கள், வினாடிக்கு அதிகமாகும்போது, செவிகளில் வெறுப்புணர்வு தோன்றும்.

இசை பிறக்குமிடங்களான உறுப்புகள், தலை, மிடறு, நெற்றி, நாக்கு, நெஞ்சு, உள்நாக்கு, மூக்கு என்பனவாகும். குரல்– மிடறிலும், விளரி – நெற்றியிலும், துத்தம் – நாக்கிலும், இளி – நெஞ்சிலும், கைக்கிளை – உண்ணாக்கிலும், தாரம் – மூக்கிலும், உழை – தலையிலும் பிறக்கும் என இசை நூல்களில் வருகின்றது. குரல், கைக்கிளை, தாரம்– ஆண், இளி, துத்தம், விளரி – பெண், உழை – அலி என்றபடியும் இசை நூல்களில் வருகின்றது. குரல் துத்தம் – 4 மாத்திரை, கைக்கிளை, விளரி – 3 மாத்திரை, தாரம், உழை– 2 மாத்திரை எனவும், வரையறை செய்துள்ளார்கள். மாத்திரை என்பன, ஒலியின் அளவீடு எனலாம். குரல் வண்டின் ஒலி, கொக்கின் ஒலிக்கும் துத்தம், கிளி, குயில் இவைகளின் ஒலிக்கும் கைக்கிளை, குதிரையின் கனையொலிக்கும், ஆட்டின் ஒலிக்கும், உழை – யானையின் பிளிறலுக்கும், இளி – மயில், தவளை, குயில் – ஒலியையும், விளரி – பசுவின் ஒலிக்கும், தாரம் – ஆட்டின் ஒலிக்கும், ஒப்பிடப்பட்டன. இவ்வொலிகளைக் கொண்டே, செம்பாலை, படுமலை, செவ்வழி, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை மேற்செம்பாலை என்ற இராகங்கள் தோன்றின.

குரலிசையானது ஆ, இ, ஊ, ஏ, ஐ, ஒ, ஔ என்னும் உயிர் நெட்டெழுத்துக்களைக் கொண்டது. தாண்டவம், ஆண்கள் ஆடுவது. லாசியம் – பெண்களுக்கானது. இவ்வகை நடனங்கள் 108 வகையான அசைவுகளைக் கொண்டது. இவ்வசைவுகள் அடவு என்று பின்னர் அழைக்கப்பட்டன. பதம், காமத்தைக் கொண்ட பாடல், சாவளி – காமத்தை வெளிப்படையாகக் கொண்ட பாடல், தில்லானா – சொற் கட்டுகளைக் கொண்டது. நடனத்திற்கு இசையானது அடிப்படையானது.

# 11. இசையின் அறிவியல் ஆய்வு

குழந்தைகள் அடிபட்டாலோ, இடித்துக் கொண்டாலோ, அதன் தாய் வேறு ஏதேனும் ஒரு பொருளைக் காண்பித்து அதன் சிறப்பை வியப்புடன் சொல்வாள். அதனால் குழந்தை தன் வலியை மறந்து அழுகையை நிறுத்தி அந்தப் பொருளின் மேல் கவனத்தைச் செலுத்தும். இந்த அடிப்படையிலேயே தலைவலி, பல்வலி, அறுவை சிகிச்சைக்குப் பின் உண்டாகும் வலி இவற்றிற்கு இசை மருத்துவத்தை வலி நீக்கியாகக் கையாளுகிறார்கள்.

ஒற்றைத் தலைவலி உள் ஆண் நோயாளர் 14 பேர்களுக்கு பெண் நோயாளர் 36 பேரும் ஆக 50 நோயாளர்களில் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பிரிவிற்கு Electro Acupunture மற்றொரு பிரிவிற்கு Electro Acupunture இசையுடன் சேர்த்தளிக்கப்பட்டது. இரண்டாம் பிரிவில் உள்ளவர்களில் 92% விழுக்காடு நோயாளர் விரைவில் குணமானார்கள்.

அதேபோல் மூட்டு முழங்கால் வலி உள்ள நடுவயதினர்க்கு இசையுடன் மருத்துவம் புரிவது குறைந்ததாக மேல் நாட்டு ஆய்வு தெரிவிக்கின்றது.

இதனால் இசையுடன் கூடிய மருத்துவம் பயனளிப்பதை அறிவியல் பூர்வமாகவும் ஆய்வு செய்துள்ளனர்.

# 12. ஒலி அலை மருத்துவம்

பாரதியார் தன்னுடைய பாடலில்,

**கத்தும் கடலோசை சற்றே வந்து**
**காதில் படவேண்டும்**

என்பார். இந்த வரிகளில் உள்ள ஆழத்தை நாம் உணர வேண்டும். கடலோசை என்பது அதிக சத்துடன் பயமுறுத்தக் கூடியது. அதனால்தான் கத்தும் கடலோசை என்றார். இந்தக் கடலோசையே தூரத்திலிருந்து கேட்கும்போது இனிமையான இசையாகிவிடும். டீக்கடைகளிலும் கல்யாண வீடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் இனிய இசை கூடச் சத்தமாக மட்டுமே ஒலிக்கும்.

குழந்தையைத் தூங்கச் செய்யும் தாய் குழந்தையை மடியில் கிடத்திக்காலை ஒரே வேகத்தில் மேலும் கீழும் அசைக்கிறாள். அதே சமயம் கையினால் குழந்தையின் மார்பில் மெதுவாக ஒரே வேகத்தில் தட்டிக் கொடுக்கிறாள். இத்துடன் பாடலையும் வாயினால் பாடுகிறாள். அழும் குழந்தை அழுகையை நிறுத்தி உறங்குகிறது. இது ஒலி, தட்டுதல், அசைத்தல் இவற்றின் அதிர்வால் உண்டாகிறது.

நடனத்தில் ஜதி சொல்லுபவர் சொல்லும் ஒலி அதிர்வுக்கு ஏற்பக் கால், கை மற்றும் உடலை அசைத்தலே நடனமாகும்.

தாளமிடுதலும் ஓர் ஒலி அலையின் அதிர்வேயாகும். தாளமிடுவோர் வெவ்வேறு பாடல்களுக்குக் குறிப்பிட்ட கால இடைவெளியில் சத்தம் உண்டாக்கும் தாளம் எனப்படும். கைகள் இரண்டினால் தாளமிடுதல், தொடை, கால் பாதத்தை அசைத்துக் காளமிடல், உதடு, நாக்கு, கண்களால் தாளமிடுதல் எனப் பலவகைப்படும். தாளவாத்தியக் கச்சேரி தனி ஆவர்த்தனம் என்பதெல்லாம் ஒலி அலையை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வகை ஒலி அலைகளின்

அதிர்வுகளால் அதனை உண்டாக்குபவரும் கேட்பவரும் மகிழ்ச்சி அடைகின்றனர். மன அமைதி உண்டாகிறது.

தொக்கண மருத்துவம் என்பது இந்த மருத்துவத்தின் புறமருத்துவ முறைகளில் ஒன்றாகும். இதில் தட்டுதல், கொட்டுதல் என்ற அதிர்வுகள் வழி உடல் வலியைப் போக்கி உற்சாகத்தைத் தூண்டச் செய்வார்கள். இதுவும் ஓர் ஒலி அதிர்வு மருத்துவமேயாகும்.

இதுவே அதிக ஒலி அலை ஏற்படும் சத்தங்கள் மனத்தில் பயத்தையும் உடலில் நடுக்கத்தையும் ஏற்படுத்தும். அந்தப் பயம் பல நாட்கள் அவரைவிட்டு நீங்காது. மனிதர் விலங்குகளின் மன உணர்வுகள் அவர்தம் குரலொலியினால் அறிய முடியும். கோபம், ஆங்காரம், வீரம், அழுகை, தாழ்ந்த ஒலி இவை அவரின் மன உணர்வைக் காண்பிக்கும் காண்ணாடி, குயிலோசை கேட்டுத் துயிலெழ வேண்டும். நரியைப் பார்க்கலாமே தவிர அதன் ஊளையைக் கேட்கக் கூடாது என்பார்கள். உறங்குவோரையும் அவர் அருகில் படுத்திருப்பவரையும் குறட்டை ஒலி அதிரச் செய்து அவரின் உணர்வுகளைத் தூண்டிவிட முடியும். ஆடலுடன் பாடலைக் கேட்பதில்தான் சுகம் என்பார்கள். இதற்குக் கண் காது இரண்டும் வேலை செய்யவேண்டும். இசை கேட்கக் காதுகள் மட்டும் போதும். இதனால் பிற வேலைகளும் தடைபடாது.

# 13. நோய்களும் இசையும்

நோய்களுக்கும் இசைக்கும் தொடர்பு உள்ளது. இதைப் பல சான்றுகளால் அறியலாம்.

**வஞ்சனை பில்லி அடங்காப்பிணியையும்**
**மாற்றிப் புரந்தருள் சுந்தரியாம்**

வஞ்சனை, மந்திரங்களால் தீங்கு ஏற்படுத்துதல், உடலுக்குள்ள பிணிகள் ஆகியவற்றை அம்மன் நீக்குவாள்.

சீரணியம்மன் கும்மியில்,

**நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு**
**நச்சுப் பிணிகள் அணுகாமல்**
**பாலாயிறகும் வெண்ணீறும் தந்தவை**
**பஞ்சு பஞ்சாக்கும் மகமாயி**

இதில் மனிதனுக்கு வரும் நோய்கள் 4448 என்றும், இவைகளை அணுகவிடாமல் தடுப்பவர், சீரணியம்மாள் என்றும் கூறப்படுகிறது. சித்த மருத்துவத்தில் மனிதனுக்குள்ள நோய்கள் 4448 என்பது கும்மிப் பாடலில் வருகிறது. மரியான் உபதேசியார் தொழுநோயால் துன்பப்பட்டவர். இவர் பல பாடல்களை இசைவகுத்து இயற்றினார்.

பிளேக் நோயால் மக்கள் அடைந்த துயரத்தைப் பாடுகிறது. பிளேக் சிந்து. கீர்த்தனை எனப்படும் இசைப் பாடல் கடவுள் வணக்கத்தினைத் தொடர்ந்து பண் குறிப்புடன் தரப்பெற்றுள்ளது. பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்ற அமைப்பில் பாடல் அமைந்துள்ளது.

**மேகவியாதியாச்சு**
**மேனியழகும் போச்சு**

**பித்தம் நாப்பத்திரண்டாகும் – பிற**
**மேகம் இருபத்தி ஒன்று ஆகும்**

**எத்துவாதம் எண்பத்திநாலு – என்று**
**ஏத்திக் கும்மி அடியுங் கடி**

"அகத்தியர் கும்மி" என்ற பெயரில் வெளிவராத சுவடிகள் உள்ளன. வெளிவந்த நூல்களும் இன்று கிடைப்பதில்லை. எனவே கும்மி நூல்கள் அனைத்தையும் ஒருங்கே, தொகுத்து வெளியிடுதல் நன்மையைத் தரும். "அகத்தியர் கும்மி"யைப் போன்றே, கிராம மக்களின் கும்மியானது வாய்மொழி இலக்கியமாக வழங்குகிறது.

**மாதுளம்பிஞ்சு, தென்னம்பிஞ்சு நல்ல**
**மாவிலைக் கொழுந்துடன் தானத்தே**
**துளைப் பிள்ளைக் கழித்த கழிச்சல்**
**அகலு மென்றே கும்மி அடியுங்கடி**

என்று குழந்தையின் கழிச்சல் நோய் கூறப்படுகின்றது.

**கூத்திகறாக்காகவே**
**கூடையில் மருந்து வைத்தார்**
**நரைபோய் இளமைவர**
**நல்ல மருந்து வைத்தார்**
**வேசிக்கு மருந்துகள்**
**விதமுடனே வைத்தார்கள்**
**குமாரருக்கேற்ற மருந்து**
**வைத்தார் கூடையிலே**

முதுமை நீங்கிட, மருந்துகளை உண்பதும், பெண்மீதுள்ள பற்றால் மருந்துகளை அருந்துவதுமான வழக்கங்களைப் பாடலில் பார்க்கலாம். நோயின் வகைகள் வாதம் 84, பித்தம் 42, மேகம் 21 என்று கூறப்படுகின்றன.

"அண்மைக் காலத்தில் வாழ்ந்தவர் நாகசுரக் கலைஞர் நடேசம்பிள்ளை. இவருக்கு "இராசபிளவை"என்ற கட்டி வந்தது. இவர் கோட்டூர் தேனாம்பிகையை வழிபட்டு வந்தார். இவருக்கு இந்நோய் தீர்ந்தது.

"கோட்டூரில் செளந்திரராச பிள்ளை என்ற இசைக் கலைஞர் இருந்தார். இவர் வைத்தியம் விடங்களை நீக்கும் மந்திரம் இவற்றில் வல்லவர். காலையில் நாடி பார்த்து, உடல்நிலைக்கு ஏற்ப உணவு செய்யச் சொல்லல் வழக்கம்."

**பாவம் வந்து நேர்ந்ததானால்**
**பச்சிலையாலே ஒட்டிடுவேன்**
**மாற்றான் பிடித்தாலே**
**மருந்துண்டு வையத்தில்**

**பச்சிலையைத்தான் கசக்கி**
**பாவையர்கள் கண்ணில்விட**
**பச்சிலைச் சாறு பட்டவுடன்**
**பார்வை தெரிந்துதங்கே**

கண்ணோய்கள் தீர்வதற்கு நந்தியாவட்டை போன்ற மூலிகைகளின் சாற்றைக் கண்ணில் விடுவார்கள். இதன் மூலம் கண்ணில் உள்ள படலம் நீங்கும். இதையே இப் பாடலில் குறிப்பிடுகின்றார் புகழேந்திப் புலவர்.

கிராமங்களில் காளியம்மனும், மாரியம்மனும் வணங்கப் பெறுகின்றனர். காளி, மாரி என்னும் பதங்கள் வழக்கில் சில சமயங்களில் வாந்தி பேதி, வைசூரி என்ற நோய்களைக் குறிப்பதுண்டு.

| | | |
|---|---|---|
| 1. அசாவேரி | – | தலைவலி |
| 2. பைரவி | – | சிலேத்துமம், சயம் நீக்கும், ஜீவ சக்தியைப் பெருக்கும் |
| 3. கரகரப்பிரியா | – | பசியை மறக்கச் செய்யும் |
| 4. தோடி | – | சிலேத்துமத்தைக் குறைக்கும். சிரத்தில் உண்டாகும் வாதத்தைக் குறைக்கும். இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் |
| 5. இந்தோளம் | – | வாதநோய், கப நோய்களைத் தீர்க்கும். |

| | | |
|---|---|---|
| 6. சாரங்கா | - | பித்த நோய்களை க் குணப்படுத்தும். |
| 7. தன்யாசி | - | மனமகிழ்ச்சியைத் தரும் |
| 8. நீலாம்பரி | - | குழந்தைகளின் அழுகையை நிறுத்தும் |
| 9. ஜெயஜெயவந்தி | - | இந்துஸ்தானி – வலிப்புநோயை நீக்கும். |

நரம்புக் கருவிகளின் இசை இதயத்தையும், நரம்பையும் பலப்படுத்தும். குறிப்பு: பாடினால் 100 பங்கும், கேட்பதால் 50 பங்கும் பலன். தேவாரத்தில் இசைப் பாடல்களால் முயலகன் நோய் தீர்ந்தது. பாண்டியன் வெப்பு நோய் நீங்கியது. அப்பரின் குன்ம நோய் நீங்கியது. திருச்செங்கோடு பதிகம் குளிர் சுரம் நீக்கியது.

**திப்பிலி தேன்மிளகு, சுக்கினோ, டிம்பூறா**
**தப்பிலர் ஆன்பால், தலைக்காடை – ஒப்பிலா**
**வெந்நீரும், வெண்ணெய், மெய்சாந்தம் பூசலிவை**
**மன்னூழி வாழும் மகிழ்ந்து.** (வெண்பா)

திப்பிலி, மிளகு, சுக்கு, இம்பூரல் வேர் இவைகளைத் தேன், பசும்பால், வென்னீர், வெண்ணெய், காடையின் சாறு, இவைகளில் அருந்த தொண்டைக்கட்டு நீங்கும்.

**ஆட்டைக் கெடுத்தது ஊதையும், காற்றும் அடைமழையும்**
**நாட்டைக் கெடுத்தது கலகமும், பஞ்சமும் நலமுடைய**
**வீட்டைக் கெடுத்தது, மூஷிகஎலி மூட்டைநற்**
**பாட்டைக்கெடுத்தது இருமலும் கோழையும் பாழ் சளியே**

ஆடு மேய்ப்பவனுக்கு இழப்பைத் தந்தது குளிர்காற்று. விடாத பெருமழை, நாட்டுக்குத் தீங்கு விளைவிப்பவை. கலகம், பஞ்சம் என்பன. நல்ல இல்லத்தைப் பாழ்படுத்தியது மூஞ்சுறு, மூட்டைப்பூச்சி என்பன. பாட்டுக்கு இடையூறாக உள்ளன. சளி இருமல் என்பனவாகும்.

குழந்தையின் குரலானது, பூனையின் ஒலிக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. "பிள்ளை பிறந்தவுடன் அழுதுகொண்டே பிறக்கும்." "மிடறுதனைக் கட்டிப் பூனைக் குரல் போன்று என்று பாலவாகடத்தில் வருகின்றது. அழுங்கி அலரும், குரல் கம்மும்." "தாழ்தல் குரலொலியும் தானே" என்று ஆண்பட்சி தோடக்குறிக் குணத்தில் வருகின்றது.

**கண்டத்தில் வாந்திபேதி, அதிக மாச்சி**
**குளிரு காய்ச்சலில் பாதி, கூண்டோடே சாய்க்குது**
**குந்தியிருந்த பேரை வாந்தியில் மடக்குது**
**பேதியில் பாதி இப்படி மடிந்தாலும்**

வாந்திபேதி நோய் எல்லா இடத்திலும் பரவியது. குளிர் காய்ச்சல் மக்கள் தொகையில் பாதியைக் குறைத்தது. உட்கார்ந்திருந்தவர்களை வாந்தி நோய் தாக்கியது. கழிச்சல் நோயில் மக்கள் பல பேர் இறந்தார்கள்.

**பாவம் வந்து நேர்ந்ததானால்**
**பச்சிலையாலே ஒட்டிடுவேன்**

**மாற்றான் பிடித்தாலே**
**மருந்துண்டு வையத்தில்**
**நரைபோய் இளமைவர**
**நல்ல மருந்துண்டை கொள்வீர்**
**வாழாத பெண்களுக்கு வாழ்மருந்துண்டை கொள்வீர்**
**சேர மருந்துண்டை கொள்வீர்**
**சூத்திகளுக்காக மருந்துகொள்வீர் கொற்றவரே**
**வேசிக்கிடு மருந்துகொள்வீரோ வேந்தர்களே.**

**நல்மருந்து குளிசமிது**
**நாடன் முடிப்பெண்ணே**
**கைமருந்து வடுமொத்த**
**கரையு மோடிப் பெண்ணே.**
**கஞ்சிக்குக் காணம் கொண்டாட்டம்**
**கடைகெட்ட மூளிக்குக் கோபம் கொண்டாட்டம்**
**இஞ்சிக்கு ஏலம் கொண்டாட்டம்**
**எலுமிச்சம் பழத்துக்கு புளிப்பு கொண்டாட்டம்.**

**ஆனந்தத் தேனை, அருந்தினால் போல கீதன்**
**ஆனந்தம் தப்பாது வரும், கண்டத்தில் தேனிந்**
**துப்பும் சுக்கும் திப்பிலியும் போசன குடாரியும் இவ்**
**வஞ்சுக்கு எப்படியுமாம்**

மகிழ்ச்சியுள்ள தேனைக் குடித்ததுபோல இன்பமுள்ள பாட்டைக் கேட்டல் பாடலை இசைக்கும் தொண்டையில் இன்பம் தவறாது உண்டாகும். இவ்விதமான இசைக்கு ஏற்றவை. தேன், இந்துப்பு, சுக்கு, திப்பிலி, சீரகம் என்பன கலந்த மருத்துவமாகும். இவற்றை உண்ணத் தொண்டையில் ஏற்படும் பிணிகள் நீங்கும் என்பதாகும்.

**சுக்கடா கடுக்காயுடன் திப்பிலி**
**ஒக்கடா வாலுளுவை அரிசியும்**
**நக்கடா ஒரு மண்டலம் தேனுடன்**
**அக்கடா குரல் ஆரியம் பாடுமே.**

– (தனிப்பாடல்)

சுக்கு, கடுக்காய், திப்பிலி, வாளுலுவை அரிசி இவற்றைப் பொடி செய்து தேனுடன் 48 நாட்கள் உண்ணக் குரல் சிறப்பாக இருக்கும். இசை வல்லுநருக்கு இம் மருந்து பெரிதும் பயன்படும்.

**காடை நரம்பெடுத்துக்**
**காது வாரிச் சிக்கெடுத்து**
**பூவ நரம்பெடுத்து**
**ஊத்துகிறேனே உரமருந்தை**
**நொச்சித் தழைஒடச்சி**
**நசுக்கி நல்லாவேது புடிச்சி**
**குங்குமப்பூ கொழுந்தரைச்சு**
**குளுமையான பத்தரைச்சு**
**போட்டாப் போதுண்டி – குறத்திப்**
**போட்டா போதுண்டி**
**துளசித் தண்ணி தெளிச்சுத்**

**தும்பைப்பூ சாறு குடிச்சு**
**மிளகுத் தண்ணி நீ குடிச்சு**
**மிளகரைச்சு நான்குடுக்க**
**குள்ளநரி, கறி சமைக்க**
**குளிரெல்லாம் விட்டுப் போகும்**
**கண்டங் கத்தரி இலை**
**கருஞ் செம்பைப்பூ**
**கலந்தரைச்சு நான்குடுக்க**
**கண்டத்திப்பிலி குச்சிவெட்டி**
**கருஞ்சீரகம் சேர்த்தரைச்சு**
**இலவங்கப் பட்டை வெட்டி**
**லேகியங்கள் பண்ணித் தாரேன்.**

இதில் உர மருந்து, வேது, பற்று, குடிநீர், லேகியம் போன்ற சித்த மருந்துகள் கூறப்பட்டுள்ளன. நொச்சி, குங்குமப்பூ, துளசி, தும்பைப்பூ. மிளகு, கண்டங்கத்திரி, கரும் செம்மைப்பூ, கண்டத்திப்பிலி, கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை என்ற கடைச்சரக்குகள் இதில் வருகின்றன.

குரல்ஒலி நன்கு இருக்க "மொழியும், மதுரம் சீரகமும், முத்தம், ஏலம், பத்திரிக்காய்...கிளி சேர் மொழியாய் வராகனெடை" என்று மருத்துவம் கூறப்படுகின்றது. அதிமதுரம், சீரகம், முத்தக் காசு, ஏலக்காய், சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு, 1 வராகன் எடை எடுத்துக் கொண்டு மருந்து செய்தல் வேண்டும். மேலும் இசையைப் பற்றிப் "பண்தொட்டு, மென்மொழியாய், இலை பறித்துத் தின் பீரேல், பாறுசுட்டைதலை கற்றைக் குழல் கட்டலாமே" "பந்தணிக்குழலாய் கேளாய், பைத்திய வாதந்தானே" வெறி அழல் நோயின் இயல்பு பற்றிக் கூறவந்தவர்" பாதிநேரம் அசைந்துவரும், பாடி, ஓடி எழுந்திருக்கும், பணிந் தெழுந்து பாடும், மதி தப்பியும்" என்பார். மிடற்றில் உண்டாகும் நோய் பற்றி"ச் சாதகமாம், கண்ட சேத்துமம் அஞ்சும், இருமலுமாய் வேர்வை உண்டாய் மெய் கணக்குமன்றே". இதில் உள்ளவரிகளில் இலக்கிய இன்பத்தைத் துய்க்கலாம். ஐவகைத் திணைக்குரிய பண்ணும், திறமுமாக என்ற

இசைக்கான, நோய்க்குரிய இலக்கணமாக உடல் பருத்து, வியர்வை, இருமல் என்பன. ஐந்து வகையான கபத்தால் ஏற்பட்டதைப் பார்த்து, எனப் பொருள்படும். சாதனம் என்ற சொல் உடலையும், சாதகம் என்ற சொல் இசைப் பயிற்சியையும் கண்டம் என்பது மிடற்றையும், அஞ்சும் சேத்துமம்" என்பது – 5வகைத் திணைக்குரிய பண்களையும் குறிப்பால் உணர்த்தும். இதுபோன்றே "காமே, கறுத்த குயிலாளே கலந்து தோடம் இதே" என்று தாழ் குரலைப் பற்றி வருகின்றது. தேன் வண்டின் ஒலிக்கு, குரல் ஒலி ஒப்பிடப்பட்டுள்ளது. "கன்னியரே, தேனியாம், தும்பியாலும், கடிந்திடவும், செய்த இதுபோன்றே முத்தமிழைப் பற்றி" "முத்தமிட்டுரைக்கு மன்னர், மூடன் என் வாய்ச் சொற்கொளல்" இயல், இசை, நாடகம் என்ற மூவகையான தமிழை, அரசர்கள் செவிமடுக்க, நான் அறிவற்ற சொற்களை வாயால் உரைக்க என்று தேரன் தன்னை அவையடக்கமாய் கூறுகின்றார்.

இதுபோன்றே பாடலின் இனிமையைக் கூறுமிடத்து "ஆனந்தத் தேனை அருந்தினால் போல், கீதன் ஆனந்தம், தப்பாது வரும் கண்டத்தில் பாடலை இசைக்கும் பாடகனின் குரல்ஒலி நுகருவோனுக்கு, தேனை உண்டது போன்ற இன்பத்தைத் தரும். பஞ்சரத்தினம் 500 என்ற சித்த மருத்துவ நூலில் "குளகமாகவும் பாடிய எந்நூல் எலாம், அளகமாகவும் காண்பார்காண்". "ஏட்டைப் படித்து இட்டம்போல் படித்து, இழிவானவர்கள் ஆண்டே" அகத்தியர் கரிசல் 300 என்ற நூலில் "வசனம், சகுனம், வயித்திப்பேர் இசையும் கருமங்கட் கெல்லாம், வசையாகும்" என்று வந்துள்ளது.

உரையாடல், சகுனம், மருத்துவம் என்பன செய்வாருக்கு இணக்கமாக உள்ளது. அகத்தியரின் நூல்களாக, மடக்கு, யமகம், பதுமபந்தம், அட்ட நாகபந்தம், இரத பந்தம், கோமூத்திரி, சுழிக்குளம், திரிபங்கி, காதைக் கரப்பு, மாத்திரச் சுருக்கம், பிரிதுபடு பாட்டு, சித்திரக் கவிகள் என்பன கூறப்பட்டுள்ளன. இதில் பிறிது படுபாட்டு என்ற நூல் இசை நூலாதல் கூடும்.

**இசை இராகங்களும் விளைவுகளும்**

நீலாம்பரி இராகம் இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவும். இன்சாம்னியா எனப்படும் தூக்கமின்மை வியாதிக்கு நீலாம்பரி இராகத்தில் உள்ள பாடல்கள் அருமருந்தாகும். ஸ்வாதம்பரி இராகம் அனைத்து நோயையும் தீர்க்கவல்ல சர்வரோக நிவாரணி. ஞாபகமறதிக்கு ரேவதி இராகம் மெல்ல மெல்ல குணமாக்கும் மருத்துவம் தொடங்குகிறது. முதல் உலகப் போருக்குப்பின் அமெரிக்க மருத்துவ மனைகளில் போர்க் கைதிகளும் இசை மருத்துவம் வலிகளைக் குறைக்கப் பயன்பட்டது. இசை மூலம் ஏற்படும் மனோதத்துவ, உடலியியல் மற்றும் உணர்வியல் விளைவுகள் அறியப்பட்டது. 1998இல் தேசிய இசை மருத்துவக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது அமெரிக்கன் இசை மருத்துவக் கழகம் என அழைக்கப்படுகிறது. இக்கழகம் இசை மருத்துவம் வளர்ச்சி பெற இசை மருத்துவ ஆராய்ச்சி மற்றும் இசை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கான கொள்கை மற்றும் பாடத்திட்டங்களை வகுத்துச் செயல்பட்டு வருகிறது. இசை மருத்துவத்தில் 68 வகையான பட்ட வகுப்புகளையும் பல்வேறு பகுதிகளில் நடத்தி வருகிறது.

இசை உடலில் எவ்வாறு மருத்துவ விளைவுகளை ஏற்படுத்துகிறது.

குறிப்பிட்ட நோய் தீரக் கூறப்படும் இசை இராகத்தினைத் தொடர்ந்து கேட்பதன் மூலம், ஒலியலைகளின் அதிர்வுகள் மின்னல்களாக (Vibrational Network) ஏற்படுத்தப்படுகிறது.

தசை, நரம்புகள் மற்றும் உடலில் உள்ள ஆதாரச் சக்கரங்களைத் தூண்டுதல்கள் ஏற்படுத்துப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட திசுக்களுக்கு இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது.

மனித சக்தி மண்டலத்திலிருந்து – சக்தி இசை இராகங்கள் மூலம் ஊட்டப்படுகிறது. இது நடுநரம்பு மண்டலத்தில் விளைவுகளை ஏற்படுத்துகிறது.

| நோய்நிலை | இசை மருத்துவத்தின் பயன்கள் |
|---|---|
| கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்ட நோயளிகளின் மூளை மற்றும் நரம்பியல் குறைபாடுகள் | (Music Resonance Therapy)மூலம் நரம்பியல் திசுக்களின் ஆக்ஸிஜனேற்ற விளைவுகளைக் குறைக்கிறது. |
| கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மன அழுத்தம் | (ACTH, Control)-ஹார்மோன்கள் குறைக்கப்படுவதால் மன அழுத்தம் குறைகிறது. |
| கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்ட குழந்தை நோயாளிகளின் காது கேளா நிலை | இவர்களுக்குச் சிகிச்சைகள் மேற்கொள்ளும்போது மன அமைதிக்காகக் கொடுக்கப்பெறும் மருந்துகளின் அளவு குறைந்தது. |
| கதிரியக்கத்தால் கேட்கும் திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகள் | இவர்கள் நோய்த் தடுப்பாற்றல் அதிகரிக்கிறது. |
| மூளை இரத்தக் குழாய்களில் ஏற்படும் கொழுப்புப் படிவு | மனநிலை மற்றும் உடலியங்கியல் ரீதியாக ஏற்படும் மன அழுத்தம் நிலையைப் போக்குகிறது. |
| தலைவலி | இசை மருத்துவத்தின் மூலம் மூளை இரத்தக் குழாய்களில் ஏற்படும் நரம்புச் சோர்வு நீங்குகிறது. சர்க்கரை நோயுள்ள குழந்தைகளின் தலைவலியைக் குறைக்கிறது. வயதானவர்களுக்கு ஏற்படும் |

| | |
|---|---|
| | தலைவலியைப் போக்குகிறது. கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அடிக்கடி ஏற்படும் தலைவலியைக் குறைக்கிறது. |
| ஒற்றைத் தலைவலி | ஒற்றைத் தலைவலிக்கு எடுத்துக் கொள்ளப்படும் மருந்தின் அளவு குறைகிறது. ஒற்றைத் தலைவலி நோயாளிகளுக்கு நீண்ட ஓய்வைத் தருகிறது. தூக்கமின்மைக் கோளாறுகளைப் போக்குகிறது. |
| வலிகள் | பிரசவ அறுவை சிகிச்சையின் போது கொடுக்கப்படும் வலி நிவாரண மருந்துகளின் செயல்திறன் அதிகரிக்கிறது. பிரசவத்தின்போது ஏற்படும் வலியைக் குறைக்கிறது. |
| பிரசவிக்கும்போதே உணர்வு ரீதியான மன அழுத்தம் மற்றும் உடல் ரீதியான நலக்குறைவு | வழக்கமாகக் கொடுக்கப்படும் மருந்துகளுடன் சேர்த்து இசை மருத்துவம் நல்ல பலனைத் தருகிறது. |
| நீரிழிவு நோய் | இன்சுலின் செயல்திறனை நிலைப்படுத்துகிறது. |

| | |
|---|---|
| | தாகமேற்படுவதைக் குறைக்கிறது. தூக்கமின்மையைப் போக்குகிறது. தலைவலியைப் போக்குகிறது. |
| தோல்நோய்கள் | சொரியாசிஸ் மற்றும் இதர தோல் நோயாளிகளின் இரத்த அழுத்தம் குறைகிறது. இதயத் துடிப்பு குறைகிறது. தோலில் ஏற்படும் அரிப்பு குறைகிறது. சொரியாசிஸ் நோயின் அளவு குறைகிறது. |
| வயோதிகம் | இசை மருத்துவத்தின் பலன் வயோதிகர்களின் நினைவாற்றல் மேம்படுகிறது. பதட்டம் தலைவலி குறைகிறது. இதயத் துடிப்பு குறைகிறது. உடல் மற்றும் உடலியங்கியல் ரீதியான மன அழுத்தம் நீக்கப்படுகிறது. கவனம் அதிகரிக்கிறது. |

## நோய் தீர்க்கும் இராகங்கள்

| **இராகங்கள்** | | **விளைவுகள்** |
|---|---|---|
| காஃபி இராகம் | – | ஆழ்ந்த மற்றும் குளிர்ந்த மனோநிலை |

| | | |
|---|---|---|
| பூர்ய தனஸ்ரீ | - | இனிய ரம்மியமான மனோநிலை |
| தர்வாரி | - | மன அழுத்தம் குறைதல் |
| பூபாலி மற்றும் தோடி | - | உயர் இரத்த அழுத்த நோயளிகளுக்கு இரத்த அழுத்தம் குறைகிறது. |
| மால்கோன் அஸாவேரி | - | குறைந்த இரத்த அழுத்தம் நோயாளிகளுக்கு |
| சந்திரக் கோன் | - | இதய நோயாளிகளுக்கு |
| பிறாக் பஹார் | - | இன்சொமினா எனப்படும் உறக்கமின்மை நோயாளிகளுக்கு |
| ஆஹிர் பைரவி | - | செரியாமை, கீல்வாயு, இரத்தக்கொதிப்பு |
| அசாவேரி | - | தன்னம்பிக்கையூட்டும் |
| பாகேஸ்வரி | - | உறக்கமின்மை |
| பைரவி | - | கீல் வாயு, பீனிசம் |
| பீம்பளாஸ் | - | எதிர்பார்ப்பு, இரத்தக்கொதிப்பு |
| பிருந்தாவன சாரங்கி | - | மனத்தளர்ச்சி |
| சந்திரகான்ஸ் | - | பசியின்மை |
| தர்பாரி | - | உறக்கமுண்டாக்கும் |
| தர்பாரி கானடா | - | தலைவலி, சுவாசகாசம் |
| தீபக் | - | செரியாமை, பசியின்மை, குன்மம், பித்தப்பை கற்கள் |
| ஹிந்தோளம் | - | கழுத்துவலி, முதுகுவலி, இரத்தக் கொதிப்பு |
| ஜவன்பூரி | - | வயிற்று உப்புசம், பேதி, மலக்கட்டு |
| காபி | - | உறக்க மாறுபாடுகள் |
| கவுசி கானடா | - | இரத்தக் கொதிப்பு, ஜலதோஷம் |
| கேதார் | - | தலைவலி, ஜலதோஷம், இருமல், சுவாசகாசம் |

| | | |
|---|---|---|
| மதுவந்தி | - | மூலம் |
| மல்குணாஸ் | - | வயிற்று உப்புசம் |
| மல்ஹர் | - | சுவாசகாசம் |
| மார்வா | - | குன்மம் |
| நட்டபைரவி | - | செரியாமை, கீல்வாயு வயிற்றுவலி |
| பூர்ய | - | வயிற்றுவலி, இரத்தக் கொதிப்பு |
| ஸ்ரீராகம் | - | பசியின்மை, ஜலதோஷம், இருமல், சுவாசகாசம் |
| சுத்தசாரங்கி | - | பசியின்மை, பித்தப்பை கற்கள் |
| ஷியாம் கல்யாணி | - | இருமல், சுவாசகாசம் |
| சோகானி | - | தலைவலி |
| யமன் | - | கீல்வாயு |

மேலை நாடுகளில் தற்போது வணிக ரீதியில் சில நோய் நிலைகளில் பயன்படுத்த இசை மருத்துவ ஒலி நாடாக்கள் கிடைக்கின்றன. இவை உடல் மற்றும் உணர்வு நிலைகளிடையே ஓர் இணைப்பை உருவாக்கும் வகையில் பயன்படுகிறது எனக் கூறப்படுகிறது. குறிப்பிட்ட நோய் குறியீடுகளுக்கெனச் சில வகை இசை ஒலி நாடாக்கள் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக,

| நோய்நிலைகளுக்கான இசை மருத்துவ ஒலி நாடாக்கள் | தீர்க்கப்படும் நோய்க் குறியீடுகள் |
|---|---|
| மன அழுத்த நோய்களுக்கான ஒலிநாடாக்கள் | மன அழுத்தம், வலி, உறக்கமின்மை, புகைத்தல், போதைக்கு அடிமையாதல், இதய நோய், கவலை. |

| | |
|---|---|
| பருத்த உடல் | அதிக உடல் எடை,<br>பசியின்மை, தாழ்வு<br>மனப்பான்மை |
| குழந்தைகளுக்கு | மன அழுத்தம், கோபம், பயம்,<br>வருத்தம்<br>அதீத நடவடிக்கைகள்,<br>கவனமின்மை |
| கருவுற்ற மகளிருக்கு | மன அழுத்தம்,<br>உறக்கமின்மை, கவலை,<br>பிரசவவலி,<br>குடலிறக்கம், பாலூட்டல் |
| புற்றுநோய் | புற்றுநோய், கோபம் |
| எயிட்ஸ் | எயிட்ஸ், தொற்றுநோய்கள்,<br>பயம், சுயமரியாதையின்மை,<br>நோய்த்தடுப்பாற்றல் குறைவு. |

எயிட்ஸ் நோயினைத் தீர்ப்பதற்கான மேற்கத்திய இசை வடிவினை ஒரு குறிப்பிட்ட இசை வடிவம் ஒலி நாடாவாகக் கிடைக்கிறது. இது எய்ட்ஸ் நோயினைக் கட்டுப்படுத்தும்போது கொடுக்கப்படும் மருந்துகளுடன் இணையான உணர்வு ரீதியான உற்சாகத்தை ஏற்படுத்தும் துணை மருத்துவமாகப் பயன்படுத்தப்படுகிறது. இசையானது உணர்வு மற்றும் உடல் பகுதிகளைத் தொடக் கூடியது. அதாவது உணர்வு மற்றும் உடல் ஆகிய இரு பகுதிகளும் ஒரே நேரத்தில் விளைவினை ஏற்படுத்தும்.

# 14. பாடகர்கள், பேச்சாளர்களுக்குச் சில ஆலோசனைகள்

1. உங்கள் குரல் வளத்தைப் பாதுகாக்கக் குரல்வளையின் இயல்பு நிலையைப் பாதுகாக்க வேண்டும்.

2. உடலின் நீர்ச்சத்துக் குறையாமல் பாதுகாக்க வேண்டும். தினமும் 1.5 லிட்டர் தண்ணீர் இதற்குப் பருக வேண்டும். குரல்வளை உலர்ந்த நிலையில் பாடுவதும் பேசுவதும் சிரமம்.

3. பாடகர்கள் பேச்சாளர்கள் அவ்வப்போது போதை தராத குடிநீர்களில் ஒன்றைப் பருகி வரலாம். இதற்குச் சுக்கு, சித்தரத்தை, அதிமதுரம், வால்மிளகு, ஆடாதோடை வேர் இவற்றைத் தட்டிப்போட்டுக் குடிநீர் செய்து வடித்து இளம் சூட்டில் பருகலாம்.

4. "ஒக்கடா சுக்கு வால்மிளகு பொடி செய்து கின்னாரமாகும் குரல்" என்பது பழமொழி. சுக்கையும் வால்மிளகையும் சரியளவில் இடித்துத் தூள் செய்து சலித்து வைத்துக் கொண்டு தேனில் 1 தேக்கரண்டி கலந்து தேவையானபோது சாப்பிடலாம். இதனால் குரல் வளம் செம்மையாகும்.

5. உச்ச ஸ்தாயியில் பேசுபவர் பாடுபவர்களுக்குத் தொண்டை கட்டிவிடும். இது மாற முன் கழுத்தில் தைலம் ஏதேனும் தடவி ஒற்றமிடலாம். வெந்நீரில் உப்புப்போட்டு வாய்க் கொப்பளிக்கலாம்.

6. தினமும் கண்ணாடியில் தங்கள் குரல்வளையைப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

7. அதிக சளி, மூக்கடைப்பு, தொண்டைவலி, சுரம் இருக்கும்போது பாடுவதும் மேடைப் பேச்சும் தவிர்க்க வேண்டும்.

8. அதிக காரம், புளிப்பு அதிக குளிர்ச்சி வாயுப்பொருட்கள் இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

9. தம் குடும்ப மருத்துவரிடம் மட்டுமே எவ்வகை உடல் பாதிப்பாக இருந்தாலும் ஆலோசிக்க வேண்டும். சில சமயம் பிற மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகள் உடலுக்கு ஒத்துக் கொள்ளாமல் குரல் ஒலியே போய்விடக்கூடும்.

10. அதிக சத்தமுள்ள இடத்தில் அதை விடச் சத்தமாகப் பாடுவதும் பேசுவதும் கூடாது.

11. எப்போதும் உயர்ந்த ஒலியில் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

12. சிலர் பேசுவற்கும் பாடுவதற்கும் வெவ்வேறு குரலொலியை உபயோகப்படுத்துவார்கள். இதனால் குரல்வளை அடிக்கடி பாதிக்கும்.

13. புகை, மது இவற்றை அறவே தவிருங்கள்.

14. பேசும்போதே சத்தம் வராமல் குரல் அடைத்துக் கொள்ளுதல், குரல் உயர்த்திப் பாடும் போது பிசிர் தட்டுதல், தொண்டை கரகரப்பு, செருமல், மூச்சு வாங்கல், குரல் சோர்வு, சிரமப்பட்டுப் பேசுதல் இவற்றில் எது இருந்தாலும் உடனடியாக உரிய மருத்துவரைப் பாருங்கள்.

15. தேவையான அளவு உறங்க வேண்டும். உடல் சோர்வு, மனச் சோர்வு குரல் ஒலியைப் பாதிக்கும்.

இசைக் கலைஞர்களுக்கு கேடு விளைவிப்பன:

**நகை, புகை, எள், காடி, காமம், நறவு**
**பகை எனச் சொன்னார்கள் பார்மேல் – முகை மலரும்**
**கூந்தல் இளம் பிடி யே! இசைக்கு ஊறு செயும்**
**ஆந்தனையும் காப்ப தறிவு.** – (வெண்பா)

1. அதிகச் சிரிப்பு
2. புகையிடை வாழ்தல்
3. எள் பண்டங்கள் பயன்படுத்தல்
4. காடி (மயக்க மது வகை) குடித்தல்
5. உடல் காம சுகம் பெறல்
6. நறவு – கடும்புளிப்புக் கள் குடித்தல்

இசைக் கலைஞர்களுக்கு இவை கேடு விளைப்பன. ஆகையால் இவைகளை முடிந்த மட்டும் பயன்படுத்தாமல் இருப்பதே அறிவுள்ள செயல்.

நன்மை தருபவை

**திப்பிலி, தேன்மிளகு, சுக்கினோ, டிம்பூறா**
**தப்பிலா ஆன்பால் தலைக்கடை – ஒப்பிலா**
**வெந்நீரும், வெண்ணெய், மெய்சாந்தம் பூசலிவை**
**மன்னூழி வாழும் மகிழ்ந்து.** – (வெண்பா)

கண்டத்திப்பிலி, தேன், மிளகு, (வால்மிளகு, சுக்கு, இம்பூறா, பசும்பால், இவைகளைத் தேவையறிந்து உட்கொள்வதும் தலைக்கு ஆடை (முண்டாசு போல்) அணிவதும் வெண்ணெய், வெந்நீர் கலந்து குடிப்பதும் உடலுக்குச் சந்தனம் பூசுவதும் இசைவாணர்கள் செய்தால் நீண்ட காலம் அவர்கள் கலைத்தொண்டு செய்து வாழ்தலாகும்.

**பாடகம், தண்டை யிட்டுப் பச்சையும் புனுகும் பூசி**
**சூடவே பனையின் தோட்டை துரிசறச் சாயம் ஏற்றி**

1. பாடகம், தண்டை என்ற பாத அணிகள் பூண்டு
2. பச்சைக் கற்பூரம், புனுகு (போன்ற மணங்கள்) உடலில் பூசி
3. பனையின் வெள்ளை ஓலைகளை நன்கு சுத்தம் செய்து பலவண்ணச் சாயங்களை அவைக்கு ஏற்றி அவைகளால் மாலைகள், அணிகள் தயாரித்துச் சூடிக்கொண்டு (இவை பாடினியர், கூத்தாடும் பெண்கள் அலங்கரிப்பு)

ஒருவரின் குரலொலி மாற்றத்திற்குப் பலவிதக் காரணங்கள் உண்டு. தொண்டையில் உண்டாகும் தொற்று, சைனஸ், எதிரொலித்தல், வயது, எடுபடுதல், இரசாயனப் பொருட்கள் உள் செல்லுதல், புகை, தொண்டை, வாய், நாக்கு புற்று, நரம்புத் தளர்ச்சி, நாளமில்லாச் சுரப்புகளின் மாறுபாடு போன்றவை முக்கியக் காரணங்களாகும்.

தொழில் முறையில் அதிகம் குரலை உபயோகப்படுத்தும் பாடகர்கள், மேடைப் பேச்சாளர்கள், ஆசிரியர்கள், விற்பனையாளர்கள், நடிகர்கள், பேச்சு, பாட்டு, நடனம் சொல்லித் தருபவர்கள் தங்கள் குரல் வளத்தை கவனமுடன் பாதுகாக்க வேண்டும்.

# முழவுரை

இசையை மருத்துவமாகக் கொண்டால் அது உடல், உள்ளம், செயல், கல்வி போன்ற பெரும் பிரிவில் செயல்படும். இசைக்குரிய பாடல்களை எழுதுதல், விவாதித்தல், பாடுதல், ஆடுதல் என்பன அதன் பகுதிகளாகும். இசை மருத்துவம் அகநோயாளர்களுக்கு உரியது, புற நோயாளர்களுக்கு உரியது என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அக மருத்துவத்தில் உள்ள நோயாளர்களின் வலியையும் வேதனையையும் குறைக்கும். புற நோயாளர்களுக்கு என்ற நிலையில் நோய் வராமல் தடுக்க, நினைவாற்றலை அதிகரிக்க, பிறக்கப் போகும் குழந்தையை அறிவாளியாக்க முதியவர்களின் உள நோய், உடல் நோய் தீர்க்க உடல் அசைவற்ற நோயாளியின் உடல் அசைவிற்கு உதவ எனப் பலவிதத்தில் செயல்படும். இசையைக் கேட்பதற்குரியவர்கள் இசை தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. இசையை நம்முன்னோர்கள் மருத்துவத்தைச் சார்ந்த ஒரு துறையாகப் பிரித்து வைக்கவில்லை. நம் வாழ்க்கையோடு இயைந்த ஒரு கலையாக உணர்ந்தார்கள். பக்தியை நோக்கியே இசை அமைந்திருந்தது. நம்முடைய உணர்வுகளை எளிதில் வெளிக் காண்பிக்கவும் அவற்றைச் சாந்தப்படுத்திக் கொள்ளவும் இசை உதவியது. அமைதியான இசை அனைவருக்கும் உகந்தது. ஆர்ப்பாட்டமான இசை அவலத்தை உண்டாக்குவது. தாலாட்டு முதல் ஒப்பாரி வரை இசை நம் வாழ்வுடன் இயைந்துள்ளது. சித்தர்களின் நூல்களில் இசை, இசைக்கருவிகள், அதன் தன்மைகள் கூறப்பட்டுள்ளன. இசையின் நோய் தீர்க்கும் தன்மை குறித்த ஆய்வுகள் இன்னும் அதிக அளவில் நடைபெற வேண்டும். மருந்தில்லா உலகத்திற்கு மக்களைக் கொண்டு செல்லவேண்டும்.

தாலாட்டு முதல் இரங்கல்வரை தமிழர்களின் வாழ்வோடு ஒன்றியது இசையாகும். இதன் நுணுக்கங்களைப் பற்றிப் பல சித்தர்கள் ஏட்டில் எழுதிவைத்துள்ளார்கள். சென்ற நூற்றாண்டில் சித்தர்களின் பாடல்களில் பல அரங்குகளில் துக்கடா என்ற பெயரில் பாடப்பட்டன.

இன்றும் இந்நிலையே நீடிக்கிறது. இதைப் போக்க யாரும் முயற்சி செய்யவில்லை. பெரிதும் முயன்று சித்த மருத்துவமும் தமிழிசையும் என்ற தலைப்பில் இம்முயற்சியைத் துவக்கியுள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. சித்தர்களின் இலக்கியங்களில் பல்வேறு வகையான இசைக் கருவிகள் பாடல்களில் சொற்கட்டுகள், இசை நுணுக்கம் என்பன உள்ளன. இவைகளைப் பற்றிப் பின்வரும் காலங்களில் ஆய்வு செய்தல் அவசியமாகும்.

இன்றைய காலக்கட்டத்தில் இசையின் மூலம் பல நோய்களை நீக்கமுடியும் என்பதைக் கண்டறிந்துள்ளார்கள். ஆயினும் இக் கொள்கையை முன்னரே தமிழர்கள் தெரிந்திருந்தார்கள். மனிதர்களே அன்றி ஏனைய விலங்குகளும், உயிரினங்களும் இசைக்குப் பணியும் என்பதைத் தமிழிலக்கியங்களின் வழியாகவும் வரலாற்றுச் சான்றுகளின் மூலமாகவும் அறிய முடிகிறது. தேரையரின் மருத்துவ பாரதம் என்ற நூல் இசை நாடகமாக உள்ளது. இதற்கு இசை வகுக்கப்பட்டு நடிக்கப்பட்டது எனலாம். வேறு சித்தர்களின் பாடல்களுக்கு இசையானது அமைக்கப்பட்டது. இன்று வழக்கற்றுப் போய்விட்டது. இந்நிலை தொடரா வண்ணம் இருக்க அரங்குகளில் சித்தர்களின் பாடல்களை இசையுடன் பாடுதல் வேண்டும். சித்தர்கள் மருத்துவம் மட்டுமின்றி இலக்கியம், கணிதம், சோதிடம், சிற்பம் போன்ற துறைகளிலும் வல்லவர்கள். அதுபோன்றே இசைத் துறையிலும் வல்லவர்களாக இருந்தனர் என்பதற்குப் பல்வேறு எடுத்துக்காட்டுக்களைக் கொண்டு அறியமுடிகிறது.

# துணை நூல்கள்


1. திராவிடர் இசை – ப. தண்டபாணி.
2. பண் முதலும் பாங்கார் திறமும் – க. அப்பாராசன்
3. சிரோத்தின நடன காண்டம் 1500– எஸ்.பி. இராமச்சந்திரன். தாமரை, 1997.
4. நந்தீசர் நிகண்டு 300 – 3ஆம் பதிப்பு – கு. இராமசாமிக்கோன், பக்.32, ஸ்ரீ இராமச்சந்திர விலாச அச்சகம், மதுரை, 1965.
5. திருவள்ளுவர் பஞ்சரத்தினம் 500 – தேவராச நாயக்கர், சென்னை – 1968.
6. தேரையார் வைத்தியம் 1000 – எஸ்.பி. இராமச்சந்திரன், பக்.23, தாமரை நூலகம்.
8. தேரையர் வைத்திய காவியம் 1500 – எஸ்.பி. இராமச்சந்திரன், தாமரை, 1993.
9. நஞ்சுநூல் – மரு. சி. ஏஸ். முருகேசன முதலியார்.
10. திருவள்ளுவர் ஞானவெட்டி 1500– எஸ்.பி.இராமச்சந்திரன், தாமரை, 1999.
11. வைத்தியத் திருப்புகழ், மருத்தவத் தனிப்பாடல்கள், பழனி திருக்கோயில் வெளியீடு, 1976.
12. இராமதேவர் சூத்திரம், சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர்.
13. யூகி வாதகாவியம், ந. சேதுரகுநாதன், மதுரை.
14. கபிலக்கல் – குடவாயில் பாலசுப்பிரமணியன். பக்.87, ஸ்ரீமகேந்திரா கிராப்பிக்ஸ், 2004.
15. அகத்தியர் கௌமதி நூல் 400, இராம. குருசாமிக்கோனார் பாடல் 31.
16. யூகி வாதவைத்திய உலா, பி. சேதுரகுநாதன்.
17. அகத்தியர் ஞானகாவியம் 1000, எஸ்.பி. இராமச்சந்திரன், தாமரை, 1997.
18. அவையடக்கப் பாடல்கள், எஸ். சௌந்திரபாண்டியன், பக்.262, ஸ்டார் பிரசுரம்.
19. சங்கீத மும்மணிகள் – உ.வே.சா. நூலகம், 1987.
20. தமிழக இசை மரபில் தாளக் கலைக்கருவூலம், பக்கிரிசாமி, பாரதி, பக்.6.
21. சங்கீத ஒலி நூல் – பக். 81 அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

23. காசிவிசுவநாத முதலியார், பிரம்மசமாச நாடகம், இசை நாடகம்.

24. அதிசயப்பிறவி, வ. ரா. சிட்டி, பெ.சு. மணியய, பக்.269, விசயா பதிப்பகம், மணி ஆப் செட், சென்னை, 1999.

25. சோழர்கால ஆடல்கலை, இரா. கலைக் கோவன், அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ், 2003.

26. சொல் மாலை, இரா. நாகசாமி, பக். 253.

27. பரத சங்கிரகம், வெள்ளை வாரணனார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1954.

28. சடங்குப் பாடல்கள், கே.ஏ. சோதிராணி, பக்.27, சென்னைப் பல்கலைக்கழகம்.

29. யாழும் இசையும், அ. இராகவன், பக்.269, கலை நூற் பதிப்பகம், அருள் அச்சகம், 1971.

30. பாணர் கைவழி எனப்படும் யாழ்நூல், ஆ.வரகுணபாண்டியன், சை & சி. கழகம், அப்பர் அச்சகம், 1950.

31. தமிழில் கீர்த்தனை இலக்கியங்கள், எஸ். சௌந்திரபாண்டியன், பக்.94. ஜீவோதயம் அச்சகம், சென்னை. 1987.

32. யோகஞான சாத்திரத்திரட்டு, 9ஆம் பாகம் 75, தாமரை நூலகம், வள்ளல் பாரி அச்சகம், சென்னை, 1995.

33. பஞ்ச மரபு, பக். 60, தெய்வசிகாமணிக்கவுண்டர், சக்தி அறநிலைய வெளியீடு, ஜெமினி பிரஸ், குடந்தை, 1973.

34. வைணவ உரைவளம், பக். 264, தெ. ஞானசுந்தரம், மாருதி பிரஸ், சென்னை, 1989.

35. யோகஞான சாத்திரத் திரட்டு, 9ஆம் பாகம், பக்.3, கருவூரார் சிவஞான போதம், தாமரை நூலகம், கிரியேட்டிவ் ஆப்செட், 1998.

36. தினமணி மருத்துவ மலர்- கட்டுரை: டாக்டர் மோகன் காமேஸ்வரன்.

37. வாழ்வில் களஞ்சியம், 3ஆம் தொகுதி, பக்.814, த.ப.க. 1987.

38. வைத்திய சிரோரத்தின நடனகாண்டம் 1500, த. துரைசாமி முதலியாரவர்கள், புவனேஸ்வரி அச்சுக்கூடம், சென்னை, 1927.

39. யோகஞான சாத்திரத்திரட்டு, 2ம் பாகம், 134 தாமரை நூலகம், வள்ளல் பாரி அச்சகம், சென்னை, 1995.

40. சித்தர்கள் 49 பேரின் பெரிய ஞானக்கோவை, தாமரை நூலகம், அலங்கார் பிரஸ், சென்னை, 1995.

41. தமிழிலக்கிய வரலாறு, மு. அருணாசலம், மாணிக்கம் பிரஸ், சென்னை, 1970.

42. சிந்துப் பாடல்களில் யாப்பிலக்கணம், இரா. திருமுருகன், கம்ப்யூட் டெக்சட் தொழிலகம், புதுச்சேரி, 1993.

43. மருத்துவ பாரதம், மறுபதிப்பு ஆர். தியாகராசன், மேகலா அச்சகம், சென்னை, 1975.

44. திரிகூட இராசப்பக் கவிராயர் ஓர் இலக்கிய நோக்கு, பக்.108, குமார பத்மநாபன், வள்ளல் பாரி அச்சகம், சென்னை,1985.

45. யோக ஞான சாத்திரத் திரட்டு – முதல் பாகம் – சுப்பிரமணியர் சுத்தஞானம் 100, பக்கம் 161. தாமரை நூலகம், சென்னை, 1997.

46. யோக ஞான சாத்திரத் திரட்டு, 4ஆம் பாகம், சுப்பிரமணியர் தண்டகம், பக்.22, தாமரை நூலகம், சென்னை, 1997.

47. யோக ஞான சாத்திரத்திரட்டு, 4ஆம் பாகம், மச்சமுனி தண்டகம் 97, தாமரை நூலகம், சென்னை.

48. யோக ஞான சாத்திரத் திரட்டு - 9ஆம் பாகம், கொங்கணர் வாதகற்ப சூத்திரம் 151, தாமரை நூலகம், சென்னை.

49. யோக ஞான சாத்திரத் திரட்டு, 4 ஆம் பாகம் மவுன சித்தர் பாடல் 246.

50. யோக ஞான சாத்திரத் திரட்டு, 9ஆம் பாகம், கொங்கனர் வாதகற்ப சூத்திரம், பக்.144, தாமரை நூலகம், சென்னை.

குதம்பைச் சித்தர் பாடல், பெரிய ஞானக் கோவை, பக். 252.

51. சிந்துப் பாடல்களில் யாப்பிலக்கணம், பக்.81, இரா. திருமுருகன், கம்ப்யூட் டெக்சைட் தொழிலகம், புதுச்சேரி, 1933.

52. பெரிய ஞானக்கோவை, இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை.

53. பெரிய ஞானக்கோவை, கடுவெளி சித்தர்பாடல், பக்.255.

54. பெரிய ஞானக்கோவை, பக்.323, கொங்கணர்வாலைக் கும்மி.

55. நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோவை 2, பக்.692, இந்தியத் தமிழ் நாட்டுப்புற இயல் கழகம், அண்ணாமலை நகர், 1987.

56. திருநெல்வேலிப் பகுதியில் சிறு தெய்வ வழிபாடு பக்கம், 87, கணபதிராமன், சிவன் கோவில் தெரு, தூத்துக்குடி.

57. மண்ணின் மணம், பக்.100, வே. சரோசா, விஜயா பிரிண்டர்ஸ், 1992.

58. வளர்தமிழ் அறிவியல், பக்.77, அனைத்திந்திய அறிவியல், தமிழ்க் கழகம், தஞ்சாவூர், 1994.

59. நாட்டார் வழக்காற்றியல், சில அடிப்படைகள் , தே. லூர்து, தூய சவேரியார் கல்லூரி , பாளையங்கோட்டை.

60. மேற்குத் தமிழ் நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு, பக். 256, செங்கோ. வரதராசன், பி.ஆர்.வி. பிரஸ். சென்னை, 1988.

61. நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும், பக்.245, கே.ஏ. குணசேகரன், 1992.

62. கொங்கு நாட்டுப்புற இலக்கியம், பக்.92, முனைவர் சு. சண்முகசுந்தரம், காவ்யா, 1992.

63. சமணர் நாட்டுப்புறப் பாடல்கள், பக்கம் 72, அசோக்குமார், பிரபா பதிப்பகம், காரைக்கால்.

64. நாட்டுப்புறப்பாடல்கள், பக்.47, க. சண்முகசுந்தரம், மணிவாசகர் பதிப்பகம், 1980.

65. Inscription No.250 of 1902, 599. VII.884.

66. தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், பக். 349, கா.மா. வேங்கடராமையா, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

67. தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கம், பக்.177, இரா. நாகசாமி, மக்கள் அச்சகம், சென்னை, 1979.

68. சிதம்பரம், பக்.70, வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், ஞானசம்பந்தர் பதிப்பகம், 1990.

69. நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும், பக்.245, கே.ஏ. குணசேகரன், 1992.

70. கொங்கு நாட்டுப்புற இலக்கியம், பக்.92, முனைவர் சு. சண்முகசுந்தரம், காவ்யா, 1992.

71. சமணர் நாட்டுப்புறப்பாடல்கள், பக். 72, அசோக்குமார், பிரபா பதிப்பகம், காரைக்கால்.

72. நாட்டுப்புறப்பாடல்கள், பக்.47, க.சண்முகசுந்தரம் - மணிவாசகர் பதிப்பகம், 1980.

73. மேற்குத் தமிழ்நாட்டுப் புறவியல் ஓர் ஆய்வு.

74. நாட்டுப்புறத் தெய்வங்கள், பக்.187, சு. சண்முக சுந்தரம், காவ்யா, 1999.

75. மங்கல இசை மன்னர்கள், பி.எம். சுந்தரம், பக்.36, இன்டாக்.

76. திருநெல்வேலிப் பகுதியில் சிறுதெய்வ வழிபாடு, 27, கணபதிராமன், சிவன்கோவில் தெரு, தூத்துக்குடி.

77. மகாபாரத சூடாமணி – உ.வே.சா. நூலகம், பக். 25.

78. மறவர் கதைப் பாடல்கள், ஞானத்தாய்.

79. நாட்டுப்புறக் காதல் பாடல்களும் அறப்பொருள் மரபுகளும், நா. இளங்கோ.

80. ஐந்து கதைப் பாடல்கள், சு. சண்முகசுந்தரம், காவ்யா பதிப்பகம், சென்னை.

81. (அரிச்சந்திரா – ஸ்ரீமுத்துகிருஷ்ண உபாத்தியாயர் இயற்றியது. நூல் பதிப்பாசிரியர், (பாயிரம் கொட்டம்பட்டி – கருப்பையா பாவலர்)

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
### சென்னை - 600 113

# அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |

---

**620 இசை மருத்துவம் 45.00**